




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:240 | 16-03-2026 | திங்கட்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

16.03.2026 பங்குனி 2
திங்கட்கிழமை

---

சூரிய உதயம் 6.21

---

**திதி:**
இன்று காலை 8.56 வரை துவாதசி பின்பு திரயோதசி.

---

**நட்சத்திரம்:**
இன்று அதிகாலை 5.13 வரை திருவோணம் பின்பு அவிட்டம்.

---

**யோகம் :**
இன்று காலை 8.53 வரை சிவம் பின்பு சித்தம்.

---

**கரணம்**
இன்று காலை 8.56 வரை தைதுலம் பின்பு இரவு 8.56 வரை கரசை பின்பு வணிசை.

---

**அமிர்தாதி யோகம் :**
இன்று அதிகாலை 5.13 வரை அமிர்த யோகம் பின்பு காலை 6.20 வரை யோகம் சரியில்லை பின்பு சித்த யோகம்.

---

**சந்திராஷ்டமம் :**
இன்று அதிகாலை 5.13 வரை திருவாதிரை பின்பு புனர்பூசம்.

---

**நல்ல நேரம்**
காலை 6.30 – 7.30.
மாலை 4.30 – 5.30.

---

**இராகு காலம்**
காலை 7.30 – 9.00.

---

**எமகண்டம்**
காலை 10.30 – 12.00.

---

**குளிகை**
பிற்பகல் 1.30 – 3.00.

---

இன்று சுபமுகூர்த்த நாள்

---

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# தமிழக சட்டப்பேரவைக்கு ஏப்.23ல் ஒரே கட்டமாக தேர்தல்

## மே.4ல் வாக்கு எண்ணிக்கை

**சென்னை, மார்ச் 16:**

தமிழக சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் 23 ம் தேதி ஒரே கட்டமாக நடைபெறுகிறது. மே 4-ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற்று, முடிவுகள் அறிவிக்கப்படும் என்று தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் டெல்லியில் அறிவித்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் தொடர்பாக தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் கூறியதாவது: தமிழகத்தில் மொத்தம் உள்ள 234 தொகுதிகளுக்கும் ஏப்ரல் 23-ம் தேதி ஒரே கட்டமாக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும். வாக்குகள் மே 4-ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

வேட்புமனு தாக்கல் மார்ச் 30-ம் தேதி தொடங்கி ஏப்ரல் 6-ம் தேதி வரை நடைபெறும். மனுக்கள் மீதான பரிசீலனை ஏப்.7-ம் தேதி நடைபெறும். மனுவை திரும்ப பெற ஏப்.9-ம் தேதி கடைசி நாள். புதுச்சேரியில் ஏப்ரல் 9ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும்.

தமிழகத்தில் 75,032 வாக்குச் சாவடிகள் உள்ளன. தமிழகத்தில் 5.67 கோடி வாக்காளர்கள் உள்ளனர். தமிழகத்தில் மே 10 ஆம் தேதியுடன் சட்டப்பேரவைக்கான பதவிகாலம் முடிவடைகிறது. வாக்குப்பதிவு நாளில் ஒவ்வொரு 2 மணி நேரத்துக்கும் வாக்குப்பதிவு சதவீதம் அறிவிக்கப்படும். வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் வண்ண புகைப்படங்கள் இடம்பெறும் என ஞானேஷ்குமார் தெரிவித்தார்.

தமிழ்நாடு, மேற்கு வங்கம், அசாம், புதுச்சேரி, கேரளம் ஆகிய 5 மாநிலங்களுக்கான சட்டப்பேரவைத் தேர்தல் தேதியை தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தலைமையிலான தேர்தல் ஆணையர்கள் இன்று புது டெல்லியில் அறிவித்தனர்.

இதன்படி தமிழகத்தில் ஒரே கட்டமாக 234 தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெறுகிறது. தேர்தல் தேதி குறித்த அறிவிப்பு வெளியான நிலையில், தேர்தல் நடைபெற உள்ள தமிழகம், கேரளம், மேற்கு வங்கம், அசாம் மற்றும் புதுச்சேரியில் இன்று முதல் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன.

தேர்தலுக்கு தயாராகும் கூட்டணிகள்:

தமிழகத்தில் திமுக தலைமையிலான கூட்டணியில் சில கட்சிகளுக்கு ஏற்கெனவே தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மற்ற கட்சிகளுடன் தொகுதி ஒதுக்கீடு தொடர்பான பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

அதிமுக-பாஜக கூட்டணியும் தேர்தலுக்கு தயாராகி வருகிறது. கூட்டணியில் இடம்பெற்றுள்ள பாமக, அமமுக, தமாகா உள்ளிட்ட கட்சிளுடன் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

அதேபோல, விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகமும் தேர்தல் பணிகளை தொடங்கி உள்ளது. சீமானின் நாம் தமிழர் கட்சி 234 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறிவித்து களத்தில் இறங்கியுள்ளார்.




### தமிழ்நாடு வாக்காளர்கள் நிலவரம்

| | |
|---|---|
| மொத்தம் வாக்காளர்கள் | 5.67 கோடி |
| ஆண் வாக்காளர்கள் | 2.77 கோடி |
| பெண் வாக்காளர்கள் | 2.89 கோடி |
| மூன்றாம் பாலினத்தவர்கள் | 7,617 |

முதல் முறையாக வாக்களிக்கும் வாக்காளர்களின் எண்ணிக்கை 12.51 லட்சம்.

20 வயது முதல் 29 வயது வரையிலான வாக்காளர்களின் எண்ணிக்கை 1.05 கோடியாக உள்ளது.

## வாக்குப்பதிவு எந்திரத்தில் வேட்பாளர்களின் கலர் புகைப்படம் இடம்பெறும்




5 மாநில சட்டசபை தேர்தல் தேதியை தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் வெளியிட்டார்.

தேர்தல் தொடர்பாக மேலும் பல்வேறு அறிவிப்புகளையும் தலைமை தேர்தல் ஆணையர் வெளியிட்டார். அதன் விவரம் பின்வருமாறு:-

* 5 மாநிலங்களிலும் மொத்தம் 17.40 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர். தமிழ்நாட்டில் 5.67 கோடி வாக்காளர்கள் உள்ளனர்.
* மொத்தம் 824 தொகுதிகளில் தேர்தல் நடக்க உள்ளன
* 2.19 லட்சம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன
* 25 லட்சம் அலுவலர்கள் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்
* அசாமில் 128 தொகுதிகள், கேரளாவில் 140 தொகுதிகள், புதுச்சேரியில் 30 தொகுதிகள், தமிழ்நாட்டில் 234 தொகுதிகள், மேற்கு வங்காளத்தில் 294 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற உள்ளது.
* தமிழ்நாட்டில் 234 தொகுதிகளில் மொத்தம் 75 ஆயிரத்து 32 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.
* அனைத்து வாக்குச்சாவடிகளும் வெப் கேமரா மூலம் கண்காணிக்கப்படும்
* ஒவ்வொரு 2 மணி நேரத்திற்கும் வாக்குப்பதிவு விபரங்கள் பகிரப்படும்
* வாக்குச்சாவடி மையத்திற்குள் வாக்காளர்கள் செல்போன்கள் கொண்டு செல்ல அனுமதி இல்லை. செல்போன்கள் வைக்க தனி ஏற்பாடு செய்யப்படும்.
* வாக்குப்பதிவு எந்திரத்தில் வேட்பாளர்களின் கலர் புகைப்படம் இடம்பெறும்.
* வாக்குச்சாவடி முகவர்கள் அனைவருக்கும் அடையாள அட்டை வழங்கப்படும்

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## கரூர் கூட்ட நெரிசல்: விஜய்யிடம் 7 மணி நேரம் சிபிஐ விசாரணை



**புதுடெல்லி, மார்ச் 16:**

சி.பி.ஐ. விசாரணைக்காக நேற்றைய தினம் தனி விமானம் மூலம் விஜய் டெல்லி புறப்பட்டு சென்றார். அவருடன் ஆதவ் அர்ஜுனா, நிர்மல்குமார் உள்ளிட்ட த.வெ.க. நிர்வாகிகள் 7 பேர் சென்றுள்ளனர். டெல்லியில் உள்ள நட்சத்திர ஓட்டலில் தங்கியிருக்கும் விஜய், இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை ஓட்டலில் இருந்து புறப்பட்டு, சி.பி.ஐ. அலுவலகத்தில் விசாரணைக்காக ஆஜரானார்.

ஏற்கனவே 2 முறை நடத்தப்பட்ட விசாரணையின் போது கோரப்பட்ட ஆவணங்கள் இந்த விசாரணையின்போது, விஜய் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டது. தொடர்ந்து அவரிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர். காலை 10.30 மணிக்கு தொடங்கிய இந்த விசாரணை மாலை 5.30 மணி வரை நடைபெற்றது. தவெக தலைவர் விஜயிடம் சிபிஐ அதிகாரிகள் 7 மணி நேரம் விசாரணை நடத்தி உள்ளனர்.

தேவைப்பட்டால் விசாரணை மறுநாள் (திங்கட்கிழமை) மதியம் வரை நீடிக்கலாம் என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளது. விசாரணையை பொறுத்தே சென்னைக்கு விஜய் எப்போது திரும்புவார் என்பது தெரியவரும்.

# உடனடியாக அமலுக்கு வந்த தேர்தல் நடத்தை விதிகள்

**சென்னை, மார்ச் 16:**

இந்திய தேர்தல் ஆணையம் மூலம் பொதுத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டவுடன் மாநிலத்தில் ஆட்சி செய்யும் அரசின் செயல்பாடு முடிவுக்கு வந்து விடுகிறது. அரசு எடுக்கும் முடிவுகள் அனைத்தும் தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டுவந்த பிறகே நடைமுறைக்கு கொண்டுவரப்படும். மேலும், தேர்தல் நடத்தை விதிகளினால் அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளிலும் கட்டுப்பாடுகள் வந்துவிடுகின்றன.

அதன் விவரம் வருமாறு:-

* எந்தவொரு அரசியல் கட்சியோ, வேட்பாளரோ, சாதி, மதம், இனம், மொழி தொடர்பான வேற்றுமைகளை பேசி மக்களிடையே கசப்பு உணர்வையும், சலசலப்பையும் ஏற்படுத்தக்கூடாது.

* அரசியல் கட்சிகள் ஒன்றை ஒன்று குற்றம்சாட்டுவது, அவற்றின் கொள்கைகள், திட்டங்கள், பழைய சம்பவங்கள், பணிகள் பற்றியதாக மட்டுமே இருக்க வேண்டும். ஒருவரது பொது வாழ்க்கைக்கு சம்பந்தப்படாத தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி பேசக்கூடாது.

* ஒரு வேட்பாளர் தன்னை எதிர்த்து போட்டியிடும் வேட்பாளரின் குடும்பத்தினருக்கு எந்த தொந்தரவும் அளிக்கக்கூடாது. அவரது வீட்டு முன் பிரசார கூட்டம் என்ற பெயரில் போராட்டமோ, ஆர்ப்பாட்டமோ நடத்தக்கூடாது. போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாது.




* ஓட்டுக்காக சாதி, மத உணர்வை தூண்டக்கூடாது. மசூதிகள், தேவாலயங்கள், கோவில்கள் மற்றும் பிற வழிபாட்டு தலங்கள் எதுவும், தேர்தல் பிரசாரத்திற்காக பயன்படுத்தப்படக்கூடாது.

*ஓட்டுக்காக வாக்காளர்களுக்கு மது, பணம், பரிசுப்பொருள் கொடுக்கக்கூடாது. ஓட்டுபோட வாக்காளர்களை மிரட்டக்கூடாது.

* தனிப்பட்ட யாருடைய நிலம், கட்டிடம், சுற்றுச்சுவர் போன்றவற்றை அவரது அனுமதி இல்லாமல் அரசியல் கட்சிகள் பயன்படுத்தக்கூடாது.

* ஒரு அரசியல் கட்சி நடத்தும் பொதுக்கூட்டத்தில் மற்ற கட்சியினர் புகுந்து கேள்வி கேட்பது போன்ற செயலில் ஈடுபட்டு பிரச்சினையை ஏற்படுத்தக்கூடாது. அந்த நபர் மீது கட்சியினர் யாரும் நடவடிக்கை எடுக்கக்கூடாது. போலீசாரின் உதவியை நாட வேண்டும்.

* ஒரு கட்சியினர் ஒட்டிய சுவரொட்டிகளை மற்ற கட்சியினர் அகற்றக்கூடாது. ஒரு கட்சி அல்லது வேட்பாளர், பொதுக்கூட்டம் நடத்துவது பற்றி முன்கூட்டியே போலீசிடம் தகவல் அளிக்க வேண்டும். ஒலி பெருக்கிகளை பயன்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரியின் அனுமதியை பெற வேண்டும்.

* ஊர்வலத்திற்கு அனுமதி பெற்றிருந்தால், அது செல்லும் இடம், நேரம் ஆகியவற்றை பின்னர் மாற்றக்கூடாது. உருவபொம்மைகளை எரிக்கக்கூடாது.

* தேர்தல் பிரசாரத்திற்காக அரசு அதிகாரத்தை தவறாக பயன்படுத்துவதாக ஆளும் கட்சியினர் மீது புகார்கள் வரக்கூடாது.

* அமைச்சர் தனது அலுவலக பணிகளுடன் சேர்க்கக்கூடாது.

* தேர்தல் பிரசாரத்தின்போது அரசின் உபகரணங்களையோ, அலுவலர்களையோ பயன்படுத்தக்கூடாது.

* அதிகாரத்தில் இருக்கும் கட்சியினர், அரசுக்கு சம்பந்தப்பட்ட விமானம் உள்ளிட்ட வாகனங்களை பயன்படுத்தக்கூடாது.

* அமைச்சர்கள் தங்களின் தனி அதிகாரத்திற்கு உட்பட்ட நிதி, மானியங்களை அனுமதிக்கக்கூடாது. நிதி உதவிகளைப் பற்றி அறிவிப்பு வெளியிடக்கூடாது.

* திட்டங்களுக்கான அடிக்க நாட்டுவது, திறந்து வைப்பது ஆகியவற்றை செய்யக்கூடாது. சாலை அமைக்கப்படும், குடிநீர் வசதி செய்து தரப்படும் என்பது உள்ளிட்ட அறிவிப்புகளை வெளியிடக்கூடாது.

* தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கத்தில் ஆட்சியில் இருக்கும் கட்சியினர், அரசின் செலவில் விளம்பரம் வெளியிடவோ, ஊடகங்களில் பிரசாரமோ செய்யக்கூடாது.

* பொதுக்கூட்டங்கள் நடைபெறும் மைதானம், ஹெலிகாப்டர் இறங்குதளம், அரசு விருந்தினர் மாளிகை ஆகியவற்றை பயன்படுத்துவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் சம வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

* தேர்தலின்போது தங்களுக்குச் சாதகமாகச் செயல்படும் வகையில், தற்காலிகமாக அதிகாரி யாரையும் ஆளும் அரசு நியமிக்கக்கூடாது.

* அரசு சாரா பணி நியமனங்கள், பொதுத் துறையில் பணி நியமனங்களை செய்யக்கூடாது.

* வாக்குப்பதிவுக்கு 48 மணி (2 நாள்) நேரத்திற்கு முன்பாக பிரசாரம் நிறுத்தப்பட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.







# திருக்குறள் குறள்-560

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்



நாட்டைக் காக்கும் தலைவன் முறைப்படி காக்காவிட்டால், அந் நாட்டில் பசுக்கள் பால் தருதலாகிய பயன் குன்றும், அந்தணரும் அறநூல்களை மறப்பர்.

## சிந்திக்க ஒரு நொடி



பணக்காரன் மகன் செலவாளி
செலவாளி மகன் கடனாளி
கடனாளி மகன்
பொறுப்பாளி
பொறுப்பாளி மகன்
பணக்காரன்
இது தான் வாழ்க்கை


**ராஜகோபாலன்.J**
சென்னை 18

# ஹனுமந்த வாகனம்



ஸ்ரீயதோக்தகாரிஸ்வாமிவிஸ்வாவசுவருடபிரம்மோற்சவம் மூன்றாம் திருநாள் மாலை நாள் மாசி 30 (14/3/26) திருவெஃகா திவ்யதேசம். காஞ்சிபுரம்.

## தங்க பல்லக்கில் ஸ்ரீ பெருமாள் இராமர் திருக்கோலம்



இராஜமன்னார்குடி ஸ்ரீ வித்யா இராஜகோபால ஸ்வாமி திருக்கோயில், பங்குனி ப்ரும்மோத்ஸவ எட்டாம் திருநாள் காலை தங்க பல்லக்கில் ஸ்ரீ பெருமாள் இராமர் திருக்கோலம் புறப்பாடு, யானை வாகன மண்டபம் செல்லுதல்.

## நாழிக்கிணறு வரை செல்லும் சுற்றுப்பேருந்து சேவை மீண்டும் தொடக்கம்




திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு வரும் பக்தர்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறியுள்ளது. கடந்த ஓராண்டாக நிறுத்தப்பட்டிருந்த நாழிக்கிணறு வரை செல்லும் சுற்றுப்பேருந்து சேவை தற்போது மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. இதனால் பக்தர்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# அமைச்சர் எ.வ.வேலு பிறந்த நாளையொட்டி வெம்பாக்கம் தி.மு.க., கிழக்கு ஒன்றியம் சார்பில் சமுதாய நல்லிணக்க கல்வி மைய மாணவர்களுக்கு அன்னதானம் வழங்கல்!



**செய்யாறு, மார்ச் 16:** அமைச்சர் எ.வ.வேலு பிறந்தநாளை முன்னிட்டு வெம்பாக்கம் தி.மு.க.,வின் கிழக்கு ஒன்றியம் சார்பில், மாங்கால் கூட்டுரோட்டில் உள்ள 'சமுதாய நலக் கல்வி மையம் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் ஆலோசனை மையத்தில் உள்ள மாணவர்களுக்கு 'கேக்' வெட்டி மதிய உணவு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு பொதுப்பணிகள் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்களின் துறை அமைச்சர் எ.வ.வேலுவின் பிறந்தநாள் விழா வெம்பாக்கம் தி.மு.க.,வின் கிழக்கு ஒன்றிய செயலாளர் என்.சங்கர், மாவட்ட அயலக துணைத் தலைவர் ஏழாச்சேரி எம்.கே.கார்த்திகேயன் ஆகியோரது ஏற்பாட்டில் கொண்டாடப்பட்டது.

செய்யாறு அடுத்த மாங்கால் கூட்டு ரோட்டில் 'ரூரல் எய்ட் ஐக்கிய வளமனை - சமுதாய நலக் கல்வி மையம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆலோசனை மையம்' இயங்கி வருகிறது. இந்த மையத்தில் 97 மாணவ - மாணவிகள் பயின்று வருகின்றனர். இந்த மையத்தில் அமைச்சர் எ.வ.வேலுவின் பிறந்தநாள் விழா விமரிசையாக கொண்டாடப்பட்டது. மாணவர்கள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் லோகநாதன், ஒன்றிய செயலாளர்கள் சி.கே. ரவிக்குமார், தினகரன், நகர செயலாளர் விஸ்வநாதன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணைத் தலைவர் கலைஞர் பாஸ்கரன் உள்ளிட்ட தி.மு.க., பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# திருவோணம் நட்சத்திரத்தை முன்னிட்டு சத்தியநாராயணர் பூஜை சிறப்பு வழிபாடு





**கடலூர் , மார்ச் 16:** கடலூர் மாவட்டம் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் திருவோணம் நட்சத்திரத்தை முன்னிட்டு சத்தியநாராயணர் பூஜையில் ஆர்ய பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் பூஜையும்,மகா தீபாராதனையும் நடைபெற்றது.

அனைவரும் சத்ய நாராயணார் பூஜையில் கலந்து கொண்டு சத்யநாராயணரை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை



ஸ்ரீ பார்த்தசாதி பெருமாள் ஷிரவனம் ஏகாதசி புறப்பாடு தொடங்கியது.

## திவ்ய சேவை.



புஷ்கர் ஸ்ரீராமா வைகுண்டநாத் சன்னதி பிரம்மோற்சவம் எழு வாகனப் புறப்பாடு திவ்ய சேவை.

# முதல் சோமவார பிரதோஷம்



2026 ஆம் ஆண்டின் முதல் சோமவார பிரதோஷம் மார்ச் 16ஆம் தேதி வருவது சிவ பக்தர்களுக்கு மிக முக்கியமான ஆன்மிக நாளாகக் கருதப்படுகிறது. இந்த புனித நாளில் சிவபெருமானை மனமார வழிபட்டால் வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள், தடைகள், சனி தோஷம் போன்ற பல பிரச்சனைகள் நீங்கி செல்வமும் ஆனந்தமும் கிடைக்கும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

# பரிசளிப்பு விழா



**பனைக்குளம், மார்ச் 16:** ராமநாதபுரம் மாவட்டம் பனைக்குளம் முஸ்லீம் பரிபாலன சபைஐக்கியமுஸ்லீம்சங்கம்நடத்திய32வதுவருடதிருக்குர்ஆன் ஓதும் போட்டியில் வெட்டி பெற்ற மாணவமாணவியருக்கு பரிசளிப்பு விழா தர்ஹா வளாகத்தில் முஸ்லீம் பரிபாலன சபை தலைவர் அப்துல் வஹாப் தலைமையில் நடைபெற்றது முன்னதாக அப்பாஸ் அலி ஆலிம் கிராஅத் ஒத ஐக்கிய முஸ்லீம் சங்க தலைவர் ஏசியன் சாகுல் ஹமீது வரவேற்புரை நிகழ்த்த விழா கமிட்டி செயலாளர் சிராஜ்தீன் முன்னிலை வகித்தார் சிறப்பு பேச்சாளராக பனைக்குளம் தலைமை பேஸ் இ மாம் ஹாஜா முகைதீன் ஆலிம் சிறப்புரை ஆற்றினார் மொத்தம்300க்கும்அதிகமானோர் கலந்துகொண்டுஒதினார்கள் இதில் முதல் பரிசாக 15 ஆயிரமும் இரண்டாவது பரிசாக 10 ஆயிரமும் மூன்றாவது பரிசாக 5 ஆயிரமும் போட்டியில் கலந்து கொண்ட அனைத்து மாணவ மாணவியருக்கும் ஆறுதல் பரிசு வழங்கப்பட்டது இந்த தொகை முழுவதும் பனைக்குளம் பொதுமக்கள் மூலம் வசூல் செய்யப்பட்டது போட்டியின் தலைவர் அப்துல் வஹாப் செயலாளர் பலீல் அஹமது மற்றும் விழா கமிட்டி செயலாளர் சிராஜ்தீன் மற்றும் உறுப்பினார்கள் நிர்வாகிகள் சிறப்பாக செய்து இருந்தனார் சிறப்பு அழைப்பாளராக முஸ்லீம் நிர்வாக சபை தலைவர் கரீம்கனி செயலாளர் ரசீது அலி மற்றும் பலர்கலந்து கொண்டனார்

## வளத்தி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு





**விழுப்புரம், மார்ச் 16:** விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் வளத்தி ஊராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதியதாக கட்டப்பட்ட 72.80லட்டசம் மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ திறந்துவைத்தார் இந்நிகழ்வில் ஒன்றிய சேர்மேன் கண்மணி நெடுஞ்செழியன் மற்றும் அரசுத்துறைத் சார்ந்த அதிகாரிகள் பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.

அகரம் ராமதாஸ் செய்தியாளர்

# மத்திய அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்






**வாணியம்பாடி, மார்ச் 16:** தமிழ்நாட்டில் கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடு காரணமான மத்திய அரசை கண்டித்து வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி ஆலங்காயம் ஒன்றியம் நிம்மியம்பட்டில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டம் ஒருங்கிணைந்த ஆலங்காயம் ஒன்றிய செயலாளர்கள் வி எஸ் ஞானவேலன், தாமோதிரன், வி ஜி அன்பு ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் டி பிரபாகரன் முன்னிலை வகித்தார்.

இதில் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், ஆலங்காயம் மேற்கு கிழக்கு மத்திய ஒன்றிய நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு மத்திய அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

# 2026 தேர்தல் கொண்டாட்டம்



## இவர்கள் கூறுவதென்ன?

### எடப்பாடி பழனிச்சாமியை எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆன்மா மன்னிக்காது: ஓ பன்னீர் செல்வம் பேச்சு



ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கட லாடியில் தி.மு.க. சார்பில் தேர்தல் பிரசார கூட்டம் நடந்தது. இதில் கலந்து கொள்ள வநத முன்னாள் முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், அங்குள்ள முத்துராமலிங்கத்தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் அவர் பேசுகையில், "நன்றி மறந்த ஆள் யாரென்றால், எடப் பாடி பழனிசாமிதான். ஊர்ந்து, ஊர்ந்து காலை தொட்டு பதவி வாங்கியவர். அவரது 4½ ஆண்டு ஆட்சியை காப்பாற்றியது நான்தான். ஆனால் எந்த இடத்திலும் நான் இருக்கக்கூடாது என வேலைசெய்தார்.

அ.தி.மு.க. பொதுக்குழுவில் குண்டர்களை வைத்து 23 தீர்மானங்களை கொண்டு வந்தார். அதிமுகவை படுகுழியில் தள்ளியிருக்கிற பழனிசாமியை எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆன்மா மன்னிக்காது" என்றார்.

### "பாஜகவை எதிர்க்க முதுகெலும்புள்ள முதல்வர் வரவேண்டும்" - உதயநிதி பேச்சு




திருப்பத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று கலந்துகொண்டார். பின்னர், திமுக சார்பு அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்று பேசிய அவர், "திருப்பத்தூர் மாவட்டம் திமுக-வின் கோட்டை. திருப்பத்தூர் மட்டுமல்ல ஒட்டு மொத்த வடக்கு மண்டலமும் திமுக-வின் கோட்டை என்பதை நாம் பலமுறை நிருபித்துள்ளோம்.

பாஜக-வை எதிர்க்க வேண்டுமென்றால் முதுகெலும்பு உள்ள முதல்வர் வேண்டும். அதை பழனிசாமியிடம் எதிர்பார்க்க முடியாது. பாஜக-வை எதிர்த்து நிற்கக்கூடிய ஒரே முதல்வர் மு.க.ஸ்டாலின் தான். மோடிக்கு ஏற்ற அடிமையாக பழனிசாமி செயல்பட்டு வருகிறார். அதிமுக கூட்டணியை வீட்டுக்கு அனுப்ப வேண்டியது தான் நமது வேலை. கட்சி நிர்வாகிகள் ஒவ்வொருவரும் தினசரி 50 முதல் 60 பேரை சந்தித்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும். நீங்கள் சொன்னால் 50 முதல் 60 பேர் திமுக-வுக்கு வாக்களிக்கும் நிலையில் இருக்க வேண்டும்.

தேர்தல் என்னும் போரில் திட்டங்கள் வகுத்து நாம் செயல்பட்டால் நிச்சயம் 200 தொகுதிகள் இல்லை... 234 தொகுதிகளிலும் நாம் தான் வெற்றி பெறுவோம்" என்றார்.

### திமுக கூட்டணி 200 இடங்களுக்கு மேல் வெற்றி பெறும்: பிரேமலதா விஜயகாந்த்

திமுக கூட்டணி 200 இடங்களுக்கு மேல் வெற்றி பெறும் என்று பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் உள்ள காஞ்சி காமாட்சி அம்மன் ஆலயம், உலகளந்த பெருமாள் ஆலயம், மற்றும் திருப்பாற்கடல் உள்ளிட்ட ஆலயங்களில் தேமுதிக கட்சியின் பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் இன்று குடும்ப உறுப்பினர்களுடன் சிறப்பு சாமி தரிசன மேற்கொண்டார்.

இதனைத்தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசுகையில், இன்று தேர்தல் தேதி அறிவிக்கப்பட உள்ளது. தமிழக மக்களுக்கு நல்லது நடக்கும். திமுக தலைமையிலான கூட்டணி 200 இடங்களில் வெற்றி பெறும். திமுக கூட்டணி பலமான கூட்டணி. அனைத்துக் கட்சிகளிடம் கூட்டணி உடன்பாடு முடிந்தவுடன் போட்டியிடும் இடங்கள் குறித்து அறிவிக்கப்படும்.

நான் மற்றும் விஜய பிரபாகரன் போட்டியிட அதிக அளவில் தொண்டர்கள் விரும்புகின்றதால் அது குறித்தும் முறையாக அறிவிப்பு வெளியிடப்படும். விஜய் குறித்த கேள்விகளுக்கு அவரிடமே பதில் கேளுங்கள் எனத் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியின்போது மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் ராஜேந்திரன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## தி.மு.க. கூட்டணியில் தொகுதிகள் ஒதுக்கீடு: "தோழமை கட்சிகள் புரிஞ்சுக்கணும்.." - செல்வப்பெருந்தகை

தமிழக சட்டமன்ற தேர்தல் நெருங்கும் நிலையில் ஆளும் தி.மு.க. கூட் டணி தொகுதி பங்கீட்டை தீவிரப்படுத்தி உள்ளது. முதல் கட்சியாக இந் திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு 2 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. அடுத்தபடியாக மனிதநேய மக்கள் கட்சிக்கும் 2 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்படுவதாக ஒப்பந்தம் கையெழுத்தாகின. காங்கிரசுக்கு ஒரு மாநிலங்களவை எம்.பி. பதவியும், 28 தொகுதிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. ம.தி.மு.க.வுக்கு 4 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. இதனையடுத்து கொ.ம.தே.க.வுக்கு நேற்று 2 தொகுதிகள் ஒதுக்கப்பட்டது.



தி.மு.க. கூட்டணியில் புதிய வரவாக தே.மு.தி.க. சேர்ந்துள்ளது. அந்த கட்சிக்கு மாநிலங்களவை எம்.பி. பதவி ஒன்று ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த பதவிக்கு எல்.கே.சுதீஷ் போட்டியின்றி தேர்வானார். தே.மு.தி.க.வும் இரட்டை இலக்க தொகுதிகளில் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளது. அந்த கட்சிக்கு 10 இடங்கள் ஒதுக்கப்படலாம் என்று தெரிகிறது.

இந்திய கம்யூனிஸ்டு மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிகளும் இரட்டை இலக்க தொகுதிகளில் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளன. இதுதொடர்பாக டி.ஆர்.பாலு தலைமையிலான தி.மு.க. தொகுதி பங்கீட்டு குழுவை அந்த கட்சியின் தலைவர்கள் ஏற்கனவே சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். அப்போது தொகுதிகள் குறைத்து வழங்கப்படும் என்று கூறப்பட்டதாக தெரிகிறது. இதற்கு கம்யூனிஸ்டு கட்சிகள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

இதுதொடர்பாக சென்னை எழும்பூரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயலாளர் சண்முகம் நேற்று செய்தியாளர்களிடம் கூறுகையில், "இரட்டை இலக்கத்தில் போட்டியிட வேண்டும் என்ற விருப்பத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார்பில் தெரிவித்துள்ளோம். பல புதிய கட்சிகள் கூட்டணிக்கு வந்துள்ளதால் நீங்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு தொகுதிகளை தருவது சிரமம் என்று கூறியுள்ளனர். அதே சிரமத்திற்கு மத்தியில்தான் காங்கிரஸ் கட்சிக்கு கூடுதலான தொகுதிகள் வழங்கப்பட்டு உள்ளது. தே.மு.தி.க.வுக்கு கூடுதல் தொகுதிகள் வழங்கப்படும் என்று கூறப்படுகிறது.

இவர்களுக்கு கூடுதல் தொகுதிகள் வழங்கும்போது கம்யூனிஸ்டு கட்சிக்கு கூடுதல் தொகுதிகள் வழங்க முடியாது என்று கூறுவதில் நியாயம் இல்லை. எனவே, கடந்த முறையை விட கூடுதலாக தொகுதிகளில் போட்டியிட வேண்டும் என்பதுதான் எங்களின் முடிவு. இதை பேச்சுவார்த்தை குழுவிடம் ஏற்கனவே தெரிவித்துள்ளோம். தொகுதிகளை குறைத்துக் கொள்வது குறித்து பேசப்படும்பட்சத்தில் எங்களின் மாநிலக்குழு கூடி முடிவுகளை எடுக்கும். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் பலத்திற்கு ஏற்ப தொகுதிகளை பெறுவது என்பது முக்கியம். அதேநேரத்தில் கட்சியின் நலனும் முக்கியம்" என்று கூறினார்.

இந்நிலையில் தோழமை கட்சிகள் புரிஞ்சுக்கணும்.. உங்கள் உரிமைகளை கேளுங்கள் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் அவர் பேசியதாவது:-

தமிழ்நாட்டு மக்களை காப்பதற்காக மன நிறைவோடு மூன்று தொகுதிகளை கூடுதலாக வாங்கி இருக்கிறோம். உங்களின் உரிமையை கேளுங்கள், முதல்-அமைச்சருக்கு மனம் இருக்கிறது, இருந்தால் கொடுப்பார். காங்கிரஸ் கட்சிக்கு ஏன் கொடுத்தீர்கள் என்றால் எப்படி?. எங்களுடைய வேதனையை தோழமைக் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

100, 63, 41, 23 என அடுத்தடுத்து குறைவான தொகுதிகளிலேயே நின்றோம். 41 தொகுதிகளை எங்கள் தலைமை கேட்டது. அதை குறைத்து 28ஆக கொடுத்தார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

## "இந்தத் தேர்தலில் நான் போட்டியிடப் போவதில்லை" - வைகோ தகவல்



"வரும் சட்டப்பேரவை தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை" என்று மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்தார்.

இது தொடர்பாக கோவில்பட்டியில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: வேடநத்தத்தில் 12-ம் வகுப்பு மாணவி பாலியல் நாசத்துக்கு ஆளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதை நினைக்கவே நெஞ்சம் பதறுகிறது.

பாலியல் வன்கொலைகளில் ஈடுபடுபவர்களுக்கு ஆயுள் முழுவதும் சிறையில் இருக்கும் வகையில், இந்த தேர்தலுக்கு பின்னர் அமையும் திமுக ஆட்சியில் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும். இதனை அரசியலாக்கி திமுக மீது சிலர் பழி தூற்ற முயற்சிக்கின்றனர். அவர்கள் ஆட்சியில் இருந்தபோது இதனை விட அதிகமாக நடந்தது.

"வரும் தேர்தலுக்கு பிறகு முதல்வர் பதவியை ஸ்டாலின் இழந்து விடுவார்" என, பிரதமர் மோடி சில நாட்களுக்கு முன்பு கூறினார். ஆனால், 2029-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்குப் பின், இந்தியாவின் தலைமை அமைச்சர் நாற்காலியில் நரேந்திர மோடி உட்கார வாய்ப்பே கிடையாது. வரும் சட்டப்பேரவை தேர்தலில் நான் போட்டியிடப் போவது இல்லை. திமுக-வில் மற்ற கூட்டணி கட்சிகளுடனான பேச்சுவார்த்தைக்குப் பிறகுதான், மதிமுக-வுக்கு என்னென்ன தொகுதிகள் ஒதுக்கப்படும் என்பது தெரியும்.

ரஜினிகாந்த் நன்கு யோசித்துப் பார்த்து முன்கூட்டியே முடிவெடுத்துவிட்டார். புதிதாக கட்சி தொடங்கியவர்கள் கற்பனையாக ஏதாவது சொல்லிக் கொண்டிருப்பார்கள். தலைமை தேர்தல் ஆணையரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம்பி-க்கள் வலியுறுத்தியுள்ளது சரியான நடவடிக்கை. அப்படி நடந்தால் மகிழ்ச்சி. இவ்வாறு அவர் கூறினார்.

## "விஜய்யின் டெல்லி பயணத்துக்கும் கூட்டணிக்கும் சம்பந்தம் இல்லை" - நயினார் நாகேந்திரன் கருத்து

விஜய் டெல்லி பயணத்துக்கு கூட்டணிக்கும் சம்பந்தம் இல்லை என்று பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

சட்டப்பேரவை தேர்தலை யொட்டி தமிழக பாஜக ஊடக பயிற்சி முகாம் சென்னை அமைந்தகரையில் உள்ள பாஜக தலைமை தேர்தல் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதில், மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், தேர்தல் பொறுப்பாளர் அர்ஜுன் ராம் மேக்வால், தேர்தல் அறிக்கை குழு தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், தேசிய செய்தி தொடர்பாளர்கள் ஜி.வி.எல். நரசிம்ம ராவ், கவுரவ் பாட்டியா, சி.ஆர்.கேசவன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். கூட்டத்தில், செய்தி தொடர்பாளர்கள், தகவல் தொடர்பு ஊடகங்களை எப்படி கையாள வேண்டும் என்பது குறித்து பயிற்சி வழங்கப்பட்டது.

கூட்டத்துக்கு பின்னர் செய்தியாளர்களிடம் நயினார் நாகேந்திரன் கூறியதாவது: விஜய்யுடன் மறைமுகப் பேச்சுவார்த்தை நடக்கிறதா என்று கேட்கிறீர்கள். உண்மையைச் சொல்லப்போனால், உங்களுக்குத் தெரிந்த விவரம் கூட எனக்குத் தெரியாது. எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரை எதை வேண்டுமானாலும் பேசுவார்கள்.

அவர்களின் மூலதனமே பொய்தான். நான் இங்கே நாட்டு மக்களுக்காகப் பேச வந்திருக்கிறேன். நாட்டு மக்களுக்கு என்னவெல்லாம் நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்ல வந்திருக்கிறேன். ஆனால், உங்களுக்கு இருக்கும் ஒரே கவலை கூட்டணி அமைகிறதா இல்லையா என்பது மட்டும்தான்.

விஜய் எங்கள் கூட்டணிக்கு வருவது குறித்து இப்போது நான் கருத்துச் சொல்ல முடியாது. கரூர் சம்பவம் தொடர்பான சிபிஐ விசாரணைக்காக அவர் டெல்லி செல்கிறார் என்பது ஊரறிந்த விஷயம். அப்படியிருக்கையில், அவரது டெல்லி பயணத்தையும் கூட்டணியையும் இணைத்து முடிச்சுப் போடுவது எந்த வகையில் நியாயமாகும்? விஜய்யின் டெல்லி பயணத்துக்கும் கூட்டணிக்கும் சம்பந்தம் இல்லை. உலகம் முழுவதும் போர் நடக்கிறது. இந்தியாவில் மட்டும் எந்த போரும் இல்லை. ஆனால், தமிழகத்தில் மட்டும் தான் ஒரே அக்கப்போராக இருக்கிறது.

போர் காலங்களில் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்தில் சவால்கள் இருக்கும் என்பது அனைவருக்கும் தெரியும். இருப்பினும், மத்திய அரசு சாமானிய மக்களுக்குத் தட்டுப்பாடின்றி எரிபொருள் கிடைக்க வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டு வருகிறது.

இவ்வளவு பேசும் திமுக, சிலிண்டருக்கு ரூ.100 குறைப்போம் என்றார்களே, குறைத்தார்களா? பெட்ரோலுக்கு ரூ.10, டீசலுக்கு ரூ.5-ம் குறைப்போம் என்றார்களே குறைத்தார்களா? காவிரி குண்டாறு இணைப்போம் என்றார்களே இணைத்தார்களா? வாக்குறுதியில் சொல்லியதை எதையாவது நிறைவேற்றினார்களா?

இவற்றைச் செய்யாமல், உலகளாவிய போர்ச் சூழலால் ஏற்படும் சில நெருக்கடிகளை மட்டும் பெரிதுபடுத்தி அரசியல் செய்வது நியாயமா? தமிழகத்தில் உள்ள பெட்ரோல் பங்குகளில் கூட்டம் இருப்பது போல ஒரு பிம்பத்தை திமுக கட்டமைக்கிறது. கையில் பண பலமும், அரசு அதிகாரமும் இருப்பதால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என நினைக்கிறார்கள்.

## தேர்தல் தேதி அறிவித்த உடன் அமலாகும் விதிகள் என்னென்ன?

தமிழ்நாடு உள்பட 5 மாநில சட்டசபை தேர்தல் தேதி அறிவிக்கப்பட உள்ளது.

தேர்தல் தேதி அறிவித்த உடன் அமலாகும் விதிகள் என்னென்ன?

தமிழ்நாடு, கேரளா, அசாம், மேற்கு வங்காளம், புதுவை ஆகிய 5 மாநிலங்களுக்கான சட்டமன்ற தேர்தல் தேதியை தேர்தல் ஆணையம் அறிவிக்க உள்ளது. தேர்தல் தேதி அறிவிக்கப்பட உள்ள நிலையில், தேர்தல் தேதி அறிவித்த உடன் தேர்தல் நடத்தை விதிகளும் அமலுக்கு வந்துவிடும். இதில் என்ன மாதிரியான கட்டுப்பாடுகள், விதிகள் இடம் பெறும் என்பது பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

தேர்தல் முடியும் வரை எந்த ஒரு புதிய திட்டத்தையும் செயல்படுத்தக் கூடாது.

பிரசாரத்தின் போது கட்சிகளுடைய செயல்பாடுகளை தவிர்த்து தனிநபர் விமர்சனம் செய்ய கூடாது.

தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்ததும் அரசு பணியாளர்கள், பொதுத்துறை அதிகாரிகள் பணியிட மாற்றம் கூடாது.

அரசு விழாக்கள் நடத்த கூடாது, அமைச்சர்கள் என்ற முறையில் எந்தவிதத்திலும் பரப்புரை மேற்கொள்ள கூடாது. அமைச்சர்கள் வேட்பாளராகவோ, வாக்குச்சாவடி முகவராகவோ கலந்து கொள்ளலாம்.

கட்சி பாகுபாடின்றி பொது மைதானங்கள் உள்ளிட்டவைகளை பயன்படுத்த முன்னுரிமை அடிப்படையில் அனுமதி அளிக்கப்படும்

ரொக்கமாக பணம் கையில் எடுத்து செல்ல கட்டுப்பாடு. கடந்த தேர்தல் வரை 50 ஆயிரத்திற்கு மேல் ஆவணங்கள் இன்றி கொண்டு செல்ல தடை இருந்தது

இதுபோன்ற கட்டுப்பாடுகள் விதிக்கபட வாய்ப்புள்ளது.

## ரூ.5 லட்சத்துக்கு மேல் ரூ.500 நோட்டுகளை வழங்கத் தடை: வங்கிகளுக்கு ஆர்பிஐ அறிவுறுத்தல்

சட்டமன்றத் தேர்தலில் வாக்காளர்களுக்கான 'கவனிப்புகளுக்கு' கடிவாளம் போட தேர்தல் ஆணையம் தயாராவதற்கு முன்னதாகவே முறையற்ற பணப் 'பட்டுவாடாக்களை' கட்டுப்படுத்த ரிசர்வ் வங்கி தயாராகிவிட்டது.



தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு விட்டால், உரிய ஆவணங்கள் இல்லாமல் குறிப்பிட்ட தொகைக்கு மேல் ரொக்கம் எடுத்துச் செல்லவும் பரிசுப் பொருட்களை எடுத்துச் செல்லவும் தேர்தல் ஆணையம் தடை விதிக்கும். இதைக் கண்காணிக்க ஆங்காங்கே வாகன சோதனைகளும் நடக்கும். ஆனால், தேர்தல் தேதி அறிவிப்புக்கு முன்னதாகவே, ரிசர்வ் வங்கி சத்தமில்லாமல் முறையற்ற பணப் பரிவர்த்தனைகளை முடிந்தவரை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது.

அதன்படி தற்போது வங்கிகளில் இருந்து கட்டுக் கட்டாக ரூ.500 நோட்டுகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்க ரிசர்வ் வங்கி தடை விதித்துள்ளது. அதனால் தற்போது எந்த வங்கிக் கிளையிலும் 500 ரூபாய் நோட்டுகளை பெருமளவுக்கு எடுக்க முடியவில்லை என்று சாமானியர்களே புலம்ப ஆரம்பித்திருக்கிறார்கள். இது தொடர்பாக வங்கி வட்டாரங்களில் விசாரித்தபோது, "ரூ.5 லட்சத்துக்கும் அதிமாக 500 ரூபாய் நோட்டுகளை வழங்க வேண்டாம் என்று வாய்மொழி உத்தரவு வந்துள்ளதால் அவ்வாறு மொத்தமாக ரூ.500 கட்டுகளை யாருக்கும் வழங்குவதில்லை.

ஏடிஎம்-களில் 500 ரூபாய் நோட்டுகள் கிடைப்பதற்கே தற்போது முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. எனினும் இது தொடர்பாக எழுத்துபூர்வமாக எந்த உத்தரவும் இதுவரை எங்களுக்கு வரவில்லை" என்று தெரிவித்தனர்.

அதேசமயம், 500 ரூபாய் நோட்டுகளை மொத்தமாக வாடிக்கையாளர்களுக்கு வழங்க கட்டுப்பாடுகள் இருந்தாலும் 200, 100, 50, 20 ரூபாய் கட்டுகளை தாராளமாக வங்கி கிளைகளில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். பெருமளவு தொகையை 200, 100, 50, 20 ரூபாய் கட்டுகளாக எடுத்துச் செல்வதும், அதை வாக்காளர்களுக்கு விநியோகிப்பதும் கடினம் என்பதை உணர்ந்தே 500 ரூபாய் நோட்டுகளுக்கு மட்டும் ரிசர்வ் வங்கி கிடுக்குப்பிடி போட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஓட்டுக்குப் பணம் கொடுப்பதைத் தடுக்க ரிசர்வ் வங்கி வழியாக தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கை எந்தளவுக்குப் பலன் கொடுக்கும் எனத் தெரியவில்லை. எனென்றால், வாக்குக்குப் பணம் கொடுப்பதையும் அரசியல்வாதிகள் இப்போது 'டிஜிட்டல் மயமாக்கி' விட்டார்கள்.

எனவே, அதைத் தடுக்க என்ன வழி என்று தேர்தல் ஆணையம் இன்னும் கொஞ்சம் பெட்டராக யோசித்தால் நல்லது.

## திருவள்ளூர் தீர்த்தீஸ்வரர் கோவிலில் பங்குனி பிரம்மோற்சவம் தொடங்கியது

**சென்னை, மார்ச் 16:**

திருவள்ளூரில் அமைந்துள்ள ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ தீர்த்தீஸ்வரர் கோவிலில் பங்குனி மாத பிரம்மோற்சவ விழா விமரிசையாக நடைபெறும். அவ்வகையில் இந்த ஆண்டின் பங்குனி பிரம்மோற்சவ வழா நேற்று முன்தினம் விக்னேஸ்வரர் உற்சவத்துடன் தொடங்கியது.

நேற்று காலை 6.30 மணி அளவில் கொடியேற்றம் நடைபெற்றது. கொடியேற்றத்திற்குப்பின், உற்சவர் திரிபுரசுந்தரி சமேத தீர்த்தீஸ்வரர், திரு வீதி உலா வந்து அருள்பாலித்தனர். இந்நிகழ்ச்சிகளில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

வரும் 24ம் தேதி வரை 12 நாட்கள் நடைபெறும் இவ்விழாவில் நாள்தோறும் காலை, மாலை நேரத்தில் பல்வேறு வாகனங்களில் உற்சவர் வீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சி அளிப்பார். சிறப்பு உற்சவங்களும் விமரிசையாக நடைபெறும். காலை, மாலை இருவேளையும் வேதபாராயணம் நடக்கிறது. முக்கிய நிகழ்ச்சியாக 18ம் தேதி மாலை ரிஷப வாகன வீதியுலா மற்றும் பஞ்சமூர்த்தி தரிசனம் நடைபெறும். 20-ம் தேதி காலையில் ரத உற்சவம் நடைபெறும். 21ஆம் தேதி இரவு ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ தீர்த்தீஸ்வரர் திருக்கல்யாணம், 22-ம் தேதி புஷ்ப பல்லக்கு உற்சவம், 23-ம் தேதி தீர்த்தவாரி நடைபெறுகிறது. 24ம் தேதி மகா அபிஷேகத்துடன், பிரம்மோற்சவம் நிறைவு பெறுகிறது.

## பழநியில் மின் இழுவை ரயில் சேவை பாதிப்பு: பக்தர்கள் தவிப்பு

**பழனி, மார்ச் 16:**

திண்டுக்கல் மாவட்டம் பழநி தண்டாயுதபாணி சுவாமி மலைக்கோயிலுக்கு பக்தர்கள் எளிதில் செல்லும் வகையில் 3 மின் இழுவை ரயில்கள் (வின்ச்) இயக்கப்படுகின்றன. இந்த ரயில்களில் அடிவாரத்தில் இருந்து மலைக்கோயிலுக்கு செல்ல ரூ.10 மற்றும் ரூ.50-ம், மலைக்கோயிலில் இருந்து அடிவாரத்துக்கு ரூ.10 மற்றும் ரூ.25 கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

தினமும்காலை5.30முதல்இரவு11மணி வரை பக்தர்கள் மலைக்கோயிலுக்குச் செல்லவும், மலைக்கோயிலில் இருந்து அடிவாரத்துக்கு வரவும் இயக்கப்படுகிறது.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கு வழக்கம்போல் மின் இழுவை (வின்ச்) ரயில் சேவையை தொடங்கும் போது, இந்த ரயில்களை இயக்குவதற்கு மின் வினியோகம் வழங்கும் இணைப்பில் ஏற்பட்ட கோளாறு, மின் கசிவு காரணமாக மின் இழுவை ரயில் சேவை முற்றிலும் பாதிக்கப்பட்டது. பொறியாளர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள் கோளாறை சரிசெய்யும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டனர். இதனால் பக்தர்கள் ரோப்கார் மற்றும் படிப்பாதையை பயன்படுத்தி மலைக்கோயிலுக்கு செல்ல கோயில் நிர்வாகம் ஒலிப்பெருக்கி மூலம் அறிவுறுத்தியது. மின் இழுவை ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளதால் நடந்து செல்ல முடியாத முதிய வர்கள், மாற்றுத்திறனாளிகள், ரோப் காரில் 2 மணி நேரத்துக்கும் மேலாக காத்திருந்து மலைக்கோயிலுக்கு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

## திருப்பதியில் அதிகரிக்கும் பக்தர்கள் கூட்டம்... இலவச தரிசனத்துக்கு 24 மணிநேரம் காத்திருப்பு



**திருப்பதி, மார்ச் 16:**

திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய வருகின்றனர். அதில் வாரத்தின் இறுதி நாட்களில் சாமி தரிசனம் செய்ய வரும் பக்தர்க ளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதேபோல் நேற்று கோவிலில் பக் தர்கள் கூட்டம் அலைமோதியது.

பக்தர்களுக்காக திருப்பதியில் உள்ள சீனிவா சம், விஷ்ணு நிவாசம் ஆகிய தங்கும் விடுதி கள், அலிபிரியில் உள்ள பூதேவி காம்ப்ளக்ஸ் ஆகிய 3 இடங்களில் இலவச (சர்வ) தரிசன டோக்கன்கள் வழங்கப்படுகின்றன. மேலும் ஸ்ரீவாரிமெட்டு மலைப்பாதை வழியாக நடந்து திருமலைக்கு செல்லும் பக்தர்களுக்கு அலிபிரி பூதேவி காம்ப்ளக்சில் 'திவ்ய' தரிசன டோக்கன்கள் வழங்கப்படுகின்றன. அங்கு வழங்கப்படும் திவ்ய தரிசன டோக்கன்கள் ஸ்ரீவாரி மெட்டு மலைப்பாதையில் 1,200-வது படியில் கட்டாயமாக ஸ்கேன் செய்ய வேண்டும் என்பது நடைமுறையில் இருந்து வருகிறது.

இலவச தரிசனத்துக்கு 24 மணிநேரம்: இந்தநிலையில் நேற்று திருமலையில் உள்ள வைகுண்டம் கியூ காம்ப்ளக்சில் 31 கம்பார்ட் மெண்டுகளில் பக்தர்கள் நிரம்பி 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கிருஷ்ணதேஜா விருந்தினர் மாளிகை வரை நீண்ட வரிசையில் காத்திருந்தனர். தேதி, நேரம் குறிப்பிடப்பட்ட 'டைம் ஸ்லாட்' டோக்கன்கள் இல்லாமல் இலவச தரிசனத்தில் சென்ற பக்தர்கள் 18 மணியில் இருந்து 24 மணிநேரம் வரை காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

அதேபோல் அலிபிரி டோல்கேட்டில் ஏராளமான கார்கள் நீண்ட வரிசையில் வெகுநேரம் காத்திருந்தன. நேற்று முன்தினம் 67 ஆயிரத்து 264 பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். 29 ஆயிரத்து 410 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர். அன்று தேவஸ்தானம் அறிவித்த ஒருநாள் உண்டியல் காணிக்கை 4 கோடியே 28 லட்சம் ஆகும்.

## திருநள்ளாறு சனீஸ்வரர் கோவிலில் குவிந்த பக்தர்கள்.. 6 மணி நேரம் காத்திருந்து தரிசனம்



**திருநள்ளாறு, மார்ச் 16:**

புதுவை மாநிலம் காரைக்கால் பிராந்தியம் திருநள்ளாறில் அமைந்துள்ள ஸ்ரீதர்ப்பாரண்யேஸ்வரர் கோவிலில் சனீஸ்வர பகவான் தனி சன்னதியில் அனுக்கிரக மூர்த்தியாக வீற்றிருந்து அருள்பாலித்து வருகிறார். சனீஸ்வர பகவானை சனிக்கிழமைகளில் உள்ளூர் மக்கள் மட்டுமின்றி வெளியூரில் இருந்தும் அதிகளவில் பக்தர்கள் வந்து வழிபடுவது வழக்கம்.

இந்த நிலையில் கடந்த 6ம் தேதி சனிப்பெயர்ச்சி விழா. அப்போது கும்ப ராசியிலிருந்து மீன ராசிக்கு சனீஸ்வர பகவான் இடம் பெயர்ந்தார். இதன் பலன் 48 நாட்கள் வரை இருக்கும் என்பது ஐதீகம். எனவே சனிப்பெயர்ச்சி நாளில் இருந்து பக்தர்கள் திரளாக வருகை தந்து தரிசனம் செய்கின்றனர்.

இந்த நிலையில் வார கடைசி மற்றும் சனிப்பெயர்ச்சி நடந்து 2-வது வாரம் என்பதால் நேற்று சனீஸ்வரர் கோவிலில் பக்தர்கள் குவிந்தனர். தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் குவிந்ததால் கூட்டம் அலைமோதியது. சுமார் 6 மணி நேரத்திற்கு மேலாக காத்திருந்து சனீஸ்வர பகவானை பக்தர்கள் தரிசனம் செய்தனர். முன்னதாக அதிகாலை முதலே நளன்தீர்த்த குளத்தில் புனித நீராடிய பக்தர்கள் கலித்தீர்த்த விநாயகருக்கு சிதறு தேங்காய் உடைத்து வழிபட்டனர். மேலும் கோவிலில் எள் தீபம் ஏற்றியும் வழிபட்டனர்.

சனீஸ்வர பகவானுக்கு விசேஷ அபிஷேகம், மகா தீபாராதனை நடந்தது. தொடர்ந்து வெள்ளி கவசத்தில் சனீஸ்வர பகவான் பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

பக்தர்கள் சிரமமின்றி சாமி தரிசனம் செய்யவும், பாதுகாப்பை உறுதிபடுத்தவும் திருநள்ளாறு போலீஸ் இன்ஸ்பெக்டர்பிரவீன்குமார் தலைமையில் 100-க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். நிகழ்ச்சியில் கோவில் துணை அதிகாரி நாகரத்னா மற்றும் கோவில் ஊழியர்கள், அர்ச்சகர்கள் கலந்து கொண்டனர்.

## விடுமுறை தினம்: திருச்செந்தூரில் குவிந்த பக்தர்கள்.. நீண்ட நேரம் காத்திருந்து தரிசனம்



**திருச்செந்தூர், மார்ச் 16:**

அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஞாயிறு விடுமுறை நாளான இன்று பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். பொதுவாக விடுமுறை நாட்கள் மட்டுமல்லாமல் விழா நாட்களிலும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பாத யாத்திரையாகவும், கார்களிலும் வந்து கடல் மற்றும் நாழிக்கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்து செல்வது வழக்கம்.

அந்த வகையில் ஞாயிறு விடுமுறை தினமான இன்று கோவில் நடை அதிகாலை 5 மணிக்கு திறக்கப்பட்டது. 5.30 மணிக்கு விஸ்வரூபம், 6 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம் நடந்தது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து கோவிலுக்கு வந்த ஏராளமான பக்தர்கள் கடல் மற்றும் நாழிக்கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.



வறுமை, நோய், அறியாமை மூன்றும்
முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



### நலம் தரும் மருத்துவம்

## பெண்கள் அன்றாடம் சேர்த்துக் கொள்ள வேண்டிய உணவுகள்

பெண் ஒரு குடும்பத்தின் அச்சாணி போன்றவள் என்பதால் அவர்கள் இளமையாகவும், ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் இருக்க வேண்டியது அவசியம். அதற்கு சில சூப்பர் உணவுகள் உதவுவதாக உணவியல் நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர். சத்துக்கள் நிறைந்த இவற்றை அன்றாட உணவில் பெண்கள் சேர்த்து கொள்ள வேண்டும் என்கிறார்கள்.

1. தயிர்: பெண்களின் எலும்புகளின் பலம் காக்கும் கால்சியம் சத்து தயிரில் உள்ளது. இதனால் பெண்களை தாக்கும் எலும்பு மெலிவு நோயான ஆஸ்ட்ரோபொராசிஸ் வருவது தவிர்க்கப்படுகிறது. மார்பகப் புற்றுநோய் வராமல் தடுக்கப்படுகிறது. 'இரிட்டேடட் பவுல் சின்ட்ரோம்' எனும் குடல் நோய் தவிர்க்கப்படுகிறது. மேலும் குடல் மற்றும் பிறப்புறுப்பு தொற்றுநோய்கள் வருவது தவிர்க்க உதவுகிறது. தினமும் பெண்கள் ஒரு கப் தயிர் எடுத்துக் கொள்ள வேண்டும்.

2. ஒமேகா 3: பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில் ஏற்படும் மன அழுத்தத்தைப் போக்க 'ஒமேகா3' உதவுகிறது. காரணம் இல்லாமல் ஏற்படும் எரிச்சல், கோபத்தை கட்டுப்படுத்தவும் உதவுகின்றது. இதன் குறைபாடு காரணமாக இதய நோய்கள், நினைவுத் திறன் குறைபாடு, நரம்புத்தளர்ச்சி போன்ற பல பாதிப்புகள் ஏற்படும். வாரம் 2 அல்லது 3 முறை மீன் உணவுகளை எடுத்துக் கொள்ள வேண்டும். சைவ உணவு எடுப்பவர்கள் கொட்டை மற்றும் விதைகளை எடுத்து கொள்ள வேண்டும்.

3. பீன்ஸ்: புரதத்தின் சிறந்த மூலமாகவும், அதிக நார்ச்சத்துகளை செரிவாகவும் கொண்டுள்ளது. பீன்ஸ் அதிகமாக எடுத்துக் கொள்ள மார்பகப் புற்றுநோயின் அபாயம் 28% வரை குறைக்கின்றது என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. அதில் அதிக நார்ச்சத்து இருப்பதால், பெருங்குடல் புற்றுநோய் அபாயத்தையும் குறைப்பதில் ஆற்றல் காட்டுகின்றது என்கிறார்கள். வாரத்தில் 3 அல்லது 4 நாட்களாவது உணவில் பீன்ஸ் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

4. தக்காளி: சரும பராமரிப்பிற்கு நல்லது பளபளப்பான சருமம் வேண்டும் என்ற ஆர்வம் இருந்தால் ஒரு தக்காளியை பச்சையாக சாப்பிட்டு வாருங்கள். தக்காளியில் லைகோபீன், பீட்டா கரோட்டின் மற்றும் வைட்டமின் சி ஆகியவை உள்ளன. இவை அனைத்தும் சரும சேதத்தை மெதுவாக்குவதற்கும் கொலாஜனை அதிகரிப்பதற்கும் உதவும்.

5. முழு தானியங்கள்: இந்த வகை உணவுகள் ரத்த அழுத்தத்தை கட்டுப்பாட்டில் வைக்கவும், மெட்டபாலிசத்தை சீராக வைக்கவும் உதவுகின்றன. தானியங்களில் பிரௌன் அரிசி, கோதுமை, ஓட்ஸ் போன்றவை உடலுக்கு தேவையான நார்ச்சத்தை வழங்குகின்றன.

(தொடரும்)

## கம்ப்யூட்டர் வேலை இனிமேல் காலி! எந்தெந்த துறைகள் தற்போதைக்கு தப்பிப்பது உறுதி!

இப்போதெல்லாம் எங்கு திரும்பினாலும் செயற்கை நுண்ணறிவு எனப்படும் ஏஐ பற்றிய பேச்சுதான் ஓடிக்கொண்டிருக்கிறது. ஏஐ வந்ததால் பலரது வேலைகள் பறிபோகும் என பலரும் பயந்துகொண்டு இருக்கிறார்கள். ஆனால் எந்த மாதிரியான வேலைகளுக்கு எப்போது ஆபத்து வரும் என்பதை சரியாக கணிப்பது பொருளாதார வல்லுநர்களுக்கே பெரிய சவாலாக இருந்து வந்தது.

இந்த குழப்பத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக, ஆந்த்ரோபிக் (ANTHROPIC) என்ற முன்னணி நிறுவனம் ஒரு பிரத்யேகமான சிஸ்டமை உருவாக்கியுள்ளது. வேலைவாய்ப்பின்மை தரவுகள் வருவதற்கு முன்பாகவே, எந்தெந்த வேலைகளை ஏஐ ஆக்கிரமிக்கப் போகிறது என்பதை முன்கூட்டியே கண்டுபிடிப்பதுதான் இந்த சிஸ்டமின் முக்கிய நோக்கம். அந்த சுவாரஸ்யமான ரிப்போர்ட் பற்றி தெரிந்து கொள்ளலாம் வாங்க.

### எப்படி கணக்கிடுகிறார்கள்!

ஆந்த்ரோபிக் நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் இதற்காக ஒரு புதிய அணுகுமுறையை கையாண்டுள்ளார்கள். ஒருவரின் பதவி பெயரை மட்டும் வைத்து அவருடைய வேலைக்கு ஆபத்து இருக்கிறதா என்பதை இவர்கள் முடிவு செய்வது கிடையாது. அவர் தினமும் அலுவலகத்தில் செய்யும் ஒவ்வொரு சின்னச் சின்ன வேலைகளையும் தனித்தனியாக பிரித்து



பார்க்கிறார்கள். அந்த வேலைகளில் எத்தனை சதவீதத்தை ஒரு ஏஐ டூல் மூலம் சுலபமாக செய்து முடிக்க முடியும் என்பதை பொறுத்தே இந்த ஆபத்து மதிப்பீடு வழங்கப்படுகிறது. இது முந்தைய கணிப்புகளைவிட மிக மிக துல்லியமானஒருமுறையாகப் பார்க்கப்படுகிறது.

### எந்த வேலைகளுக்கு ஆபத்து!

இந்த ரிப்போர்ட்டின் முடிவுகள் ஐடி துறையில் இருப்பவர்களுக்கு நிச்சயம் ஒரு பெரிய கலக்கத்தை ஏற்படுத்தும். குறிப்பாக கம்ப்யூட்டர் ப்ரோக்ராமர் களுக்குத்தான்முதல்ஆபத்து என சொல்லப்பட்டுள்ளது. அவர்கள் செய்யும் வேலைகளில் சுமார் எழுபத்தி ஐந்து சதவீதத்தை ஏஐ மிக சுலபமாக செய்து முடித்துவிடுகிறது. இவர்களைத் தவிர வாடிக்கையாளர் சேவை மையங்களில் வேலை பார்ப்பவர்கள், டேட்டா என்ட்ரி செய்பவர்கள் மற்றும் மெடிக்கல் ரெக்கார்ட்ஸ் பராமரிப்பவர்களுக்கும் சிக்கல் அதிகம். ஒரே வேலையைதிரும்பத்திரும்ப செய்யும்எந்தஒருஅலுவலகப் பணியாக இருந்தாலும் அதை ஏஐ மிக எளிதாக மாற்றி அமைத்துவிடும்.

### ஏஐ-யிடம் தப்பிக்கும் வேலைகள்!

அதே சமயம், நேரடியாக களத்தில் இறங்கி உடல் உழைப்பை கொடுக்கும் வேலைகளுக்கு இப்போதைக்கு எந்த ஒரு ஆபத்தும் இல்லை என இந்த ஆய்வு அடித்துச் சொல்கிறது.

உதாரணமாக, ஹோட்டல்களில் சமையல் செய்பவர்கள், பாத்திரங்களை கழுவுபவர்கள் மற்றும் நீச்சல் குளங்களில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுபவர் களின் வேலைகளை ஏஐ-யால் ஒருபோதும் செய்ய முடியாது.

மனிதர்களின் நேரடி தொடுதலும், உடல் ரீதியான செயல்பாடுகளும் தேவைப்படும் எந்த ஒரு துறையாக இருந்தாலும் அவர்கள் தற்போதைக்கு நிம்மதி பெருமூச்சு விடலாம்.

வேலை பறிபோகும் அபாயம் தொடங்கிவிட்டதா?

இவ்வளவு ஆபத்துகள் இருந்தாலும், இப்போதே கொத்து கொத்தாக வேலைகள் பறிபோய்விட்டதா என்றால் அதுதான் இல்லை. CHATGPT வந்த பிறகு வேலை வாய்ப்பின்மை பெரிய அளவில் மோசமாகிவிடவில்லை.

ஆனால் இதில் நாம் கவனிக்க வேண்டிய ஒரு அதிர்ச்சியான விஷயம் இருக்கிறது. புதிதாக வேலை தேடும் 22 முதல் 25 வயதுடைய இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள் தற்போது மெல்ல மெல்ல குறையத் தொடங்கியுள்ளன.

நிறுவனங்கள் என்ட்ரி லெவல் வேலைகளுக்கு ஆட்களை எடுப்பதற்கு பதிலாக ஏஐ டூல்களை பயன்படுத்த ஆரம்பித்துவிட்டார்கள் என்பதுதான் இதற்கான முக்கிய காரணம்.

எனவே, ஐடி மற்றும் அலுவலக பணிகளில் இருப்பவர்கள் தங்களைத் தொடர்ந்து அப்டேட் செய்துகொள்வது மட்டுமே இதிலிருந்து தப்பிப்பதற்கான ஒரே வழியாகும். ஏஐ செய்ய முடியாத புதிய திறன்களை வளர்த்துக் கொள்வதன் மூலம் இந்த தொழில்நுட்ப மாற்றத்தை நாம் மிக எளிதாக எதிர்கொள்ளலாம்.

# நதியுடன் ஒரு மாலைப் பொழுது



அன்று அலுவலகத்தில் ஏகப்பட்ட வேலைப்பளு. மனதின் சோர்வை நீக்க ஊருக்கு ஒதுக்குப்புறமாக ஓடும் அந்தச் சிறிய நதிக்கரைக்குச் சென்றேன். அங்கே ஒரு பாறையின் மீது அமர்ந்து, சலசலவென ஓடும் நீரைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

"ஏன் இத்தனை வேகம்? உனக்குத்தான் அலுக்காதா?" என்று சத்தமாகவே கேட்டுவிட்டேன்.

யாரோ சிரிக்கும் சத்தம் கேட்டது. சுற்றும் முற்றும் பார்த்தேன், யாருமில்லை. சட்டென ஒரு மெல்லிய நீர்த்துளி என் முகத்தில் தெறித்தது.

"எனக்கென்ன அலுப்பு? நான் ஓடிக்கொண்டே இருப்பதால் தான் இந்த ஊரே உயிர்ப்புடன் இருக்கிறது," என்றது அந்த நதி. அதன் குரலில் ஒருவித கம்பீரம் இருந்தது.

"உண்மைதான். ஆனால், மக்கள் உன்னை எவ்வளவு அசுத்தம் செய்கிறார்கள்? பிளாஸ்டிக் பைகளையும், குப்பைகளையும் உன் மடியில் கொட்டும்போது உனக்கு வலிக்கவில்லையா?" என்று ஆதங்கத்துடன் கேட்டேன்.

நதி சற்று மௌனமாக ஓடியது. பிறகு மெல்லப் பேசியது:

"வலி இருக்கிறது நண்பா. ஆனால், நான் வெறும் தண்ணீர் மட்டுமல்ல, நான் ஒரு தாய். என் குழந்தைகள் செய்கிற தவறுக்காக நான் ஓடுவதை நிறுத்தினால், இந்தப் பூமியில் பசுமை அழிந்துவிடும். நான் அழுக்கையும் சுமப்பேன், ஆனால் அதே சமயம் அவற்றைச் சுத்திகரித்து மீண்டும் கடலுக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பேன். என் கடமை கொடுப்பது மட்டுமே."

அதன் பதிலில் இருந்த முதிர்ச்சி என்னை மௌனமாக்கியது.

"நீங்கள் மனிதர்கள் தான் விசித்திரமானவர்கள். இயற்கையைச் சிதைத்துவிட்டு, பின் அமைதி தேடி மீண்டும் என்னிடமே வருகிறீர்கள். என்னைப் பாராட்டுவதை விட, என்னைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துங்கள். அதுதான் நீங்கள் எனக்குச் செய்யும் உண்மையான நன்றிக்கடன்," என்று கூறிவிட்டு நதி தொடர்ந்து தன் பயணத்தைத் தொடர்ந்தது.

வீட்டிற்குத் திரும்பும்போது என் மனம் லேசாகியிருந்தது. அதே சமயம், இனி ஒருபோதும் ஒரு சிறு குப்பையைக் கூட நீர்நிலைகளில் வீசக்கூடாது என்ற உறுதியோடும், இயற்கையைப் போற்றும் எண்ணத்தோடும் நடக்கத் தொடங்கினேன்.

-லால்குடி வெ.நாராயணன்

# ஆட்டோ ஆறுமுகம்!

சிணுங்கிய கைப்பேசியியை எடுத்துப் பேசினாள் லதா. எதிர் முனையில் அவள் கணவன் சங்கர்தான் பேசினான். 'ஒரு 150 ரூபாய் சில்லறையுடன் வீட்டிற்கு வெளியே வா. நான் ஓலாவிற்கு ஓதி விட வேண்டும். என்னிடம் சில்லறையாக இல்லை.'என்று சொல்லிவிட்டு ஃபோனை வைத்து விட்டான்.

அடுத்த சில நிமிடங்களில் ஆட்டோ லதாவின் வீட்டு வாசலில் வந்து நின்றது. சில்லறையாக 150 ரூபாய் எடுத்துக் கொண்டு லதா ஆட்டோவின் அருகில் சென்றாள்.

ஆட்டோ டிரைவர் ஆறுமுகம் அவளைப் பார்த்து அதிர்ந்து போனான்.கூடவே இருவருக்கும் இருந்த மகிழ்ச்சி அவர்கள் முகத்தில் தெரிந்தது. அவளிடம்,'வேண்டாம்மா. நீயே வச்சுக்கோ' என்று சொல்லிவிட்டு புறப்படத் தயாரானான்.

அவனை யார் என்று அடையாளம் கண்டுக் கொண்ட லதா, 'வீட்டுக்கு உள்ளே வந்து ஒரு கப் டீ குடிச்சிட்டு போ' என்று சொன்னாள்.

'இல்லைம்மா. .எனக்கு அடுத்த சவாரி தயாராக இருக்கிறது' என்று சொல்லி அடுத்த சவாரியை பிக் அப் பண்ண அவசர, அவசரமாக புறப்பட்டுப் போனான் அவன்.

ஆச்சரியத்துடன் இதை பார்த்துக் கொண்டிருந்த சங்கர் வீட்டிற்குள் நுழைந்ததும் லதாவிடம் ஆட்டோக்காரனைப் பற்றி விசாரித்தான்.

லதா, 'அவன் பெயர் ஆறுமுகம். என்னுடைய பெரியப்பாவின் மகன். அவனுடைய அப்பாவிற்கும் என்னுடைய அப்பாவிற்குமிடையே சொத்து தகராறு. நீதிமன்றம் வரை சென்று அவனுடைய அப்பா என்னுடைய அப்பாவின் சொத்தையும் பலவந்தமாக எடுத்துக் கொண்டார். இதில் மனம் நொந்துப் போன என்னுடைய அப்பா நோயில் படுத்து



இறந்து விட்டார்' என்று சொல்லி முடித்தாள்.

சில வருடங்களுக்குப் பிறகு இவன் என்னிடம் வந்தான்.' என் அப்பா செய்தது தவறு. பிறர் சொத்துக்கு அவர் ஆசைப்பட்டார். ஆனால் நான் அவரைப் போல ஆசைப்படவில்லை. இப்பொழுது அவர் இறந்துவிட்டார். உன்னுடைய அப்பாவின் வீட்டை நீயே எடுத்துக் கொள். என் அப்பாவிற்கு நான் ஒரே பையன். நான் பத்திரம் எழுதிக் கொடுத்து விடுகிறேன்' என்று சொன்னான்.

நான், 'என் அப்பா கொடுத்தது கொடுத்ததுதான். திரும்ப வாங்கிக் கொள்ள மாட்டேன்' என்று தீர்க்கமாக அவனிடம் சொல்லிவிட்டேன்.

எனது அம்மாவும் எனது முடிவுக்கு 'சரி' என்றாள். அதற்குப் பிறகு அவனை இன்று தான் பார்க்கிறேன்.

பள்ளிக்கு போகும் பொழுது, அவன் தான் என்னை சைக்கிளில் அழைத்துச் செல்வான். நல்ல பாசக்கார அண்ணன். அதற்குப் பிறகு நான் உங்களை போன மாதம் திருமணம் செய்து கொண்டு சென்னைக்கு வந்து விட்டேன்.

அவன் சென்னையில் இருக்கிறான் என்பது தெரியும் ஆனால் ஆட்டோ ஓட்டிப் பிழைக்கிறான் என்பது இன்று தான் எனக்கு தெரியும். அவருடைய கைபேசி எண்ணை கொடுங்கள். ஆட்டோ புக் பண்ணும் போது உங்களுக்கு வந்திருக்கும்'என்று சொல்லியபடியே கணவனிடமிருந்து ஃபோனை வாங்கி அவனுடைய ஃபோன் எண்ணை எடுத்துக் கொண்டாள்.

'நான் அவனுடன் பேசி ஒரு நாள் வீட்டிற்கு வரச் சொல்கிறேன். என் பாசக்கார அண்ணனை நான் என்றும் மறக்கக்கூடாது. இந்த காலத்திலும் சொத்துக்கு ஆசைப்படாமல் பாசத்துக்கு ஆசைப்படும் அண்ணன்'அடுக்கிக் கொண்டே போனாள் லதா. அவளப் பார்த்து வியந்து போனான் சுந்தர்.

ஆட்டோ அண்ணன் சொல்லியபடி மறுநாள் அவன் மனைவியுடன் லதாவைப் பார்க்க வந்தான். பேச்சின் இடையில் கிராமத்து வீட்டைப் பற்றியும் பேச்சு வந்தது. தற்போது அவர்கள் இருவரின் வீடுகளும் முதியோர் இல்லமாக மாறிவிட்டதாகவும் அதில் 25 ஆதரவற்ற முதியோர்கள் தங்கி வருவதாகவும் கூறினான் ஆட்டோ அண்ணன் ஆறுமுகம். அவர்களுக்கு தேவையான உதவிகளை அரசு அளித்து வருவதாகவும் லதா அறிய வந்தாள். அண்ணனை வியந்து அண்ணாந்து பார்த்தாள் லதா.அவள் கணவன் சங்கரும்தான்.



முனைவர் என்.பத்ரி

ஆதம்பாக்கம், சென்னை


# திருவிளையாடல் புராணம் 26



சிவ.முத்து லட்சுமணன்

போச்சம்பள்ளி.

## மாபாதகம் தீர்த்த படலம்



மாபாதகம் தீர்த்த படலம் இறைவனான சோமசுந்தரர் தந்தையைக் கொன்றதால் மகனுக்கு மாபாதகமான பிரமகத்தி தோசத்தை நீக்கி அவனுக்கு நற்கதி அளித்ததைக் குறிப்பிடுகிறது.

குலோத்துங்க பாண்டியன் மதுரையை சீரும் சிறப்புமாக ஆட்சி செய்த காலத்தில், அவந்தி நகரில் வேதியர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் ஒழுக்கசீலராகவும், முறையான வாழ்வினை உடையவராகவும் இருந்தார். அவருக்கு ரதியைப் போன்ற அழகான மனைவி இருந்தாள். அவர்களுக்கு மகன் ஒருவன் பிறந்தான். அவன் துர்குணம் மற்றும் கெட்ட நடத்தைகள் உடையவனாக இருந்தான். தன்னுடைய பெற்றோர்களிடம் இருந்த செல்வத்தைக் கவர்ந்து சென்று விலை மகளிரிடம் கொடுத்து சிற்றின்பம் அனுபவித்து வந்தான்.

ஒரு கட்டத்தில் மகனுடைய கெட்ட நடத்தையால் அவர்களிடம் இருந்த செல்வ வளம் குன்றவே அவர்கள் குடிசைக்கு வந்தனர். விலை மகளிருக்கு கொடுக்க செல்வம் இன்றி அவன் சிற்றின்பத்திற்காக தனது தாயை நிர்பந்தித்தான். இதனை அறிந்த அவனுடைய தந்தை தன்னுடைய ஊழ்வினை மகன் வடிவில் வருத்துவதாக மிகவும் வருந்தினார். தாயை நிர்பந்தித்ததால் தந்தை அவனை கண்டித்தார். இதனை விரும்பாத அவன் தந்தை என்றும் பாராமல் தந்தையைக் கொன்றான். பின் தனது தாயையும், கை கொள்ளும் அளவுப் பொருளையும் எடுத்துக் கொண்டு கற்கள் நிறைந்த காட்டின் வழியே சென்றான். அப்போது அங்கிருந்த கொள்ளையர்கள் மகனிடமிருந்த பொருளையும், தாயையும் கவர்ந்து சென்றனர். வேதியனாகிய தந்தையைக் கொன்றதால் மகனுக்கு மாபாதகம் என்கின்ற பிரம்மகத்தி பாவம் பிடித்தது.அதனால் அவன் உடல் மெலிந்து நோய்வாய்ப்பட்டதோடு மனதளவிலும் பெரிதும் பாதிப்படைந்து அங்கும், இங்குமாக சுற்றித் திரிந்தான்.

இறுதியில் சொக்கநாதர் குடிகொண்டிருக்கும் மதுரையம்பதியை அடைந்தான். அங்கு அவன் திருகோவிலின் அருகே செய்வது அறியாது திகைத்து நின்று கொண்டிருந்தான்.

இறைவனான சொக்கநாதர் வேடுவனானகவும், மீனாட்சியம்மை வேட்டவச்சியாகவும் வடிவம் கொண்டு சூதாடிக் கொண்டிருந்தனர். அப்போது இறைவனார் அம்மையிடம் இளைஞனான மாபாதகனையும், அவன் செய்த தவறுகள் குறித்தும் கூறினார். பின்னர் இறைவனார் அம்மையிடம் “கள்ளுண்ணலும், சிற்றின்பம் துய்த்தலும் அறிவைக் கெடுக்கும். இவற்றில் கள்ளானது உண்டால் மட்டுமே அறிவைக் கெடுக்கும். சிற்றின்பத்தை எண்ணுதலும், பார்த்தலும், கேட்டலும் ஆகியவை தலையில் கொடிய விசம் போல் பரவி அறிவினைக் கெடுத்து விடும். முறையற்ற சிற்றின்பம் கொலைக்கு காரணமாகி விடும். இறுதியில் அழிவினையும் கொடுக்கும்” என்று கூறினார்.

பின்னர் நோய்வாய்பட்ட இளைஞனிடம் சென்ற இறைவனான வேடுவன் “இளைஞனே, உனக்கு ஏன் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டது?” என்று கேட்டார். வேடுவன் கேட்டதும் அவ்விளைஞன் தன்னுடைய தவறுகளை எல்லாம் எடுத்துக் கூறி அவற்றிற்காக அழுதான். இளைஞனிடம் கருணை கொண்ட இறைவனான வேடுவன் “சரி, நீ படும் துன்பத்திற்கு தீர்வு கூறுகிறேன். கேள். நீ கையால் பிச்சை எடுத்து தினமும் ஒருபொழுது மட்டும் உண்ண வேண்டும். சிவனடியார்களுக்கு தொண்டு செய். சூரியன் உதிப்பதற்கு முன்பே எழுந்து பசுக்களுக்கு அருகம்புல் கொடு. பொற்றாமரைக் குளத்தில் திருகோவில் தினமும் அங்கப்பிரதட்சிணம் செய். இவ்வாறு செய்து வந்தால் உன்னுடைய பழி நீங்கும்.” என்று அருளினார்.இதனைக் கேட்டுக் கொண்டிருந்த உமையம்மையாகிய வேட்டுவச்சி இறைவனாரிடம் “ஐயனே, உலகில் நல்லோர்கள் எத்தனையோ பேர்கள் உள்ளனர். அவர்களுக்கு தாங்கள் அருள்புரியாது, மாபாதகத்தை செய்த இப்பாவிக்கு அருள்புரிவது ஏனோ?” என்று கேட்டார். அதற்கு இறைவனார் “நல்லவர்கள் இப்பூமியில் நன்றாக வாழ வேண்டும் எனில் கெட்டவர்கள் திருந்த வேண்டும். மாபாதகம் புரிந்த இவ்விளைஞன் இன்றைக்கு அதற்குரிய தண்டனையும் அனுபவித்து அதனைத் தீர்க்க வழி தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறான். அவனையும் காப்பாற்றி நல்வழிப் படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் அவனுக்கு அருள்புரிந்தேன்” என்று விளக்கம் கூறினார். அதற்கு உமையம்மை “தங்களுடைய திருவிளையாடலைப் புரிந்து கொள்பவர் யார்?. ஆட்டுபவரும், ஆட்டுவிப்பவரும் தாங்களே” என்று கூறினார். பின்னர் இருவரும் மறைந்தருளினர். இளைஞனும் இறைவனான வேடுவர் சொன்னபடி நடந்து வந்தான். சிலநாட்களில் அவனுடைய பாவங்கள் நீங்கியதால் நோய் நீங்கப் பெற்றான். பின் அந்த இளைஞன் ஒழுக்கமானவனாக மாறி சிவசிந்தனையுடன் வாழ்ந்து இறுதியில் இறைவனின் திருவடியை அடைந்தான்.

முறையற்ற சிற்றின்பம் கொலைக்கு காரணமாகி இறுதியில் அழிவினைத் தரும் என்பதே இப்படலம் கூறும் கருத்தாகும்.

(தொடரும்)

# கனவில் யானை வந்தால் அதிர்ஷ்டம் உங்கள் கதவைத் தட்டும்!

மனித வாழ்க்கையில் கனவுகள் ஒரு மர்மமான உலகம் போல இருக்கின்றன. நாம் விழித்திருக்கும் போது நினைத்த விஷயங்களே சில நேரங்களில் கனவாக வருகிறது என்று அறிவியல் கூறினாலும், அதுவே எல்லா கனவுகளுக்கும் பொருந்தாது. ஏனெனில்... நாம் ஒருபோதும் நினைக்காத காட்சிகள், நாம் அறியாத இடங்கள், நாம் சந்திக்காத மனிதர்கள் என பல விசித்திரமான அனுபவங்கள் கனவுகளில் தோன்றுகின்றன. அதனால் தான் பல ஆன்மீகவாதிகள் கூறுவது என்னவென்றால் — சில கனவுகள் நம் எதிர்காலத்தை முன்கூட்டியே உணர்த்தும் சின்னங்களாக இருக்கலாம். அந்த வகையில், விலங்குகளில் மிகப் பெரியதும் வலிமையானதுமான யானையை கனவில் காண்பது மிகவும் முக்கியமான ஆன்மீக அறிகுறியாக கருதப்படுகிறது. யானை என்பது சாதாரண விலங்கு அல்ல. அது விநாயகப் பெருமானின் வடிவம் என்று பக்தர்கள் கருதுகின்றனர்.

மேலும் யானை தொடர்புடையவை:
மகாலக்ஷ்மி
இந்திரன்
அரசாட்சி
செல்வம்
செழிப்பு போன்றவை.

எனவே யானை கனவில் தோன்றுவது பெரும்பாலும் நல்ல சகுனம் எனக் கருதப்படுகிறது. ஆனால் சில சமயங்களில் அது எச்சரிக்கையையும் தரக்கூடும்.

இப்போது யானை கனவில் வந்தால் என்னென்ன அர்த்தங்கள் இருக்கலாம் என்பதை விரிவாகப் பார்ப்போம்.




**1. கனவில் வெள்ளை யானையை கண்டால்**

வெள்ளை நிற யானை மிகவும் அபூர்வமானது. இந்திரனின் வாகனமான ஐராவதம் வெள்ளை நிற யானையாகவே புராணங்களில் குறிப்பிடப்படுகிறது. எனவே கனவில் வெள்ளை யானையை கண்டால்: உங்கள் வாழ்க்கையில் உயர்ந்த நிலை கிடைக்கலாம், தலைமைப் பொறுப்பு அல்லது பதவி கிடைக்கலாம், நீண்ட காலமாக இருந்த பிரச்சனைகள் விரைவில் தீரலாம். வெள்ளை யானை அமைதி, ஆன்மீகம், தெய்வ அருள் ஆகியவற்றின் அடையாளமாக கருதப்படுகிறது.

**2. கனவில் கருப்பு யானையை கண்டால்**

பழங்காலத்தில் அரசர்களின் முக்கிய வாகனம் யானை. ஒரு அரசன் வாரிசு இல்லாமல் இறந்துவிட்டால் புதிய அரசனை தேர்ந்தெடுக்க பட்டத்து யானை பயன்படுத்தப்பட்டதாக வரலாற்றில் கூறப்படுகிறது. எனவே கனவில் கருப்பு யானை வந்தால்: அரசாங்க வேலை வாய்ப்பு, அரசு தொடர்பான ஒப்பந்தம், அதிகாரம் அல்லது பதவி போன்ற வாய்ப்புகள் வரக்கூடும் என்று கருதப்படுகிறது.

**3. கனவில் யானை மீது சவாரி செய்தால்**

நீங்கள் யானையின் மீது சவாரி செய்வதாக கனவு கண்டால் அது மிகவும் நல்ல சகுனம். அதன் அர்த்தம்: உங்கள் எதிரிகளை நீங்கள் வெல்வீர்கள், உங்கள் திறமை உலகிற்கு தெரியும், தலைமைத்துவம் பெறும் வாய்ப்பு வரும் இது உங்கள் அறிவு மற்றும் தன்னம்பிக்கைக்கு கிடைக்கும் அங்கீகாரம் ஆகும்.

**4. கனவில் யானையை ஜோடியாக கண்டால்**

யானை தனது துணையுடன் கனவில் தோன்றினால் அது பெரும்பாலும் திருமண அதிர்ஷ்டத்தை குறிக்கும். திருமணம் ஆகாதவர்களுக்கு விரைவில் நல்ல துணை கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

**யானைகள்:**

அன்பு, விசுவாசம், ஒற்றுமை என்பதன் அடையாளமாக இருப்பதால் இந்த கனவு கணவன்-மனைவி உறவு உறுதியடையும் என்பதையும் குறிக்கிறது.

**5. கனவில் யானைக் கூட்டம் வந்தால்**

யானைகள் மிகவும் ஒற்றுமையுடன் வாழும் விலங்குகள்.அவை எப்போதும் கூட்டமாகவே பயணம் செய்யும். அதனால் கனவில் யானைக் கூட்டம் தோன்றினால்: குடும்பத்தில் இருந்த சச்சரவுகள் முடியும், உறவினர்களுக்குள் ஒற்றுமை வரும், குடும்பம் அமைதியாகும் என்பதற்கான அறிகுறியாக கருதப்படுகிறது.

**6. கனவில் யானை ஆசி வழங்கினால்**

யானை தும்பிக்கையால் உங்களைத் தொடுவது அல்லது ஆசீர்வதிப்பது போல கனவு வந்தால் அது மிகச் சிறந்த கனவாக கருதப்படுகிறது. இதன் அர்த்தம்: இறைவனின் அருள் உங்களுக்கு உள்ளது, நீங்கள் தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும், தடைப்பட்ட வேலைகள் நிறைவேறும் இது விநாயகப் பெருமானின் அருள் கிடைக்கும் அறிகுறி என்றும் கூறப்படுகிறது.

**7. கனவில் யானை உங்களை துரத்தினால்**

யானை உங்களைத் துரத்துவது போல கனவு வந்தால் அது ஒரு எச்சரிக்கை கனவு ஆக இருக்கலாம். அதன் அர்த்தம்: ஒரு பெரிய பிரச்சனை உங்களை அணுகி வருகிறது; அதை சமாளிக்க நீங்கள் தயாராக வேண்டும் இது நிஜ வாழ்க்கையில் பிரச்சனைகளை தவிர்க்காமல் துணிவுடன் எதிர்கொள்ள வேண்டும் என்பதைக் கூறுகிறது.

**8. கனவில் யானை தாக்கினால்**

யானை உங்களை தாக்குவது போல கனவு வந்தால் அது சில சமயங்களில் கவனமாக இருக்க வேண்டிய அறிகுறி. இதன் அர்த்தம்: உடல்நலத்தில் சிறிய பிரச்சனைகள் வரலாம், உங்கள் வேலைகளில் தடைகள் தோன்றலாம் எனவே இந்த கனவு வந்தால் நாம் முன்கூட்டியே கவனமாக இருப்பது நல்லது.

**9. கனவில் மெலிந்த யானையை கண்டால்**

மெலிந்த அல்லது பலவீனமான யானையை கனவில் காண்பது ஒரு எச்சரிக்கை அறிகுறி. அதன் அர்த்தம்: நீங்கள் சோம்பேறியாக இருக்கலாம் உழைப்பை அதிகப்படுத்த வேண்டும் மேலும் இது: நிதி பற்றாக்குறை, பொருளாதார சிக்கல் போன்றவற்றையும் உணர்த்தக்கூடும்.

**10. கனவில் யானை உங்கள் ஊருக்குள் வந்தால்**

யானைகள் செல்வம் மற்றும் செழிப்பின் அடையாளம். கனவில் யானை ஊருக்குள் வருவது போல தோன்றினால்: நல்ல மழை பெய்யும், விளைச்சல் அதிகமாகும், அந்த இடம் செழிப்படையும் என்று பாரம்பரிய நம்பிக்கை கூறுகிறது. கனவுகள் பற்றிய ஒரு பாரம்பரிய நம்பிக்கை பழமையான பாரம்பரியத்தில் ஒரு சுவாரசியமான கருத்து உள்ளது.

**பெரியோர்கள் கூறுவது:**

நல்ல கனவுகளை வெளியில் சொல்லாமல் வைத்தால் அது நிறைவேறும். கெட்ட கனவுகளை மற்றவர்களிடம் கூறிவிட்டால் அதன் தாக்கம் குறையும். ஆனால் இதை ஒரு முழுமையான விதியாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில்... கனவுகளின் பலன்கள் மிகவும் சுவாரசியமானவை என்றாலும் அவை எல்லோருக்கும் ஒரே மாதிரி நடக்கும் என்று உறுதியாக கூற முடியாது. எனினும், கனவுகள் நம் மனதின் ஆழத்தில் இருக்கும் உணர்வுகளையும் சில நேரங்களில் நம் வாழ்க்கையின் சின்னங்களையும் வெளிப்படுத்துகின்றன.



**ப.கோபிபச்சமுத்து**
புதுப்பேட்டை,
கிருஷ்ணகிரி - 1

# தினம் ஒரு தலைவர்கள் — கி.த.பச்சையப்பன் வரலாறு

கி. த. பச்சையப்பன் (23 அக்டோபர், 1935 - 20 செப்டம்பர், 2018) புதுவையைச் சேர்ந்த தமிழ் உணர்வாளரும், மூத்த தமிழறிஞரும் ஆவார். தமிழாசிரியராக பணியாற்றிய இவர் தமிழாசிரியர் கழகத்தின் மாநிலப் பொறுப்பாளராகவும் நீண்ட காலம் செயல்பட்டார். இந்திய சுதந்திர போராட்டத்திலும், பிரெஞ்சிந்திய விடுதலைப் போராட்டத்திலும், இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டவராவார். தமிழறிஞர், மொழிப் போராட்டத் தியாகி, ஈழத் தமிழ் உணர்வாளர், சென்னை ஆசிரியர் சங்கம், தமிழகத் தமிழாசிரியர் கழகம் மற்றும் தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் தலைவர் என தமிழுக்காக தன் வாழ்க்கையை தகவமைத்துக் கொண்ட புலவர் பச்சையப்பன், பல்வேறு போராட்டங்களில் பங்கு கொண்டு சுமார் 70 ஆண்டுகள் பொதுவாழ்க்கைக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். தனித்தமிழைப் பாதுகாக்கும் பல்வேறு கருத்தரங்குகள், கூட்டங்கள், உரையரங்கங்கள் நடத்தியும் பங்கேற்றும் தமிழ்மொழியின் உயர்விற்காகவும் பாடுபட்டவர்.



**பிறப்பும் இளமைக்காலமும்**

1935 ஆம் ஆண்டு புதுச்சேரி குயவர்பாளையத்தில் கி.தங்கவேல், தனம் அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். பள்ளிப் படிப்பை முடிக்கும் காலத்தில், பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்த புதுச்சேரியின் விடுதலைக்கான இயக்கத்தில் சேர்ந்தார். இதனால் அவரின் பள்ளி இறுதி வகுப்பு தடைப்பட்டது. தமிழகத்தின் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் புலவர் படிப்பில் சேர்ந்தார். பிரெஞ்சிந்திய விடுதலைப் போராட்ட ஈடுபாடு காரணமாக இங்கும் படிப்பு தடைப்பட்டது. இவர் 1954 ஏப்ரல் 13ஆம் தேதி இந்திய தேசியக் கொடியை ஏற்றியதால், பிரெஞ்சு காவல்துறையால் தாக்கப்பட்டார். அதையொட்டி தமிழகப் பகுதியில் ஆறு மாதங்களுக்கும் மேல் தலைமறைவாக இருந்தார். பின்னர், திண்டிவனத்தை அடுத்த மயிலத்தில் தமிழ் வித்துவான் படிப்பை முடித்தார்.

**ஆசிரியப் பணி**

சென்னையில் பள்ளி ஆசிரியராகப் பணியைத் தொடங்கிய பச்சையப்பன், சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் அரசுப் பள்ளிகளில் தமிழாசிரியராகப் பணியாற்றி மேனிலைப்பள்ளித் தலைமையாசிரியராக ஓய்வுபெற்றார். தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் தலைவராகவும், தமிழகத் தமிழாசிரியர் கழகத்தின் மாநிலப் பொறுப்பாளராகவும் நீண்ட காலம் செயல்பட்டார்.

**ஊடகவியல் பணி**

அன்றாடச் செய்தியில் தனித்தமிழ்ச் சொற்களைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவந்ததில், புலவர் கி. த. பச்சையப்பனுக்கு முக்கிய பங்கு உண்டு. பத்திரிகை உலகில் குறிப்பிடத்தக்கபடியாக, ‘தமிழ் ஓசை’ நாளேட்டில் மொழிநடை ஆசிரியராக பணிபுரிந்த இவர், மக்கள் தொலைக்காட்சியில் பயன்படுத்தப்படும் தனித்தமிழ்ச் சொற்களை கொண்டு வந்த முயற்சியில் முக்கிய பங்கு வகித்தார். இதனையடுத்தே பெரும்பாலான நவீன ஆங்கிலச் சொற்களுக்கு தமிழ் வார்த்தைகளும் புழக்கத்தில் வந்தன. அதன் தாக்கத்தில் இன்றைய 24 மணி நேரத் தொலைக்காட்சிகளில் தனித்தமிழ்ச் சொற்கள் புழக்கத்துக்கு வந்தன.

**தமிழ் பணிகள்**

பச்சையப்பனார் சென்னை அரசுப் பள்ளிகளில் தமிழாசிரியராகவும், தலைமை ஆசிரியராகவும் பணியாற்றினார். தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் தலைவராகவும், தமிழகத் தமிழாசிரியர் கழகத்தின் தலைவராகவும் நீண்ட காலம் செயல்பட்டார். ஊடகம் மற்றும் அச்சு துறையில் ஆங்கிலம் மற்றும் இந்தி ஆதிக்கம் இருந்த போது தமிழ் மொழியையும் டிஜிட்டல் யுகத்துக்கு கொண்டு வந்தார். தமிழைச் செம்மொழியாக அறிவிக்குமாறு டெல்லிக்கும் சென்று முழக்கமிட்டார். தமிழ்த் தாத்தா உ. வே. சா வாழ்ந்த சென்னை இல்லத்தை நினைவிடமாக்க வேண்டும் என முதல்வர் பழனிசாமியிடம் வேண்டுகோள் விடுத்தார்.

**போராட்ட வாழ்வு**

பிரெஞ்சிந்திய விடுதலைப்போராட்டத்தின் போது புதுச்சேரி இந்தியாவுடன் இணைய வேண்டும் என்று முழக்கமிட்ட இவர் ஈழத் தமிழர்களுக்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தார். 1999-ல் தமிழ்வழிக் கல்விக்காக நூறு தமிழறிஞர்கள் கலந்துகொண்ட சாகும்வரை உண்ணாவிரதத்தில் முன்னிலையாகப் பங்கேற்றார். பின்னர், அப்போதைய தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் அழைத்துப் பேசி, அந்த உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டது. அந்தப் பேச்சுவார்த்தையில் இவர் முக்கியமாகப் பங்கேற்றார். பின்னர், சக தமிழறிஞர்களுடன் திரளாக டெல்லிக்குச் சென்று செம்மொழியாக தமிழை அறிவிக்குமாறு கோரி 2002 காலகட்டத்தில் போராட்டம் நடத்தினார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

# அஜித் நல்ல குடும்பஸ்தர்.. அதுபோல விஜய்..





அண்மையில் ஒரு தனியார் கல்லூரி நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

அதில் நடிகர் விஜய் குறித்து அவரிடம் கேள்வி எழுபப்பட்டது. அதற்கு பதில் அளித்த அவர், மிகவும் எளிமையான, மென்மையான மனிதர். நடனம் ஆடுவதில் அவரும், ஜூனியர் என்.டி.ஆரும் தான் சிறந்தவர்கள்" என்று கூறினார்.

அதேபோல் அஜித் குறித்த கேள்வுக்கு பதில் அளித்த அவர், "வீரம் படப்பிடிப்பின்போது கேரவனில் வைத்து எனக்கு இட்லி செய்து கொடுத்தார். அவருக்கு சமைப்பது மிகவும் பிடிக்கும். அவர் மிகவும் நல்ல மனிதர், மென்மையானவர். நல்ல குடும்பஸ்தர்" என்று தெரிவித்தார்.

மேலும் நிகழ்வில் தனது முதல் திரைப்படமான 'கல்லூரி' படத்தை நினைவு கூர்ந்த அவர் மாணவ மாணவிகள் கல்லூரி வாழ்க்கையை ரசித்து வாழ வேண்டும் என்று தெரிவித்தார்.

அஜித்தின் 54 வது படமான வீரம் படத்திலும், விஜய்யின் 50 வது படமான சுறா படத்திலும் தமன்னா கதாநாயகியாக நடித்தது குறிப்பிடத்தக்கது.

# சீக்கிரமே சர்ப்ரைஸ் இருக்கு... வெற்றிமாறன்




இயக்குநர் வெற்றி மாறன் மற்றும் நடிகர் சிலம்பரசன் கூட்டணியில் உருவாகும் திரைப்படம் 'அரசன்.' அனிருத் இசையமைக்கும் இந்த திரைப்படம் வெற்றி மாறன் இயக்கத்தில் தனுஷ் நடித்து வெளியான வடசென்னை படத்தின் கதைக்களத்தில் உருவாகிறது. இந்தப் படத்தின் அறிவிப்பு வெளியானதில் இருந்தே படத்திற்கான எதிர்பார்ப்பு அதிகரித்து விட்டது.

படத்தின் முதல் அறிவிப்பு தொடங்கி, டைட்டில் மற்றும் இதர அப்டேட் வீடியோக்கள் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. இந்தப் படத்தினை இந்த ஆண்டுக்கு இறுதிக்குள் ரிலீஸ் செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. படத்தின் படப்பிடிப்பு தொடர்பான தகவல்களும் இணையத்தில் வெளியாகி வருகின்றன. இந்த நிலையில், இயக்குநர் வெற்றி மாறன் அரசன் படத்தின் அப்டேட் கொடுத்துள்ளார்.

இதுகுறித்து பேசிய வெற்றி மாறன், "இந்த முறை கதையை முழுமையாக எழுதி முடித்த பிறகே படப்பிடிப்புக்கு சென்றேன். எனது மற்றப் படங்களை விட இந்தப் படம் வேகமாக நிறைவடையும். சில நாட்களில் இந்தப் படத்தின் காட்சிகளில் சிலவற்றை எங்களால் வெளியிட முடியும். அதுவரை நாங்கள் இந்த விஷயதகில் அமைதி காக்க விரும்புகிறோம்," என்றார்.

அரசன் திரைப்படத்தில் நடிகர் சிலம்பரசன் இரட்டை வேடங்களில் நடிப்பதாகவும், நடிகர் விஜய் சேதுபதியும் இந்தப் படத்தின் முக்கிய கதாபாத்திரத்தில் நடிப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.



நடிகை விஷ்ணு பிரியா தெலுங்கு சினிமாவில் கவர்ச்சி நடிகையாகி வலம் வருபவர். அவர் கவர்ச்சியாக டான்ஸ் ஆடும் பாடல்கள் ரசிகர்கள் மத்தியில் அதிகம் பிரபலம் ஆகிறது.

தற்போது விஷ்ணு பிரியா தாராள கவர்ச்சி லுக்கில் ஹாட் போட்டோஷூட் நடத்தி இருக்கும் ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறார். அவரது ரசிகர்கள் மத்தியில் இந்த ஸ்டில்கள் வைரல் ஆகி வருகிறது.

# ஞானபீட விருது வென்ற வைரமுத்துவுக்கு சூப்பர் ஸ்டார் வாழ்த்து




இந்தியாவில் இலக்கியத்துக்கு வழங்கப்படும் உயரிய விருதான ஞானபீட விருது இந்தாண்டு கவிஞர் வைரமுத்துவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.


1975ல் எழுத்தாளர் அகிலனுக்கும், 2002ல் ஜெயகாந்தனுக்கும் இவ்விருது வழங்கப்பட்டது. தற்போது 24 ஆண்டுகளுக்குப் பின் தமிழ்நாட்டைச் சேர்ந்தவருக்கு இந்த விருது கிடைக்கிறது.

ஞானபீட விருது அறிவிக்கப்பட்ட பின் வைரமுத்துவுக்கு பல்வேறு தரப்பினர் வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், ஞானபீடம் விருது பெற்ற கவிஞர் வைரமுத்துவுக்கு சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ரஜினிகாந்த் கூறுகையில், நம் இந்திய நாட்டின் பெரும் மதிப்புமிக்க ஞான பீட விருதைப் பெற்றிருக்கும் என் அருமை நண்பர் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகள் என தெரிவித்துள்ளார்.

# வேதிகா நடனத்தில் சுல்தான் பாடல் வெளியானது




மலையாள சினிமாவில் ரசிகர்களிடம் கல்ட் காமெடி திரைப்படமாக தனி இடத்தை பெற்ற 'Aadu'. இப்படத்தின் வெற்றியை தொடர்ந்து அதன் தொடர்ச்சியான Aadu 2 திரைப்படமும் வெற்றி பெற்றது.

தற்போது அந்த சீரிஸின் மூன்றாவது பாகமான Aadu 3 உருவாகியுள்ளது.

இந்த படத் தொடரின் மையக் கதாபாத்திரமான ஷாஜி பாப்பன் கதாபாத்திரத்தில் மலையாள நடிகர் ஜெயசூரியா மீண்டும் நடித்துள்ளார். அவரின் வித்தியாசமான காமெடி நடிப்பு, உடல் மொழி மற்றும் டயலாக் டெலிவரி காரணமாக இந்த கதாபாத்திரம் ரசிகர்களிடம் மிகப்பெரிய வரவேற்பை பெற்றது.

2015-ல் வெளியான முதல் பாகம் துவக்கத்தில் பெரிய வெற்றி பெறவில்லை.

ஆனால் பின்னர் டிவி மற்றும் இணைய தளங்களில் கல்ட் ஹிட்டாக மாறியது.

அதனால் 2017-ல் வெளியான Aadu 2 மிகப்பெரிய வரவேற்பை பெற்றது.

இப்படத்தை மிதுன் மானுவல் தாமஸ் தான் இயக்கியுள்ளார். இப்படம் வருகிற 19 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ள நிலையில், இப்படத்தில் ஃபர்ஸ்ட் சிங்கிளான சுல்தான் பாடல் தற்போது வெளியாகியுள்ளது.

வேதிகாவின் நடனத்தில் உருவாகியுள்ள இப்பாடல் ரசிகர்களை வெகுவாக கவர்ந்துள்ளது.



தமிழ் சினிமாவில் தெய்வத்திருமகள், சைவம் உள்ளிட்ட ஏராளமான படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்தவர் சாரா அர்ஜுன். அவர் வளர்ந்த பின் பொன்னியின் செல்வன் படத்தில் நடித்திருந்தார்.

அதன் பின் ஹிந்தியில் துரந்தர் படத்தில் அவர் நடித்து இந்தியா முழுவதும் சென்சேஷன் ஹீரோயினாக மாறிவிட்டார். தற்போது புகழின் உச்சத்தில் இருக்கும் அவர் துரந்தர் 2 ரிலீசுக்காக காத்திருக்கிறார்.

இந்நிலையில் அழகிய உடையில் அவர் எடுத்த லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்களை வெளியிட்டுள்ளார். இதோ..




























தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE









## தன்னெஞ்சே தன்னைச் சுடும்!

நேரிசை வெண்பா!

நெஞ்சை ஒளித்திட
வஞ்சமே செய்யாதே
வஞ்சித்து வாழ்ந்தால்
வளம்தான்..கிஞ்சித்தும்
கிட்டாதே நண்பனே
கேண்மையுடன் வாழ்ந்தால்
எட்டுமே நன்னெஞ்சே ஏல்!

நெஞ்சம் அறிந்தேதான்
நேர்ந்திட்ட ஒன்றையே
வஞ்சித்துப் பேசாதே
மாண்பாக..எஞ்ஞான்றும்



பொய்யென்றே
மண்தான்
புகலுமே
ஆகவே
மெய்பேசல்
என்றுமே
மேல்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## எரிபொருள் !

காக்கைக்கு தெரியவில்லை
எரிபொருள் தட்டுப்பாடு...
வீட்டின் முற்றத்தில் அமர்ந்து
விருந்தினர் வருகையை
அறிவிக்கிறது !

முன்னர்
ஃபுல் டேங்க் பெட்ரோல்
அடித்தால் ' எந்த ஊருக்கு
டூர் !' என்று கேட்டவர்கள்....



"என்ன மாப்ள
பெட்ரோல்
சேஃப்டியா !'
என்கிறார்கள்!

ஒரே போர்...
மக்களின்
நிலைமை
அக்கப்போராகி விட்டது !

**எம்.பி.தினேஷ்.** கோவை

1. பணத்தை யாருக்காக
வேண்டுமானாலும்
செலவழித்துக்கொள்ளுங்கள்
நேரத்தைதகுதியானவர்களுக்கு
மட்டும் செலவு செய்யுங்கள்

2. பசித்தவருக்கு
உணவளித்தேன்
என்னை புண்ணியவான்
என்றார்கள்இவர்களுக்கு ஏன்
உணவு கிடைக்கவில்லை
என்று கேட்டேன்
என்னை கம்யூனிஸ்ட்
தீவிரவாதி என்றார்கள்

3. கனவை நிஜமாக்கி
காட்ட வேண்டும்
என்றால்
முன்வைத்த காலை பின்
வைக்காதே

4. வாழ்க்கையில் பாதி
நேரம் மனிதன் மகிழ்ச்சியாக
இருக்கும் ஒரே இடம்
கற்பனை செய்யும் நேரம்
மட்டுமே

5. கோவிலில் இருக்கும்
வரை கடவுள் என்றார்கள்



திருடு போன உடன்
சிலை என்றார்கள் யார்
என்பதை இருக்கும்
இடம்தான்
முடிவு செய்கிறது

**நடேஷ் கன்னா**
கல்லிடை குறிச்சி


## வெற்றிப் பயணம்

சின்ன முயற்சி கூட பெரிய
வெற்றிப்பாதையை காட்டும்
தவறுவது வெற்றிப் பாதையில்
முதல் படி உறக்கத்தில்
வரும் கனவு நிஜமாக அதுவே
வெற்றி.. எதைத் தொட்டாலும்
வெற்றி நிச்சயம் என்ற
வெற்றி முழக்கத்துடன்
தொடங்கி விட்டால்
போதுமே...
பிரச்சனை வந்தாலும்
பெரிதில்லை என்று
தன்னம்பிக்கையுடன்
முன்னேறி விடு...
அதுவே மேலே ஏறும் படியாக
அமைந்து விடும்....
நம்பிக்கையே உன் உற்ற
தோழன் என்று எண்ணி விடு
அந்தத் தோழன் கை
கொடுக்க வெற்றிப்பாதையில்
ஏறி விடு.. வெற்றிப் பாதையில்
பயணம் எவ்வளவு தூரம்



என்று கணக்கில்லை ..
நம் உழைப்பு கொடுக்கும்
தூரமே பயணத்தின்
தூரம் என்று எண்ணி
வெற்றிப் பாதையில்
நடந்து விடு ...

**உஷா முத்துராமன்**



எல்லாம் இழந்தவனுக்கு தான்
தெரியும் வாழ்வது கூட
வலிதான் என்று!
ஏனிந்த வாழ்க்கை என
எண்ணம் தோன்றும் போதே
தோற்று விட்டான்
ஈவு இரக்கமுள்ள கடவுள்!

ஆறடியில் உறங்கப்
போகும் இதயம்
உணர்வதே இல்லை
இறைவன் மிகப்பெரியவ
னென்று!

என்னை காயப்படுத்த
உனக்கு காதல்தான்
கிடைத்ததா?
செத்துப் போ என
பார்வை காட்டினால் கூட
பாடையில் ஏறி இருப்பேனடி!

எல்லாம் தொலைத்த பிறகும்,
தொலைந்த பிறகும்
வாழ்வதற்கு பிடிமானமே
இல்லை என வருந்தி விடாதே
இதுவும் கடந்து போகுமென
உன் மேல் விழுந்து
வாழ்த்துவதற்கு அந்த
வானத்து மழைத்துளிகள்
காத்து கொண்டிருக்கின்றன!

முகத்தை வெளிப்படையாக
படைத்த கடவுள் என்
மனதினை வெளிப்படையாக



படைத்திருந்தால் என்
காதல்
உனக்கு
தெரிந்திருக்குமோ
என்னமோ?!

**லி.நௌஷாத் கான்**

## கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே!

மனைவியை மகனை
அரசினைத் துறந்தும்
சத்தியம் காத்தான் ஒருவன்..

கனவினைத் துறந்து
தந்தையின் வார்த்தை
கானகம் சென்றான்
ஒருவன்..

எத்தனைத் துன்பம்
தொடர்ந்து வந்தாலும்
இயல்பினை மறவார்
சான்றோர்

புத்தனைப்போல..
ஆசையைத் துறந்து..
பூமியில் வாழ்வானோ
மனிதன்?

வறுமை சூழினும்
வாழ்வில் நேர்மையை
பொறுமையாய் காத்தவர்
பெரியோர்!

தருகிற குணத்தை வழிவழி
வந்திடும்.. வறுமையில்
காப்பவர் அரியோர்.!

மறுமை என்பது..
இதுவரை அறியோம்!
கருணையை மறவா
குணத்தார்..

நெருநல் உளனொருவன்
இன்றில்லை எனினும்
கீழுறாதவனே மனிதன்!

**வே.கல்யாண்குமார்.**

## நடிகன் !

பாரில் நண்பர்களுடன்
சரக்கடித்து விட்டு வீட்டிற்கு
வந்த கணவன், மனைவி
முன் நல்லவனாய் நடிக்க
கடைபிடிக்க எடுக்கும்
ஒவ்வொரு முயற்சியும்
ஒரு தலைசிறந்த நடிகனை
வெளிப்படுத்தி விடுகிறது !

## ரகசியம் !

பழங்கால பொது
தொலைபேசி பூத்துகளிலும்
சரி, தற்போதைய
செல்ஃபோன்களிலும் சரி...
பெண்கள் என்ன
பேசுகிறார்கள் என்பதை
ஆண்டவனாலும் கணிக்க
முடியாது !

**எம்.பி.தினேஷ்**
கோவை

## ஆசை

மனக்கடலில் ஆசை
அலைகள் ஓசை இன்றி அலை
மோதுகின்றன!
ஆடம்பரமாய்
இருந்தவையெல்லாம்
இன்று அத்தியாவசியமாக
அவதரித்து வருகின்றன!

அறுசுவை உணவெல்லாம்
அறுநூறு வகைச்
சுவைகளாய் மாறி
வருவதால் உமிழ்நீர்
சுரக்கிறது இன்சுலின்
வற்றிவிடுகிறது!

தேகத்தை அலங்கரிப்பதற்கு
ஆபரணங்கள் என்பது போய்
பலருக்கு நடமாடும்
நகைக்கடைகளாய்
உலா வர ஆசை!

சக்கரவர்த்தி மகாபலிக்கே
தானம் தந்திடவேண்டு மென்ற
மண்ணாசை பலருக்கு!
குபேரனுக்கே
கடன் தந்திட
வேண்டுமென்ற
பணத்தாசை
பலருக்கு!

அசோகவனம்
போன்ற அந்தப்புரங்கள்
பலருக்கு இல்லாமல்
இருக்கலாம் இதயத்தில்
எத்தனையோ
கனவுக்கன்னிகள்
பவனி வருகிறார்கள்!

போதிமரத்தடியில்
தவமிருந்த மெய்ஞான
மருத்துவன் துன்ப நோய்க்கு
அறிகுறி ஆசை என்பதை
அடையாளப்படுத்தியும்
நித்திரையிலேயே பலர்
நித்திய வாழ்வினை
தேடுகிறார்கள்!

சபிக்கப்பட்டிருந்தாலும்
வரம் கொடுப்பதைப்போல்
கேட்கப்படுகிறது
தூக்குத்தண்டனைக்
கைதியிடமும் இறுதி
ஆசை என்னவென்று!

இங்கே இதய அட்சய
பாத்திரத்தில் அளவான



ஆசைகள் அமுத
சுரபியாகட்டும் பேராசை
யென்னும் நஞ்சு சுரந்திட
வேண்டாம்!

**கவிஞர்**
**த.அனந்தராமன்**
துறையூர்

## கணிதம் மறவோம்!

அறுசீர் மண்டிலம்.

கணிதத்தின் முக்கியத்தை
அறிவமே கனிவுடனே
தக்கதையே தெரிவமே!
மணக்குமாறு கணிதத்தை
ஆக்குவோம் மாண்புடனே
போட்டிகளை வைப்பமே!
இனித்திடவே கணிதத்தை
மேன்மையாய் ஈந்திடுவோம்
எல்லோர்க்கும் நலமுடன்!
புனிதமாகக்கணிதத்தை
நினைப்பமே பூக்கின்ற
தேற்றத்தை வாழ்த்துவோம்!

மனிதகுல மேம்பாடு
கணிதமே மணியாக
அமைத்திடுவோம் கணிதமே!
கணிதத்தைக்கொண்டாடி
மகிழ்வமே காண்கின்ற
தொழில்நுட்பம் திகழ்வமே!
கனியாகச்சுவைத்திடுவோம்
கணிதமே கற்கண்டாய்
ஆக்கிடுவோம் கணிதமே!
வனப்பாகக்கொண்டிடுவோம்
கணிதமே வளமாகக்
கொண்டாடி மகிழ்வமே!

## உழைப்பு!

நேரிசை வெண்பா!

கடின உழைப்பேதான்
காலமும் காக்கும்
அடிமையாய்த் தானிருக்க
லாகா..துடிப்புடன்
வேலையைச் செய்திட
வீறாப்பைக் காட்டிட
கோலமுறு நற்பணி கொள்!

உழைப்புதான் உன்னத
மாகவே சோற்றை
ஒழுங்காகப் போடுமன்றோ
ஒண்மைப்..பிழைப்பு
நடந்திட நல்லாற்றைக்
கொண்டு நலமாய்த்
தடையில்லா வேலை தக!

**முனைவர் இராம.**
**வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## மலர் மஞ்சம்

மலர்கள் சிரிக்கும்
மெல்லிய வாசத்தில்
மனங்கள் மலரும்
மலர் மஞ்சம்...

பனித்துளி தீண்டிய
பூவிதழ் மென்மையில்
புதிய கனவுகள்
புன்னகைப் பூக்கும்...

வண்ணத்துப் பூச்சிகள்
வார்த்தைப் பேசிட
காற்றின் இசையில்
கவிதைப் பிறக்கும்...

மௌன இரவிலும்
மணமெங்கும் பரவி



இதயம்
தாலாட்டு
பாடும்
இனிய மலர்
மஞ்சம்...

**நா.பத்மாவதி**
கொரட்டூர்



## எழில்

எழில் என்பது இயற்கையின்
இனிய சிரிப்பு.
அது மலர்களின்
மென்மையான நறுமணம்.
எழில் காலை சூரியன் தரும்
பொன்னொளி.
எழில் மழைத்துளிகள்
விழும்போது எழும் இசை.
எழில் மனதை மகிழ்விக்கும்.
எழில் உலகை அலங்கரிக்கும்
ஓவியம். எழில் மனித
மனத்தின் நல்லுணர்வு.
எழில் அன்பின் அழகான
பிம்பம். எழில் இருக்கும் இடம்
மகிழ்ச்சியில் திளைக்கும்.



எழில் நம்
வாழ்க்கையை
இனிமையாக்கும்.

**உ.மு.ந.ராசன்**
**கலாமணி**
கோயம்புத்தூர்.

## நேர்மையா!

எப்போதும்
நிராயுதபாணிகளின்மீதே
கணை தொடுக்கிறாயே...
நீயெல்லாம் நேர்மையான
ஒரு காதல் ஆணையர்தானா
மன்மதா?!

**சு. அருண் பிரகாஷ்**
இராமச்சந்திரபுரம்

## தாழ்ச்சி

சிவனின்
அடிமுடி காணும்
அயன்மால் போட்டியில்
அயன்பால் பொய் சொல்லி
தாழும்பூ ஆனது
தாழம்பூ!

**சு. அருண் பிரகாஷ்**
இராமச்சந்திரபுரம்



## காதல்பிறக்கும் கருப்பை.

இதுபோல எனக்குள்ளே
நிகழ்ந்ததில்லை.
இமைதாண்டி விழிவெளியே
விழுந்ததில்லை.
புதுவிதமாய்ப் பைத்தியமும்
பிடித்ததில்லை. புத்தகத்தில்
"பூ"வைத்து மடித்ததில்லை.

கண்ணாடி எனைப் பார்த்துச்
சிரித்ததில்லை. கை நீட்ட
வானம்தான் இடித்ததில்லை.
பின்னாடி என் கால்கள்
நடந்ததில்லை.
பிரபஞ்சம் புதிதாகத்
தெரிந்ததில்லை.

சருகுக்குள் பச்சையத்தை
ஊற்றி விட்டாய். சடலத்தில்
சுவாசத்" தீ" மூட்டி விட்டாய்.
உருவத்தில் ஒளிவட்டம்
ஏற்றி வைத்தாய்.
உலகத்தை எனைச் சுற்ற
மாற்றி வைத்தாய்.

விரதத்தை இதுபோலக்
கலைத்ததில்லை.
விறகினிலும் "பூ"அவிழ
நினைத்ததில்லை.
இதயத்தில் பெரும் யுத்தம்
முடியவில்லை. இனிமேலும்
மறைப்பதற்குத்தெரியவில்லை.

காயமின்றி மனசுக்குள்
மாய வலி.
காரணங்கள் தேவையில்லை
காதல் பிணி. பேசாமல்
பேசுகின்ற கண்கள் மொழி.
பொசுக்கென்று
விழுந்துவிட்டேன் உந்தன் மடி.


காலமெல்லாம்
வழிந்தோடும் ஜீவநதி.
காதல் பிறக்கின்ற
கருப்பையைக் கண்டுபிடி?.
மோகமது முடிகின்ற
அந்த நொடி. மோட்சத்தைத்
தருகின்ற இன்ப வழி.

மனசுக்குள்ளே
ரகசியமாக இறக்கை
முளைக்குது அதிசயமாய்.
வயசுக்குள்ளே வானிலை
மாற்றம் வந்து போகுது சுகம்
சுகமாய். காலங்கள் எத்தனை
கடந்த பின்னும் சுழலுது பூமி
யுகம் யுகமாய். காதல் என்றும்
அழிவதில்லை
சாட்சியாவோம் சரித்திரமாய்.

**நறுமுகை.**

# நூல் விமர்சனம்

இதுவரை ...
நூல் ஆசிரியர்
ஆர் .என்.லோகேந்திரலிங்கம் !
நூல் விமர்சனம்
கவிஞர் இரா .இரவி !
வெளியிட்டோர் கனடா
உதயன் பத்திரிக்கை !




உலகில் தமிழர்கள் இல்லாத நாடே இல்லை .உலக நாடுகள் முழுவதும் தமிழர்கள் வாழ்கின்றனர் .அதிலும் குறிப்பாக ஈழத்தமிழர்கள் இல்லாத நாடே இல்லை .ஈழத்தில் நடந்த இனப் படுகொலை காரணமாக பலரும் புலம் பெயர்ந்தனர் .அப்படி புலம் பெயர்ந்ததில் கனடாவில் ஈழத்தமிழர்கள் இலட்சக்கணக்கில் வாழ்கின்றனர் .புலம் பெயர்ந்த வலி மிகுந்த வாழ்விலும் தமிழை மறக்காமல் தமிழ்த் தொண்டு செய்து வருகின்றனர் .கனடா என்றதும் என் நினைவிற்கு வருபவர் இனிய நண்பர் www. tamilauthors.com ஆசிரியர் அகில் தான் .ஈழத் தமிழர்களின் உழைப்பால்தான் இன்று உலக அளவில் ஆங்கிலத்திற்கு அடுத்தபடியாக உலகின் முதல் மொழியான தமிழ் மொழிக்கு அதிக இணையம் உள்ளது .தமிழ் இனி என்றும் அழியாத வண்ணம் ஆவணமாகி வருகின்றது .

கனடா நாட்டில் விளம்பரங்களுடன் இலவசமாக வழங்கிடும் உதயன் வார இதழின் ஆசிரியர் ஆர் .என் .லோகேந்திரலிங்கம் அவர்கள் எழுதிய தலையங்கத்தின் தொகுப்பே இந்நூல் .இந்த நூல் வெளியீட்டு விழா நகைச்சுவை மன்னர் இளசை சுந்தரம் ஏற்பாட்டில் நடந்தது. விழாவிற்கு சென்று நூல் வாங்கி வந்தேன் .

இதுவரை ஈழத்தில் நடந்த நிகழ்வுகளின் தொகுப்பாக உள்ளது .இந்த நூல் ஈழத்தில் நடந்த இனப் படுகொலைகளை எடுத்து இயம்பிடும் ஆவணமாக உள்ளது . வரலாற்று ஆவணமாக உள்ளது .மிக நுட்பமாக வந்துள்ளது . தலையங்கம் எழுதிய தேதிகளுடன் கட்டுரைகள் பிரசுரம் ஆகி உள்ளன .5.3.2004 அன்று தொடங்கி 5.7.2013 வரையில் முக்கியமான தலையங்களின் தொகுப்பு . கதிரோட்டம் என்று தலைப்பிட்டு உதயன் இதழ் பிரதம ஆசிரியர் ஆர் .என் .லோகேந்திரலிங்கம் தனது எண்ண ஓட்டத்தை மனிதாபிமான முறையில் துணிவுடன் பதிவுசெய்துள்ளார் .

இந்த நூலிற்கு உலகத்தமிழர் உள்ளங்களில் இடம் பெற்றுள்ள அய்யா பழ .நெடுமாறன் அவர்களின் அணிந்துரையும் ,திரு பொ.கனகசபாபதி அவர்களின் அணிந்துரையும் மிக நன்று .கவிதை உறவு மாத இதழின் ஆசிரியர் கலைமாமணி ஏர்வாடி எஸ் .இராதா கிருஷ்ணன் அவர்களின் வாழ்த்துரையும் முத்தாய்ப்பாக உள்ளது .இனி நூலில் இருந்து சில துளிகள் .

2.1.2009 அன்று எழுதிய கதிரோட்டதின் தலைப்பே ஈழத் தமிழரின் பாதுகாவலராக இருந்தவர்களின் விபரம் பறை சாற்றும் விதமாக உள்ளது .

"விடுதலைப் புலிகளின் இருப்பே புலம் பெயர்ந்த தமிழர்களின் விருப்பு .அதுவே உலகத் தமிழர்களுக்கு சிறப்பு ." ஈழத்தமிழ் மக்கள் சிங்கள பேரினவாத அரசுகளினால் அடக்கப்பட்டும் உரிமைகள் மறுக்கப்பட்டும் அவமானப் படுத்தப்படுகிறார்கள் என்ற காரணத்தால் ஆயுதம் ஏந்திப் போராட புறப்பட்டவர்களே தமிழீழ விடுதலைப் போராளிகள் கொடுமையான போராட்டத்தின் மத்தியிலும் ,தமது மக்களின் கலை மற்றும் கல்வி சார்ந்த விடயங்களுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் எவ்வளவு முன்னுரிமை கொடுத்துள்ளது. என்பதையும் கொடுமையான போராட்ட காலத்திலும் எத்தனை நல்ல இலக்கியங்களும் ,நல்ல திரைப்படங்களும் ,கலைப் படைப்புகளும் அந்த மண்ணிலிருந்து வெளிவந்துள்ளன என்பதையும் அவர்கள் கவனித்து வருகின்றனர் ".

உடலுக்கு தீ வைத்து உலகின் கவனத்தை ஈழத்தின் பால் ஈர்த்த தியாகி முத்துக்குமார் பற்றிய பதிவு 30.1.2009 உதயன் இதழில் பதிவாகி நூலில் இடம் பெற்றுள்ளது . சிங்கள இன வெறி பிடித்த மிருகமான இலங்கை அதிபர் பற்றிய ஈன குணங்கள் நூலில் உள்ளது .தலைப்புகளே உணர்த்துகின்றன .

அகிலமே அதிர்ந்து நின்றாலும்! அடங்காத கொலை வெறியுடன் மகிந்த என்னும் பேய் ! தமிழ் இனப் படுகொகொலைகள் புரிந்த கொடூரன் அய். நா .மன்றத்தால் உடன் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் என்பதே உலகத் தமிழர்கள் அனைவரின் விருப்பமாக உள்ளது .அல்லல் படும் ஈழத்தமிழர்களுக்கு தனி ஈழம் ஒன்றுதான் தீர்வு என்பதை உலகமும் உணர்ந்து விட்டது .

இந்த நூலில் ஈழத்தில் நடந்த மனிதாபிமான மற்றபடுகொலைகளுக்கான கண்டனத்தை உரக்கதுணிவுடன் பதிவு செய்துள்ளார் .தமிழக அரசியல் தலைவர் செய்த துரோகத்தையும் தோலுரித்துக் காட்டி உள்ளார். படித்து முடித்தவுடன் நெஞ்சம் கனக்கின்றது .

இலங்கையில் தமிழினப் படுகொலைகள் நடக்கின்றது என்று தெரிந்தும் உலகம் கண் மூடி இருந்த அவலத்தை சூட்டிக் காட்டி உள்ளார் நூல் ஆசிரியர் ஆர் .என் .லோகேந்திரலிங்கம் அவர்கள் நெஞ்சில் உரத்துடன், நேர்மை திறத்துடன் எழுதி உள்ளார் .ஒரு பத்திரிகை ஆசிரியரின் கடமையை செவ்வன செய்துள்ளார் .பாராட்டுக்கள் .

19.10.12 அன்று எழுதிய தலையங்கம் !

" யாருமே கவனிப்பாரற்ற நிலையில் சிறைகளில் வாடும் தமிழ் பேசும் உறவுகள் ." 17 வயதில் சந்தேகத்தின் பேரில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட சில இளைஞர்களுக்கு தற்போது 35 வயது ஆகின்றது. சிறையில் தங்கள் இதுவரையில் கழித்துள்ள 17 வருடங்களில் தங்கள் வாழ்வின் பல வாய்ப்புகளையும், சுகங்களையும் அவர்கள் இழந்து விட்டார்கள் . இப்படி பல தகவல் நூலில் உள்ளன .இந்த நிகழ்வை படித்தபோது குற்றம் செய்யாத குற்றமற்ற பேரறிவாளன் சிறையில் வாழ்நாளைக் கழித்த நிகழ்வும் நினைவிற்கு வந்தது .சிங்கள இன வெறி பிடித்த சிங்கள அரசின் முகத்திரை கிழிக்கும் விதமாக நூல் வந்துள்ளது .

உலகத் தமிழர்கள் யாவரும் படிக்க வேண்டிய நூல் .இனியும் தமிழினம் ஊமையாக இருக்கக் கூடாது .உரக்கக் குரல் எழுப்புவோம் .ஈழத்தில் தனி ஈழம் மலர வேண்டும் .ஈழத் தமிழர் விடுதலைக்காற்றை சுவாசிக்க வேண்டும் .ஈழத் தமிழர் வாழ்வில் விடியல் விளைய வேண்டும் .இப்படி பல சிந்தனைகளை விதைக்கும் மிக நல்ல நூல். நூல் ஆசிரியர் ஆர் .என் .லோகேந்திரலிங்கம் அவர்களுக்கு பாராட்டுக்கள் .





## பெயர்

முப்பிடாரி வாயெல்லாம்
பல்லாக ஒரு சீப்பு
வாழைப்பழத்துடன் ரேழியை
தாண்டி உள்ளே வந்தாள்.
'சங்கிலிக்கு ஆம்புள புள்ள
பொறந்திருக்கு; ஆபரேசன்
எதுவும் இல்லாம சுக பிரசவம்
;அம்மா' என்றாள்.
'வாடி! சந்தோஷம். இசக்கி
எப்படி இருக்கா?' இந்தா
சர்க்கரை! வாயிலே
போட்டுக்கோ,' என்றபடி
சங்கரி சமையல் கட்டிலிருந்து
வெளியே வந்தாள்.
' இன்றி காலை சரியா எட்டு
மணிக்குப் பொறந்திருக்கான்.
நல்ல நட்சத்திரமா; பார்த்து
சொல்லுங்க' என்றாள்;
முப்பிடாரி.
' அதுக்கென்ன! பாத்து
சொல்லிடறேன். அந்த
கண்ணாடியை எடு' என்றவள்;
பஞ்சாங்கத்தை எடுத்துப்
புரட்டினாள்.
நல்ல நட்சத்திரம். உத்தராடம்.
உத்தராடத்தில் ஒரு
பிள்ளையோ; ஊர் கோடியில்
காணியோ' என்று என்
மாமியார் சொல்வாங்க. என்
பிள்ளை, கணேசன் சேலத்தில்
கலக்டரா இருக்கானே;
அவன் உத்திராடம்
தான். குழந்தை நன்றாக
இருப்பான். ஜாதகம் எல்லாம்
அஞ்சு வயசுக்கு மேலே
தான் எழுதணும். இந்தா;
இந்த பேப்பரை பத்திரமா
வைச்சுக்கோ. நான் விவரம்
குறிச்சுருக்கேன்' என்றாள்.
"சங்கிலிக்கும்இசக்கிக்கும்
1-12-2025 அன்று காலை
எட்டு மணிக்கு உத்தராட
நட்சத்திரத்தில் ஆண்
மகவு சுப ஜனனம் என்று
எழுதியிருந்த பேப்பருக்கு
நாலு பக்கமும் மஞ்சள்
தடவி ஒரு கவரில் போட்டுக்
கொடுத்தாள்.
'என்ன பெயர் வைக்கப்
போறீங்க?' என்று கேட்டதற்கு
சாதகம் பார்த்துதானே
வைக்கணும். அம்மா'
என்றாள் முப்பிடாரி.
'உத்தராட நட்சத்திரத்துக்கு
பஞ்சாங்கத்தில் 'ப' ம'
த' ந' என்ற எழுத்தில்
ஆரம்பிக்க வேண்டும் ' என்று
போட்டிருக்கு. ' நந்தன் என்ற
பெயர் வை.' என்றாள் சங்கரி.
'எங்க சாதி பெயர் மாதிரி
இல்லையே ; அம்மா' என்றாள்
முப்பிடாரி.
' காலம் மாறிப் போச்சு;
முப்பிடாரி! எந்த காலத்தில்
இருக்கே? சாதி பேச்சை
விடு. சாதிக்கப் பிறந்தவன்
புத்தியில் ,பிறந்தவுடன்
சாதி என்னும் பொதியை
ஏன் ஏற்ற நினைக்கிறாய்?
வேடிக்கைதான்!இனி
நாட்களில் சாதி என்னும்
பாகுபாடு நீர்த்தே போகும்.
பிறப்பிலேயே சாதியின்
ஊற்றுக்கண்ணை திறவாமல்;
தூர்த்து விடு.வரம் தரும் சாமி
உறுதியாய் கரம் கொடுக்கும்;
அவனுக்கு. இதுவும் சாமி
பெயர்தான் உங்களுக்கு
கூப்பிடுவதற்கும் சுலபமாக
இருக்கும்;'
என்ற சங்கரியை
மலர்ச்சியுடன்
பார்த்தாள்
முப்பிடாரி.



**சசிகலா விஸ்வநாதன்**



## மேனகா

புவி(யில்) அழகியான
மேனகா உன்னைக்
கண்டால் தேவலோக
மங்கையரே வியப்பர் எனில்
நானும் என் வியத்தகு
ஆசையும் எம்மாத்திரம்?!
நீ எனக்கு மு த் த மி டு ம்
நாட்களில் நான்
விரும்பிச் சுவைக்கும்
இருட்டுக் கடை அல்வா
கட்டாய விடுமுறை எடுத்துக்
கொள்கிறது!
நீ வராத நாட்களிலோ
குணா குகையில் தவித்த
மஞ்னுமல் பாய்ஸ் மனம்போல்
என் உள்ளம் துடித்து
வீழ்கிறது!
உன்னைப்பார்த்த வினாடியில்
கா த ல ன் பதவிக்கு
ஆசைப்பட்ட என் கா தல்
இ த ய ம் அச்சமெனும்
அத்தனை பதுங்கு
குழிகளையும் ஒரே நாளில்
மூடி விட்டது! கூண்டைத்
திறந்து வெளியே வா!
உன்னுடன்
சேர்ந்து
பறக்கத்தான்
என்
கா த ல் ப ற
வை யு ம்
காத்திருக்கிறது!



**முத்து ஆனந்த்** வேலூர்

## பணம் படுத்தும் பாடு!

பணத்தாசைப் பிடித்தவர்கள்
எத்தனைப் பேரு? அதனால்..
எலும்புக் கூடாய் ஆனவர்கள்
எத்தனைப் பேரு?
பணப்பேயாய் திரிபவர்கள்
எத்தனைப் பேரு.. இதை
பாமரர்கள் உணரும்படி
எடுத்து நீ பாடு.!

காரியங்கள் நடப்பதற்குப்
பணத்தைக் கொடுப்பார்!
சிலர்.. கையூட்டுப்
பெறுவதற்கேப்
பிறவியெடுத்தார்!
ஊர்க்குடியைக்கெடுப்பவரும்..
கலப்படத்தைப் புரிபவரும்..
கட்டுக்கட்டாய் கருப்பு
நோட்டைப் பதுக்கியே
வைப்பார்! புத்திக்கெட்டுப்
பலர் அவரின் பின்னே
நடப்பார்.!

ஒருவேளைக் கஞ்சிக்காக
வீதியில் நிற்பார்.. சிலர்..
உண்டுக் கொழுத்து மீதிச்
சோற்றை வீதியில் எறிவார்.!
நகை நட்டு பட்டுயென
நாகரீக போதையிலே வகைக்
கெட்டு எலும்புக்கூடாய்
மாறியே நிற்பார்..! சிலர்
வட்டிப்பணம் வாங்குதற்குள்
கட்டையில் படுப்பார்!


காசு துட்டு மணி என்று
கனவினில் மிதப்பார்! சிலர்
காசிருந்தால் போதுமென்று
போதையில் மிதப்பார்.!
பாசத்தையே தூக்கி வீசி..
பணப் பேயாய் பொய்கள்
பேசி.. தூசுமிக்கக்
கல்லறையில் சென்று
படுப்பார்..! அதற்கும்
சில்லரைகள் வேண்டுமென
சேர்த்துப் புதைப்பார்!

**வே.கல்யாண்குமார்**

கடும் பணிச் சுமையில்
சக்கரம் கட்டிக்
கொண்டன.. என்
வினாடிகள்...

ஆயினும் சிறகுகள்
பரிசளித்த உன்னையே
தேடுகின்றன..அவை.

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



## மனைவியிடம் மட்டுமே...

கண்களில் வானவில்
காதலின் மோகமுள்
உண்மையென கிடைக்க
உன் மனைவியைக் காதலி

காலங்கள் செய்யும்
காயங்கள் தீர்த்து மனம்
மகிழமனைவியைக் காதலி

காதலின் கனவுகள்
கனவுகளில் கன்னல்
நினைவுகள் இதை உனக்கு
அள்ளித்தர
மனைவியைக் காதலி

காலங்களில் காதலையும்
கனியினி தரும்
கனிந்த அன்பினைப்
பெற அவள் மட்டுமே
தகுதியானவள் ஆகையால்
மனைவியைக்காதலி



உன்
சந்ததியின்
ஏழேழு
வம்சத்தினரின்
வம்ச
உண்மைகளை
உணர்வுடன்
பதிவுசெய்து
உன் சந்ததியைக்காத்த
கடவுளருளிய ஒப்பற்ற
பரிசாம் மனைவியைக்காதலி
மனைவியை மட்டுமே காதலி

**ஜவஹர் பிரேம்குமார்**
பெரியகுளம்

## எஜமான்

" எவ்வளவு உயரம்
வளர்ந்தாலும் உயர்ந்தாலும்
அதன் பின்னால்
தெரிவது தான் ..."

உண்மையான விசுவாசம்
எதையும் எதிர்பார்க்காமல்
உழைக்கும் உழைப்பு ..."

முதலாளி பாசம் நேசம் குரல்
ஒலி கண் பார்வை
வழித் தேடல்..."

நேர்மையான தூய்மையான
ஊழியர் வேலைக்காரர்
கிடைத்து விட்டால்..."

முதலாளியின் நோக்கம்
எதிர்பார்ப்பு எதிர்கால தேடல்
எல்லாம் ஜெயமே ... "

சுகத்தையும் துன்பத்தையும்
சமமாக பாவித்து
முதலாளியின் முகம்
கோணாமல் .... "

மாற்று மருந்தாய் வாழும்
உழைப்பாளி தியாகி வீட்டின்
அங்கம் நலம் விரும்பி ....."



உழைக்கும்
வர்க்கம்
ஆனாலும்
கைமாறு
தேடாத
உண்மையான
உறவு
பாசக்கார வேலைக்காரன்...."

**ஆர். சீதாராமன்**
சீர்காழி

## ஓய்வுநாள்

ஞாயிற்றுக்கிழமை
பெரும்பாலனவர்களுக்கு
ஓய்வுநாள்தான்,

காலையில் எழுந்து தேநீர்
கலந்துக்கொடுத்து பிறகு
சிற்றுண்டி தயார்செய்துவிட்டு
குழந்தைகளின் பள்ளி
சீருடை கணவரின் ஆலை
சீருடை அனைத்தையும்
அலசி காய வைத்துவிட்டு
அப்பா எடுத்துவந்த
மஸ்தான்கடை மட்டனை
சுவையாக தயார் செய்து
குறட்டைவிட்டு தூங்கும்



அப்பாவையும்
தொலைக்காட்சி
பார்க்கும்
எங்களையும்
அம்மா
சாப்பிட
அழைப்பாள்,

ஞாயிற்றுக்கிழமை
பெரும்பாலனவர்களுக்கு
ஓய்வுநாள்தான்
அம்மாக்களுக்கு அல்ல,!

**நாகை ஆசைத்தம்பி**
கோவை



## புதுமைகள்

ஏ, வைகறைப் பொழுதின்
கடைசி நட்சத்திரமே!

நீ,விடியலின் முதற்பூவில்
உன் செய்தியை விட்டுச்
செல்கிறாய்
அப்படித்தான் –


எல்லா இன்பங்களுக்கும்
மூலமானவளும் புதுவாழ்வின்
தொடக்கத்தில் என்னை
முத்தமிடுகிறாள்

இரவு நேரத்துக் கனவுகள்
எல்லாம் விழிக்கும்
பொழுதில் புதிய பாடல்களாய்
மலர்கின்றன



என்
இதயத்தில்
வாசம்
செய்கிறவள்
எனது
வாழ்வின்
இளங்காலையில்
மணக்கோலம் புனைந்து
வருகிறாள்.

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை.



## கண்மணிக்கு கடிதம்

இந்த மூன்று நாள்
நான் உனக்கு தந்திருக்கிற
பிரிவை நீ எனக்கு
எப்போது தந்தாய்யென
நினைவு இருக்கா கண்மணி.

நமக்குள் குட்டி குட்டி
சண்டை வரும். வர
வேண்டும் அதுதானே
நாமும் சொல்லியதுமுன்னமே.
அந்த சண்டையும்
சில்லித் தனமாகவா
இருக்கும் எல்லா
காதலர்களையும்போல
இல்லை.

முதல் சண்டை
நான் படிக்கச் சொன்ன
கவிதை புத்தகத்தைப்
படிக்காமல் இருந்தாய்

இரண்டாவது சண்டை
நான் படிக்கச் சொன்ன
கதை புத்தகத்தைப்
படிக்காமல் இருக்கிறாய்

மூன்றாவது சண்டை
நான் படிக்கச் சொன்ன
புதின புத்தகத்தைப்
படிக்காமல் இருப்பாய்

நான்காவது சண்டை
நான் போட்டதில்லை.
என்னிடம் 'இதெல்லாம்
படிச்சா தான் பேசுவியா'
யென்று நீ போட்டது.
அப்போதுதான் நீ எனக்கு
அந்த பிரிவைத் தந்தாய்.

நம் காதல் மலர்ந்ததும்
நம்மால் காதல் மலர்ந்ததும்
புத்தகம் இலக்கியக்
கூட்டங்களால் தானே.
நீ மறந்துவிட்டாய் கண்மணி
புத்தகமும் இலக்கியக்
கூட்டங்களும் கேட்டுக்
கொண்டிருக்கிறது நம்மை.

நீயே சொல் கண்மணி
நிறைய வாசிப்போம்
அதற்காக , நம் உரையாடலை
குறைத்துக் கொண்டதில்லை.
ஒவ்வொரு உரையாடலிலும்
ஒரு கதையும் கவிதையும்
இடம்பெறாமல் இருந்த
உரையாடலே நம்மிடம்
இருந்ததில்லை.

நம் காதலுக்கு புத்தகமும்
இலக்கியக்
கூட்டங்களும்தானே
புத்தகச்சுழி போட்டது.

சுழியை மறந்து வழிமாறி
வீண் பிடிவாதம் ஏன்
கண்மணி? உன்னைப்போல்
என்னால் இருக்க
முடியவில்லையே
என்ற ஆதங்கமே
நிறைந்திருக்கிறதெனக்கு.
அதை வைத்து நாம் என்ன
செய்துவிடப்போறோம்.

சரி, இந்த கடிதம் கூட நீ
இப்போது என்ன புத்தகம்
படிக்கிறாய் என்று கேக்கவே
எழுதுகிறேன். பதில் கடிதமாக
ஞாயிறு இலக்கியக்கூட்டம்
வந்தால்போதும்
புத்தகத்தோடு
காத்திருப்பேன்
மறக்காமல்
வந்துவிடு
கண்மணி.



**துங்கன்**

## புதியதோர் உலகம் செய்வோம்

நாடுகளுக் கிடையெந்தத் தடையுமின்றி
நாடுசெல்ல அனுமதியும் தேவையின்றி
வாடுகின்றார் ஒருநாட்டு மக்களென்றால்
வளநாடு கரங்கொடுத்துக் காத்து நின்று
பாடுபட்ட பலனெல்லாம் அனைவருக்கும்
பகிர்ந்தளிக்கும் பொதுவுடைமை எண்ணம் பூத்த
ஏடுகளில் மட்டுமிங்கே எழுதி வந்த
ஏற்றமுடை புதுவுலகைச் செய்வோம் வாரீர் !

பலமொழிகள் பேசினாலும் அறிவு என்னும்
பாலத்தால் ஒருங்கிணைத்துக் கணினி மூலம்
பலரிடத்தும் பலமொழியில் பேசதற்குப்
படிசமைத்து மொழிச்சண்டை ஏதுமின்றி
இலக்கியங்கள் மொழிமாற்றம் செய்து தம்தம்
இலக்கியமாய்ப் போற்றுகின்ற பொதுமை நெஞ்சில்
கலந்தெந்தக் காழ்ப்புமின்றி வாழ்வதற்குக்
கண்டிடுவோம் புதியதொரு உலகை வாரீர் !

உயிர்பறிக்கும் குண்டுகளைச்செய்வோரின்றி
உயிர்மாய்த்து நிலம்பறிக்கும் போர்களின்றி



உயர்சக்தி அணுக்குண்டு அழிவிற்கின்றி
உயர்த்துகின்ற ஆக்கத்தின் வழிசமைத்தே
உயரறிவால் கண்டிடித விஞ்ஞானத்தை
உயர்வாழ்வின் மேன்மைக்குப் பயனாய்ச்
செய்து பயமின்றி அமைதியாக வாழ்வதற்கே
படைத்திடுவோம் புதுவுலகை வாரீர் வாரீர்!

**பாவலர் கருமலைத்தமிழாழன்**



அவனை/அவளைநீங்கள்
பார்த்திருக்கக் கூடும்..

விழிகளில் பிரியம் ஏந்தி
நடப்பான்/ள்..

நிராகரிப்பின் புயல்
அவனை/ளை எப்போதும்
சுழன்றடிக்கும்.

கைப்பற்றிக் கொள்ள
ஆதரவுக் கரமின்றி
மாலுமியற்ற படகாய்
அலை மோதுவான்/ள்..

அவன்/ள் முகம்
யார் மனசிலும்
பதிவதேயில்லை..

பஸ்ஸில்.. ரெயிலில்..
கடைத் தெருவில் நம் அருகே
தான் நடப்பான்/ள்..

ஒரே ஒரு வார்த்தை.. ஸ்பரிசம்
அவனு/ளுக்குள் உயிர்
வெளிச்சம் பாய்ச்சி விடும்..

விளக்கணைத்துப் போகும்
நமக்கு அது சாத்தியமாகப்
போவதேயில்லை என்றும் !

**ரிஷபன்**



## புதுமை பெண்ணாய்.....

பூத்திருக்கு பெண் புதுமையானவளாய் வலம்
வருவாள் புரட்சி பெண்ணாய் அநிதிகளை
எதிர்த்திடுவாள்.. அன்னையின் அன்பிலே
ஆனந்தமாய் துள்ளித் குதிதெழுந்தவள்
பார்க்கும் விழிகளுக்கு எல்லாம்
பாசபினைப்பால் அரவனைக்கப் பட்டால்
எவ்வன செழிப்பில் பூவாய் மலர்ந்தால்
மகிழ்ந்தாள் வலி வேதனையில் மற்றவருக்கு
மலர் வாசமதில் பரவசமாய் திகழ்ந்தாள்
பருவஎழில் மனசெல்லாம் அலைபாய
வைத்த வேளையில்தான் அவளுக்கு வலி
உணர்வெழுந்தது யாரைப் பார்த்தாலும்
வேதனை சாயல் மலரத்தொடங்கியது
யாரோ ஒருவன் என்னை மேலும் கீழும்
விழிகளால் மேய்ந்தான் எனக்கு அவன்
பார்வை உணர்வு பரவ பரவ கூச்சமாகவும்
அருவருப்பாகவும் மனசுனுள் வீறிட்டெழுந்த
வெறுப்புணர்வை அடிக்கிக் கொண்டு தலை
குனிந்து மவுனமானேன் அவன் புன்னகை
என்னுள் உணர்வலைகள் அவனை
ஆட்கொண்டது புன்னகை பொருத்தமே
போதுமென அவனால் கழுத்தில் மஞ்சள்
கையிறு கட்டியதும் அவன் கரங்கள்
பிடிக்க பெண்மை விழித்துக் கொண்டது
ஏன் எதற்குகென மனதினில் கேள்வி
வெள்ளோட்டம் மலர கட்டிலில் அவன்
அருகில் அழைத்து அமர வைத்தான்
மலர்களால் அலங்கரிக்கப்பட்ட வாசம் என்ன
மயக்கமடைய வைக்க அவன் தோளில்
சாய்ந்தேன் மலர் படுக்கையில் படுக்க வைத்து
அவனும் படர்ந்தான் என் கன்னித்தன்மை
விடுதலை பெற்றிட உள்ளே சென்ற
ஆண்மையால் உள்ளுணுர்வில்
பரவசம் மேலிட வலியே சுகமான
சுமையாய் மாறி நாளுக்கு நாள்
வேதனைகள் எனக்குள் பலவித
மாற்றங்களை ஏற்படுத்தியது
கன்னிப் பெண் சுதந்திரம் பறி போய்
குடும்பச் சிறையில் அகப்பட்டுக்
கொண்டதில்
பலவித குற்றங்களுக்கு நான் காரணமானேன்
என் நெஞ்சம் குமுறியது எனக்குள்
எரிமலை கிளர்ந்தெழுந்த வண்ணம் இருந்தது
நாளாக நாளாக என்வயிறு பெரிதாகிக்
கொண்டே வந்தது எனக்கு ஏதோ
நடந்திருக்கு என்ற அச்சம் மேலிட
வலி எப்போதும் இல்லாத வலி மருத்துவரிடம்
அழைத்துச் சென்றனர் பரிசோதனை செய்தவர்
குழந்தை வலி தான் என்று பிரசவ அறைக்கு
அழைத்துச் செல்ல இடிப்பில் யாரோ
அடிப்பது போல் வலி எனக்கு மூச்சு முட்டிக்
கொள்ள என்னில் இருந்து ஒன்று வெளியே
இறங்கிட அம்மா என்று கதறினேன் சுமையான
வலிவேதனை சுகமாய் என்னை மயக்கமடைய
வைத்தது கண் விழித்து என்னை அறியாமல்
எதையோ தேடியது என் உள்ளுணர்வு
சுற்றும் முற்றும் பார்த்தாள் அடி வயிற்றில்
வலி இல்லை ஆனால் மார்பில் வலி எடுத்தது
இது என்ன தீடிரென வலி என்று எனக்குள்
எழுந்த சந்தேகத்திற்கு யாரிடம் தெளிவு
பெறுவதுஎன அக்கம் பக்கம் பார்த்த போது
செவிலியர் துணியை மூடி குழந்தை ஒன்றை
அவள் அருகில் படுக்க வைத்தவள் தாய்
பால் கொடுங்க என்றாள் தாய் பாலா நான்
செவிலியரைப் பார்த்து கேட்க குழந்தை
மட்டும் பெத்துக்குவிங்க தாய்ப்பாலா ன்னு
கேள்வி மட்டும் கேட்பீங்கன்னு சொல்லி விட்டு
போய்விட்டாள் நான் அந்த குழந்தையையே
பார்த்தேன் மூடி விழிகள் சப்பு கொட்டிய
சிறிய வாயைப்
பார்த்துக் கொண்டு இருக்கும் போது
அம்மா வந்து பிள்ளைக்கு பால் கொடுக்காம
அதேயே பாத்துகிட்டு இருக்கே என்றதும்
பாலா...? அடிப்பாவி மகளே உன்னை அங்கே
போகாதே இங்கே போகாதே ன்னு
வளர்த்திட்டேன் இப்போ எதுவுமே தெரியாம
வெள்ளந்தியா இருக்கியேடி எனப் புலம்பிக்
கொண்டே சேலைத் தலைப்பி விளக்கி
குழந்தை சப்பிய வாயை வைத்தாள்
ஊறி ஊறி வந்ததை இழுத்து சுவைத்த
அந்த குழந்தையைப் பார்த்தாள் அதிசயமாய்
பொல்லாத அதிசயத்தை பெத்து தூக்கிட்டு
வந்துட்டா சீமையில் இருந்து இறங்கி
பொன்னை அள்ளிக் கொண்டு வருவானு
நினைச்சா பொன்ன அள்ளிக் கொண்டு
போறவளையில தூக்கிட்டு வந்துட்டா
பெண்ணுக்கு பெண் பிறந்தா பாவமா..?
பெண்ணாய் பிறந்தா கேவலமா?
இந்த அநிதிக்கு யார் விடை தருவார்
பெண்ணுக்கு பெண்ணே எதிராய் மாறிவிட்ட
நிலையை மாற்றிக் காட்டனும் பெண்மையை
போற்றப்பட வேண்டும் பெண் அடிமையிலிந்து
விடுதலை பெற வேண்டும் என்ற எண்ணம்
அவளுள் எரிமலையாய்
கொந்தளிக்க வலி வேதனைகளை
உள்ளுக்குள் புதைத்தாள்
வீறு கொண்டெழுந்தாள் புறப்பட்டாள்!.




**நல.ஞானபண்டிதன்**
திருப்புவனம் புதூர்


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ARG CONSTRUCTIONS
ARG
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


VINAYGA ENTERPRISES
WANTED
COMPUTER OPERATOR
( FEMALE)
ONIDA AUTHORISED SERVICE CENTRE
CONTACT:9962116238
ADDRESS: BHEEMANNA PETTAI, BHEEMANNA 1ST STREET,
ALWARPET CHENNAI


சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
அனைவருக்கும்
தீபாவளி
நல்வாழ்த்துகள்!
అజంతా
అజந்தா
பாக்குடன்
உங்கள்
தீபாவளியை
கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Launch Your
Own Secure
Crypto MLM
Software Today!
@4999/- onwards
CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com


WANTED
M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift
7540003588


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
இடங்கள்:
பெருங்குடி, துரைப் பாக்கம்
காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
விருகம்பாக்கம்
பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com

























## Special Invitation

to retired seniors **house wives businessmen bankers**
CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate

To restart your **second Innings with a career business opportunity**

- Flexible timing unlimited incentive
- No target work from home training provided For successful business.

**Contact Mr. Irudaya Raj**
**Ph.9486634780**




We Are Urgently **Hiring!**

**Marketing Manager**
**Ad Sales (Print Media)**

Package
Rs. 4.8 LPA

Company : **PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD**
Location : **Chennai**

**Padma Digital** a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.

**Key responsibilities for Marketing Manager**

- Minimum 5 years of experience in print media ad sales
- Proven experience in space selling
- Strong background in field sales and client acquisition
- Excellent communication and negotiation skills
- If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you

If you are interested
Do send your resume and portfollo to
padmamediapublications@gmail.com

**Call: 9337501889**





முனீஸ்வர் துணை
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அனுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005


Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF SPECIAL OFFER
DISCOUNT
90 DAYS
MONEY BACK GUARANTEE


just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 – Rs 15000 per month
9337501889
7789941009


WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990


ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247



WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367


WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349


ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998



# பல்சுவை களஞ்சியம்




## கண்டுகொள்ளப் படாமல் விட்ட பாத்திரங்களா?

காவியங்கள் என்றால் நம் நினைவுக்கு வருவது இராமாயணமும் மகாபாரதமும். நாம் எல்லா கதையையும் உள்ளார்ந்து படித்தாலுமே கூட ஒரு சில கதாபாத்திரங்கள் நம் மனதில் கேள்விக்குறியாக தொக்கி நிற்கும் அதுபோல என்னை கவர்ந்த சில கதாபாத்திரங்கள் ராமாயணத்தில் உண்டு. அனுமன் அவரைப்பற்றி அனுமானிக்கவே முடியாது, அதேபோல் ராவணனை பொறுத்த வரைக்கும் அவன் எல்லாருக்கும் கெட்டவன், ஊர்மிளை இலக்குவனின் மனைவி அவளின் நிலை ரொம்பவே மோசம். இலக்குவனின் மனைவியாக அவர் இருந்த போதிலும் இலக்குவன் மட்டும் தான் நம் நினைவில் இருப்பார். அது போல வாலி. மறைந்திருந்து கொன்ற ராமன் மேல் வாலிக்கு கோபம். என்னதான் சமாதானம் செய்தாலும் நமக்கு வாலியை பார்க்க பாவமாக இருக்கும்.



நான் எனக்கு தெரிந்தவரை முதலில் ஊர்மிளை பற்றி சொல்ல விழை கிறேன்.
ஊர்மிளா என்பவர் ஊர்மிளா தேவி என்று அழைக்கப்படுகிறாள் ராமாயணத்தில். இவர் உண்மையாகவே ராமாயணத்தில் மறைக்கப்பட்ட ஒரு கதாநாயகி அம்சம். ஜனகரின் சொந்த புத்திரியும் லட்சுமணனை மணந்தவளும் ஆவாள். ராமாயண கதையின் படி லட்சுமணனின் தாயார் சுமித்ரா தேவிக்கு ஸ்ரீ ராமபிரான் மேல் அளவு கடந்த பிரியம். கைகேயி இராமனை 14 வருடம் கானகத்திற்கு செல்ல வேண்டும் என்று கூறிய பொழுது இந்த சுமித்ரா தேவி தன்னுடைய மகன் லட்சுமணனை ராமனுக்கும், சீதைக்கும் காவல் இருக்கும்படி கூறியது எல்லோரும் அறிந்ததே. மேலும் ராமனுடன் கூடவே இருந்து அவருக்கு எல்லா பணிவிடைகளையும் எந்த குறையும் இன்றி செய்ய வேண்டும் என்று சுமித்ரா விரும்பினார். அதேசமயம் ராமனுக்கு செய்யும் கைங்கர்யங்களில் எந்த குறையும் ஏற்படக்கூடாது என்று சுமித்ரா விரும்பிய பொழுது அதை உள்ளார்ந்து புரிந்து கொண்ட உர்மிளா தன் மாமியாரின் கவலையை போக்க நினைத்தாள்.

அரண்மனை முழுவதும் ராமனின் காடேயறும் துயரத்தில் இருக்க ஊர்மிளை மட்டும் தன்னை அலங்காரம் செய்து கொண்டு அரண்மனையை வலம் வந்த பொழுது லக்ஷ்மணன் ஊர்மிளையிடம் உனக்கு வருத்தம் இல்லையா? என்று கேட்டபோது ஊர்மிளை பட்டென்று தந்தையின் சொல்லை காப்பாற்றுவதற்காக ராமர் காடு செல்கிறார். இதில் எனக்கு என்ன வருத்தம் என்ற பொழுது லக்ஷ்மணன் அவளை வெறுக்க ஆரம்பிக்கிறான். ஊர்மிளை வேண்டுமென்றே இலக்குவனனுக்கு தன் மேல் வெறுப்பு வரவேண்டும் என்று செய்த இந்த தியாகம் ராமாயணத்தில் எடுபடாமல் போனது. இதைப்பற்றி யாருமே அவ்வளவு ஸ்லாகித்து எழுதவில்லை என்பதில் நிறைய பேருக்கு வருத்தம்.ஊர்மிளா தன் கணவனை 14 வருடம் பிரிந்த போது அந்த பிரிவை தனது மனதிலும் ஏற்படுத்திக் கொண்டாள்.
இதில் இன்னொரு ஆச்சரியம் ஆச்சரியம் என்னவென்றால் ராமாயண போரில் இந்திரஜித்தை கொல்ல வேண்டுமானால் 14 வருடங்கள் தூங்காமல் ஒருவர் கண் விழித்திருக்க வேண்டும் என்பது விதி. அப்படி கண் விழித்திருந்து இந்திரஜித்தை கொன்றது வேறு யாரும் அல்ல. இலக்குவணன் தான். அதில் ஒரு ஆச்சரியம், இந்த 14 வருடம் இலக்குவணன் எப்படி தூங்காமல் விழித்திருக்க முடிந்தது? அதற்குப் பின்னணியிலும் இந்த ஊர்மிளை இருக்கிறாள்.

எப்படி எனில் காட்டில் ராமர் சீதைக்கு காவலாக லக்ஷ்மணன் தூங்காமல் குடிலுக்கு வெளியே காவல் காக்க க்கும்போது நித்ராதேவி அவனை உறங்க வைக்க முடியாமல் திணறுகிறார். அப்பொழுது இலக்குவணனிடம் நித்ராதேவி, நீ தூங்காமல் இருக்க முடியாது உன்னுடைய தூக்கத்தை வேறு யாரிடமாவது கொடுத்து விடுகிறேன் உன்னை விட்டு விலகுகிறேன் என்கிறார். அதற்கு லட்சுமணன் நித்ரா தேவியிடம் நீ என் மனைவி ஊர்மிளையிடம் சென்று தூக்கத்தை எடுத்துக் கொள்ளும்படி கூறு அவளும் ஒப்புக்கொள்வாள் என்றதும் ஊர்மிளா அந்த தூக்கத்தையும் வாங்கிக்கொண்டு 14 வருடங்களும் தூங்கியே பெரும்பகுதியை கழித்தாள் என்று எழுதப்பட்டிருக்கிறது.
இப்போது புரிந்து இருக்கும் எதனால் இந்திரஜித்தை கொல்ல முடிந்தது என்று. எங்கிருந்து எங்கு முடிச்சு அவிழ்கிறது பாருங்கள்.

இதுபோல சில தியாகங்கள் யாருக்கும் தெரியாமலே போய்விடுகிறது. அதனால் தான் என்னவோ எனக்கு இந்த ஊர்மிளையின் பாத்திரம் மேல் எனக்கு ரொம்பவும் ஒரு ஈடுபாடு உண்டு.
அடுத்து அனுமன் பற்றி நாளை பார்க்கலாம்.

# மீம்ஸ்







## கரையான்கள்




கரையான்களைப் பற்றிய ஒரு ஒலிஒளிநாடா கேட்டேன் வழங்கியவர் கோவைசதாசிவம் அற்புதமான பதிவு ஆங்கிலத்தில் whiteant என்று படித்திருந்தேன் அதுவும் தவறு தான் என்று அறிந்தேன் #termite
எறும்பு வகையை சார்ந்தது என்று நினைத்திருந்தேன் அதுவும் தவறு என்று தெளிவாயிற்று
கரையான்களுக்குக் கண்ணு தெரியாது என்பது ஆச்சரியமான ஒன்று கரையான் புற்றெடுக்க கருநாகம் குடிபுகுந்தது என்ற பழமொழியில் கருநாகம் இப்புற்றைக் கட்டவில்லை என்பது அறிய முடிகிறது இருந்தாலும் பாம்பு புற்று என்றே அழைக்கப்படுகிறது பிளவுபட்ட நாக்கை உடைய பாம்பால் குடிக்க முடியாது எனத் தெரிந்தும் புற்றுக்குள் பாலை ஊற்றும் பழக்கம் இந்தியர்களிடையே உண்டு
கரையான் சமுதாய நலன் அளிக்கும் பூச்சி மண்ணை நெகிழ்வித்து மண்ணின் மேல் புற்றுகளாக அதற்கும் கண்கள் ஓட்டைகள் வைத்து என்னவொரு அருமையான கட்டமைப்பு
இதன்பின் ஒரு உருமாற்றம் தான் ஈசல் என்பது இன்னொரு ஆச்சரியமான செய்தி காலமாற்றங்களை அறிவிக்கும் விதமாக...
தான் கட்டிய வீட்டில் அடுத்தவரைப் குடிவைத்த முதல் ஜீவராசி....
இதனால்தான் காளான்கள் வளருகிறது ஆஹா எத்தனை நல்ல விஷயங்கள் இருந்தபோதிலும் ஓலைச்சுவடிகளைத் தின்ன கரையான்களை....
மண்ணால் கட்டப்பட்ட எங்கள் வீட்டில் கிடுகிடு என்று ஏறும் கரையான்கள் கதவைச் சாப்பிடும் கரையான்கள்...
இப்படிக் கரையான்களைப் பற்றிய அதிருப்தியான நிலையிலிருந்து ஆச்சரியப்பட வைத்தது அவரின் விளக்கம்....
எல்லாவற்றிற்கும் மனமே காரணம்...
இயற்கை தன்னில் எத்தனை அற்புதங்களைக் கொண்டுள்ளது இயற்கையை நேசிப்போம்....



## விடுகதை

| | |
|---|---|
| என்னங்க ஏன் அடிக்கடி சமையல் ரூம் பக்கம் போறீங்க? | டாக்டர் தான் சுகர் இருக்கானா அடிக்கடி செக் பண்ண சொன்னாரு. |
| தானத்தில் பெரிய தானம் எது? | மைதானம். |
| ஏன்டா நாய் படம் வரைந்து விட்டு வாய் மட்டும வரையாமல் வச்சி இருக்க? | அது வாயில்லா பிராணி சார். |
| டாக்டர் இவ்வளவு மாத்திரையும் இரண்டு நாள்ல சாப்பிட்டு முடிக்கும் என்று சொன்னிங்களே ஏன்? | இரண்டு நாட்களுக்கு அப்புறம் எக்ஸ் ஸ்ப்ரே முடிந்துவிடும். |
| கும்பகர்ணன் மாத கணக்கில் தூங்கினான் அது என்ன காலம்? | கொசுவே இல்லாத காலம். |



## ஜோக்ஸ்

ஆசிரியர் மாணவர் ஜோக்ஸ்

பத்து நாளா கிளாஸுக்கு வரதில்லை?
ஒரே இடத்துக்கு அடிக்கடி போன மரியாதை இருக்காதுனு, எங்க அப்பா சொல்லி இருக்கார். அதான் சார் வரல!

கடி ஜோக்ஸ்:
டேய் ராமு! காலில் முள் குத்தியது இது என்ன காலம்?
கஷ்டகாலம், சார்.

வள்ளுவருக்கு அதிகாரம் செய்வது என்றால் ரொம்ப பிடிக்குமா சார்?
ஏன் அப்படி?
1330 குறலையும் 133 "அதிகாரமா" எழுதியிருக்காரே அதான் கேட்டான்.

உங்க ஆசிரியர் ஒரு மாதத்தில் சுமாராய் எத்தனை பாடங்கள் நடத்துவார்?
எல்லா பாடங்களையும் "சுமாராய்" தான் நடத்துவார்!



இந்தியாவில் எங்கெல்லாம் பெட்ரோல் கிடைக்கும்?
எல்லா பெட்ரோல் பங்கிலும் கிடைக்கும், சார்!

ஏன்டா பரிட்சை எழுத வந்துட்டு தூங்குற?
கேள்விக்கு பதில் தெரியலனா சும்மா "முழிச்சு"க்கிட்டு இருக்க கூடாதுன்னு எங்க அப்பா தான் சொன்னாங்க சார்.




# தூக்க குறைபாட்டுக்கான காரணங்கள்

உடலின் சமநிலையை பேணவும், உடல்-மன நிம்மதியை அளிக்கவும் தூக்கம் மிகவும் அவசியமானது. சோர்வில் இருந்து மீட்டெடுத்து, புதிய ஆற்றலை உடலுக்கும், உள்ளத்துக்கும் வழங்கும் மகத்தான சக்தி தூக்கத்திற்கு இருக்கிறது. ஆனால், இன்றைய பரபரப்பான வாழ்க்கை முறையால் பலர் தூக்கக் குறைபாடு பிரச்சனைகளை எதிர்கொள்கிறார்கள். எந்தவித வெளிப்புற சத்தமோ அல்லது அலாரமோ இல்லாமல் இரவில் திடீரெனவோ, அடிக்கடியோ விழித்துக்கொள்வதும், மீண்டும் தூங்க முடியாமல் அவதிப்படுவதும் தூக்கம் பாதிக்கப்பட்டுள்ளதற்கான அடையாளமாக கருதப்படுகிறது.

**ஆய்வு என்ன சொல்கிறது?**

அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வின் படி, 35.5 சதவீதம் பேர் வாரத்தில் குறைந்தது மூன்று இரவுகள் இவ்வகை தூக்க இடையூறுகளை அனுபவிக்கிறார்கள். 23 சதவீதம் பேர் இரவில் திடீரென விழித்துக்கொள்வதாக தெரிவிக்கிறார்கள்.

நீங்கள் அடிக்கடி அதிகாலை 3 மணி அல்லது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தினமும் விழித்துக்கொண்டு, மீண்டும் தூங்க முடியாமல் சிரமப்படுவதை வாடிக்கையாக கொண்டால் அதற்குரிய மருத்துவ காரணங்கள் குறித்து பார்ப்போம்...

**சர்க்காடியன் ரிதம் பாதிப்பு**

மனித உடலில் உள்ள சர்க்காடியன் ரிதம் எனப்படும் உட்புற உயிரியல் கடிகாரம் பாதிக்கப்படும்போது, தூக்கத்தில் அடிக்கடி விழிப்பு ஏற்படலாம். ஒளி மற்றும் இருள் போன்ற சுற்றுச்சூழல் காரணிகளின் அடிப்படையில், இந்த உயிரியல் கடிகாரம் செயல்படுகிறது. இது பாதிப்புக்குள்ளாகும்போது, தூக்கத்திற்கு முக்கிய பங்கு வகிக்கும் மெலட்டோனின் ஹார்மோன் சுரப்பு குறையலாம். அதன் காரணமாக தூங்குவதில் சிரமம், அடிக்கடி கண் விழித்துக்கொள்வது, வழக்கத்தை விட முன்பே கண் விழித்தல் போன்ற பிரச்சனைகள் ஏற்படலாம்.

ஒழுங்கற்ற தூக்க நேரம், சுற்றுச்சூழலில் நிலவும் அதிக சத்தம், அறை வெப்பநிலை சீரற்ற நிலையில் இருத்தல், மன அழுத்தம், நோய் பாதிப்பு, தூக்க கோளாறுகள், சில மருந்துகள், மின்னணு சாதனங்களை அதிகமாகப் பயன்படுத்துதல் உள்ளிட்டவை சர்க்காடியன் ரிதம் பாதிக்கப்படுவதற்கு முக்கிய காரணங்களாக அமைந்திருக்கின்றன. இந்த உயிரியல் கடிகாரம் நீண்ட காலம் பாதிக்கப்பட்டால், தூக்கக்கோளாறால் நீண்ட நாட்கள் தவித்தல், சோர்வு, உடல் எடை அதிகரிப்பு, நீரிழிவு, மன அழுத்தம் போன்ற பிரச்சனைகள் ஏற்படும் அபாயம் உள்ளது.

**தூக்க இடையூறுக்கான மற்ற காரணங்கள்**

மிகுந்த மன அழுத்தம் கொண்டிருந்தாலும் இரவில் திடீரென விழிப்பு ஏற்படும். அப்படிப்பட்ட தூக்க குறைபாடு பிரச்சனை நீடித்தால் கார்டிசால் போன்ற மன அழுத்த ஹார்மோன்களின் சுரப்பு அதிகரித்து, தூக்கத்தை மேலும் பாதிக்கும். கவலை, பதற்றம் அதிகரித்தாலும் தூக்கத்தின் போது பயமுறுத்தும் கனவுகள் காணக்கூடும். அப்போது திடீரென விழிப்பு உண்டாகலாம். 'சிலீப் அப்னியா' எனப்படும் தூக்கத்தின்போது சுவாசம் அடிக்கடி தடைபடுவது அல்லது சுவாசம் குறைவது போன்ற பாதிப்புகள் ஏற்பட்டால் குறட்டை, மூச்சுத்திணறல், பகலில் தூக்கம் கண்களை தழுவுதல், சோர்வு போன்ற அறிகுறிகள் வெளிப் படும்.

**தூக்கத்தை மேம்படுத்த சில ஆலோசனைகள்**

தினமும் இரவில் ஒரே நேரத்தில் தூங்கச் செல்லவும், காலையில் ஒரே நேரத்தில் விழிக்கவும்.

தூங்குவதற்கு முன்பு குறைந்தது 30 நிமிடம் மின்னணு சாதனங்களை தவிர்க்கவும்.

தூங்கும் முன்பு காபி, புகையிலை, மதுபானம் போன்றவற்றை தவிர்க்கவும்.

தினமும் உடற்பயிற்சி செய்யவும்.

அமைதியான, வசதியான, குளிர்ச்சியான அறையில் தூங்கவும்.

தூங்குவதற்கு முன்பு ஜீரணிக்க கடினமான உணவுகளை தவிர்க்கவும்.

இயற்கை சூரிய ஒளியை போதுமான அளவு பெறவும்.

படுக்கையறையை தூக்கம் மற்றும் தாம்பத்தியத்துக்கு மட்டுமே பயன்படுத்தவும்.

தியானம், சுவாச பாச பயிற்சி போன்ற தளர்வு முறைகளை பின்பற்றவும்.



# வந்தாச்சு கோடை... வாட்டும் வெளியில் இருந்து உடலை பாதுகாக்க பயனுள்ள டிப்ஸ்

மார்ச் மாத மத்தியிலேயே கோடையின் தீவிரம் தெரியத் தொடங்கிவிட்டது. இனி நாட்கள் செல்லச் செல்ல, கோடையின் கடுமை அதிகரிக்கும். இந்நிலையில், கோடை காலத்தை உடல் ஆரோக்கியப் பிரச்சனைகள் இன்றி நலமாய் கழிக்க உதவும் சில குறிப்புகளை பார்க்கலாம்...



* கோடையில் சூரிய ஒளியின் தாக்கத்தால் நம் சருமத்தில் புறஊதாக் கதிர்களால் பாதிப்பு ஏற்படலாம். ஆக்சிடேசன் எனும் வேதி மாற்றம் உங்களை களைப் படையச் செய்யும். அதிலிருந்து தப்பிக்க நல்ல சத்தான உணவுகளை உட்கொள்ள வேண்டும். அதுவும் அளவோடு எடுத்துக்கொள்ள வேண்டும்.

* உடலுக்குக் குளிர்ச்சி தரும் தானியங்களான சோளம், பார்லி போன்றவற்றை கோடை காலத்தில் சேர்க்கலாம். மேலும், சோம்பு, சீரகம், பழங்களில் திராட்சை, பேரீச்சை மற்றும் நீர்ச்சத்துள்ள பழங்கள் நல்லது.

* கோடை காலத்தில் வரும் முக்கியமான பிரச்சனை, 'புட் பாய்சனிங்' எனப்படும் உணவு நஞ்சாதல். அதைத் தவிர்க்க, சீரகத்தை வறுத்துப் பொடி செய்து ஒரு மணி நேரத்துக்கு ஒருமுறை ஒரு ஸ்பூன் பொடியை மோரில் கலந்து குடித்து வர, புட் பாய்சன் அபாயம் நீங்கும். வயிற்றுப்போக்கு போன்றவற்றையும் சரிசெய்யும்.

* கோடை காலத்தில் இரவில் பனங்கற்கண்டு கலந்து பாலை அருந்தி வர, உடல் சூடு தணியும். பகலில் கொத்தமல்லித் தழையை அரைத்து மோரில் கலந்து குடித்தால் உடல் சூடு குறையும். ரோஜா இதழ்களை தேனில் ஊறவைத்துச் சாப்பிடலாம்.

* உடலில் சூட்டை அதிகரிக்கும் வேர்க்காய்கறிகளான உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ், பீட்ரூட் மற்றும் வெங்காயம், பூண்டு, இஞ்சி, காளான் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். இல்லாவிட்டால் அளவாகப் பயன்படுத்த வேண்டும்.

* கோடை காலத்தில் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்தை அளிப்பதுடன், நீரிழப்பைத் தடுக்கவும் தர்பூசணி உதவுகிறது. தர்பூசணி உங்களை நீரேற்றமாகவும், குளிர்ச்சியாகவும் வைப்பதுடன், சூரிய வெப்பத்தால் சருமம் சேதமடையாமல் பாதுகாக்கிறது. முலாம் பழம், கோடைகால வெப்பத்தால் உண்டாகும் ஹார்மோன் மாற்றங்களைத் தவிர்த்து உடலை நீரேற்றமாக வைக்க உதவும்.


* கோடை நாட்களில் அதிக தாகம் ஏற்படும். அதற்கு, செம்பருத்தி பூவின் 5 இதழ்களை ஒரு லிட்டர் நீரில் ஊறவைத்து குடிக்கலாம். நெல்லி வற்றலை பாக்கு போல வாயிலிட்டு மென்று வந்தாலும் தாகம் தணியும். உணவில் தேனை அடிக்கடி சேர்த்துக்கொள்ளலாம்.

* வெயில் நேரத்தில் அவ்வப்போது முகம் கழுவிக் கொள்ளுங்கள். உடனே துணியால் துடைக்காமல் அப்படியே விட்டு விடுங்கள். சிறிது நேரத்தில் தானாகவே உலர்ந்து விடும். நல்ல புத்துணர்ச்சியும் கொடுக்கும்.

* அதிக வெப்பம் காரணமாக சில நேரங்களில் கண்கள் எரியும். அப்போது ஒரு கைக்குட்டை அல்லது தூய துணியை நீரில் நனைத்து அவ்வப்போது கண்களில் ஒற்றிக்கொள்ளுங்கள்.

* கோடை காலத்தில் கண்களின் நலன் காக்க தினமும் 50 கிராம் அளவுக்கு மாம்பழம் அல்லது பப்பாளியைச் சாப்பிட்டு வரலாம். அரைக்கீரையை வாரம் இருமுறை சாப்பிட்டு வந்தால் கண்கள் குளிர்ச்சியடையும். அதுபோல் பொன்னாங்கண்ணி, முருங்கைக் கீரை சாப்பிட்டாலும் பார்வைத்திறன் மேம்படும். வெளியே செல்லும்போது சன்ஸ் கிரீன் போட்டுக்கொள்வதும் நல்லது.

# கண் கண்ணாடியை முறையாக பராமரிப்பது எப்படி?



டிஜிட்டல் யுகத்தில் கண் கண்ணாடி, அவசியமான ஒன்றாகிவிட்டது. பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை... எல்லோரும் கண் கண்ணாடிகளை உபயோகித்து வரும் நிலையில், அதை பராமரிக்க சில யோசனைகள்...

* மூக்குக் கண்ணாடிகளை உபயோகப்படுத்தாத நேரங்களில் அதன் உறையில் போட்டு வைத்திருக்க வேண்டும். அது முடியாவிடில் கண்ணாடி பாகம் மேசை மீது படாதவாறு வைக்க வேண்டும்.

* மூக்குக் கண்ணாடியை கழற்றும் போது இரண்டு கைகளாலும் கண்ணாடியின் விளிம்பில் இணையும் இடத்தில் பிடித்து கழற்ற வேண்டும். ஒரு கையால் கழற்றும்போது மெல்லிய கண்ணாடி பிரேம்கள் வளைந்து போகவும், உடைந்து போகவும் வாய்ப்புகள் உள்ளன.

* மூக்குக் கண்ணாடியை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். உபயோகப்படுத்தும் முன் ஒவ்வொரு முறையும் மென்மையான துணியால் நன்கு துடைக்க வேண்டும்.

* மூக்குக் கண்ணாடிகளை அவ்வப்போது சரி பார்த்துக் கொள்ள வேண்டும். இணைப்புகள் தளர்ந்துவிடாமல் முகத்தில் சரியாக பொருந்தும்படி செய்து உபயோகித்துக் கொள்ள வேண்டும்.

* ஒருவரது மூக்குக் கண்ணாடியை மற்றவர் உபயோகப்படுத்தக் கூடாது. இதனால் அளவுகள் மாறி உரியவர் அணியும்போது பொருந்தாமல் அசவுகரியம் ஏற்படுத்தும்.

# வல்லாரை கீரையின் மருத்துவ குணங்கள்

வல்லாரை உண்பதும் நன்று, நல்லாரை காண்பதும் நன்று என்ற முதுமொழிக்கு ஏற்ப சர்வ வல்லமை மிக்க கீரையாக வல்லாரைக் கீரை விளங்குகிறது. இந்தக் கீரையுடன் பால் கலந்து அரைத்து சாப்பிட வேண்டும். வல்லாரை விழுதை தொடர்ந்து மாதக் கணக்கில் சாப்பிட்டு வந்தால் நரை மறைந்து இளமை தோற்றம் திரும்பும்.

உடலில் ஏற்படும் கட்டிகள், புண்கள் ஆகியவற்றை சரி செய்து விடும் ஆற்றல் வல்லாரைக்கு உண்டு. வல்லாரை கீரையுடன் மிளகு, துளசி இலை ஆகியவற்றை சம அளவு எடுத்து மெழுகு பதமாக அரைத்து மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு வெந்நீரில் கலந்து சாப்பிட்டால் காய்ச்சல் குணமாகும்.

யானைக்கால் நோய் உள்ளவர்கள் வல்லாரைக் கீரையை தொடர்ந்து காலில் வைத்து கட்டி வந்தால் யானைக்கால் நோய் எளிதில் குணமாகும். வல்லாரை கீரையை அரைத்து, அதை சாப்பிட்டு வந்தால் விரை வீக்கம், வாயு வீக்கம், தசை சிதைவு போன்றவை குணமாகி விடும். இந்தக் கீரையில் இரும்புச்சத்து, சுண்ணாம்புச்சத்து, உயிர்ச் சத்துகள் மற்றும் தாது உப்புக்கள் ஏராளமாக அடங்கியுள்ளன. ரத்தத்திற்கு தேவையான சத்துக்களை, சரிவிகித அளவில் கொண்டுள்ளது.



வெரிகோஸ் வெயின் என்று சொல்லக் கூடிய கால் நரம்புகளை பாதிக்கும் பிரச்சினைக்கும் இந்த வல்லாரை ஒரு மிக சிறந்த நிவாரணியாக விளங்குகிறது. வல்லாரைக் கீரை மத்திய நரம்பு மண்டலத்தை பலப்படுத்தக் கூடியதாக விளங்குகிறது. நரம்பு மண்டலங்களை பலப்படுத்துவதன் மூலம் நமது செயல்பாடுகள் மிகவும் சீராக அமைவதற்கு இது மிகுந்த உதவியாக அமைகிறது.

மன அழுத்தத்தை தடுத்து நிறுத்துகிறது. வல்லாரைக் கீரை நோய் எதிர்ப்பு மருந்தாகவும் பயன்படுகிறது. மேலும் உடலில் உள்ள நோய் கிருமிகளை அழிக்கும் சக்தியும் வல்லாரைக்கு உண்டு. வல்லாரைக் கீரையை வலியை போக்கக் கூடிய ஒரு மேற்பூச்சு மருந்தாகவும் பயன்படுத்த முடியும். வல்லாரை கீரையை நீர் விடாமல் நன்றாக பசை போல் அரைத்துக் கொள்ள வேண்டும். இந்த பசையை வீக்கம் உள்ள இடத்தில் ஒரு பற்று போல் போட்டு வந்தால் வீக்கம் படிப்படியாக குறைய ஆரம்பிக்கும்.

மூளை நன்கு செயல்பட தேவையான ஊட்டச்சத்துக்களை, தகுந்த முறையில் பெற்றிருக்கிறது. எனவே தான், இதனை சரசுவதிக் கீரை என்றும் அழைக்கின்றனர். ரத்த சுத்திகரிப்பு வேலையைச் சிறப்பாக செய்கிறது. தொண்டைக்கட்டு, காய்ச்சல், உடற்சோர்வு, பல் நோய்கள் மற்றும் படை போன்ற தோல் நோய்களை வேரறுக்கும் வல்லமைக் கொண்டது. இந்த கீரையை கொண்டு பல் துலக்கினால், பற்களின் மஞ்சள் தன்மை நீங்கும். வல்லாரை கீரையுடன் நல்ல நீர் சேர்த்து அரைத்து வல்லாரை ஜூஸாக்கி தினமும் 25 மில்லி அல்லது 30 மில்லி குடித்து வர மாரடைப்பு நம்மை நெருங்காது.






## ஆகாசா ஏர் விமான கட்டணம் உயர்வு




வளைகுடா போர் காரணமாக விமான எரிபொருளின் விலை உயர்ந்துள்ள நிலையில், இந்திய விமான சேவை நிறுவனமான ஆகாசா ஏர் விமான கட்டணத்தை உயர்த்தியுள்ளது. அதன்படி உள்ளூர் மற்றும் பன்னாட்டு விமான சேவைக்கு நாளை முதல் விமான டிக்கெட் கட்டணத்துடன் 199 ரூபாய் முதல் ஆயிரத்து 300 ரூபாய் வரை கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விடுதிகளிலும் உணவு சமைப்பது குறைப்பு



கல்லூரி வளாகங்களில் உள்ள மாணவர் விடுதிகள் மற்றும் தனியார் தங்கும் விடுதிகளிலும் உணவு சமைப்பது குறைக்கப்பட்டுள்ளதால் காய்கறிகளுக்கான தேவை குறைந்துள்ளது.

## வாக்காளர் விவரங்கள்



தமிழகத்தில் வரும் ஏப்ரல் 23-ம் தேதி நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்காளர் விவரங்களை இந்தியத் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

## தேசிய மக்கள் நீதிமன்றம்



**வாடிப்பட்டி, மார்ச்.16:** மதுரை மாவட்ட தேசிய சட்டப் பணிகள் ஆணைக்குழு உத்தரவுபடி தேசிய மக்கள் நீதிமன்றம் லோக் அதாலத் வாடிப்பட்டி உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நடந்தது. இந்த வழக்குகளை வாடிப்பட்டி நீதிமன்ற நீதிபதிகள் ராமகிஷோர் செல்லையா ஆகியோர் விசாரணை செய்தனர். இதில் உரிமைகள் வழக்குகள், வாடகை பிரச்சினை, கொடுக்கல் வாங்கல், குடும்ப பிரச்சினை, குற்றவியல் வழக்குகள், மோட்டார் வாகன விபத்து, நஷ்ட ஈடு வழக்கு, வங்கி கடன்,காசோலை மோசடி வழக்கு உள்ளிட்ட 95 வழக்குகளை விசாரணை செய்து அபராத தொகை ரூ. 70லட்சத்து 40ஆயிரத்து913 பெறப்பட்டது.

## ஸ்ரீனிவாச பெருமாள் திருவோணம்



அதன்கொண்டாங்குடி ஸ்ரீனிவாச பெருமாள் திருவோணம்

## ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள் நன்றி



தமிழ் மண்ணின் கலாச்சாரத்திற்கு பெருமை சேர்க்கும் பாரம்பரிய பண்பாடு மிக்க தமிழர்களின் வீர விளையாட்டு ஜல்லிகட்டு சட்டத் திருத்தத்துக்கு மகுடம் சூட்டிய அ.தி. மு.க. மேலும் அதற்கு பெரு மை சேர்க்கும் விதமாக ஜல்லிக் கட்டு வீர விளையாட்டில் எதிர் பாராமல் உயிர் இழக்கும் மாடுபிடி வீரர்களின் குடும்பத்திற்கு ரூ.10 லட்சம்வழங்கப்படும் என்று அறிவித்த கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமிக்குதமிழ்நாடு ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள் சார்பாக வழக்கறிஞர்குலமங்கலம் திருப்பதி நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார்.

## ரமலான் நோன்பு திறப்பு நிகழ்ச்சி



சென்னை கீழ்ப்பாக்கம் பகுதியில் நடந்த ரமலான் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு பேசுகையில், “ஈகைப் பண்பும், அடுத்தவர்களுக்கு உதவும் மனமும், அனைவரையும் சமமாக கருதி அன்பு செலுத்தும் சமநெறியும் கொண்ட தூய இஸ்லாமிய சொந்தங்கள் இங்கே கூடியிருக்கிறீர்கள். உங்கள் அனைவருக்கும் என்னுடைய ரமலான் நல்வாழ்த்துகளை முதலில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கொள்ளைச் சம்பவம் குறித்த Viral Heist Video



அமெரிக்காவில் இந்திய வம்சாவளியினருக்குச் சொந்தமான ஒரு நகைக்கடையில், சினிமா பாணியில் அரங்கேறிய கொள்ளைச் சம்பவம் குறித்த *Viral Heist Video* இப்போது இணையதளங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. “*Mob-style*” என அழைக்கப்படும் கும்பல் கொள்ளை முறையில், முகமூடி அணிந்த மர்ம நபர்கள் கண்ணிமைக்கும் நேரத்தில் கடையை நிலைகுலையச் செய்துள்ளனர். வெறும் 70 நொடிகளில் கடையின் 80 சதவீத இருப்பு நகைகளைச் சூறையாடிக்கொண்டு அந்தக் கும்பல் தப்பியோடியுள்ளது. பாதுகாப்புக் கேமராவில் பதிவான இந்தக் காட்சிகள், அமெரிக்காவில் சிறுபான்மை வணிகர்கள் எதிர்கொள்ளும் பாதுகாப்பு அச்சுறுத்தலை மீண்டும் ஒருமுறை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

## வாரு விசேஷ சமர்ப்பணம்

அண்ணமச்சாரியர் வதுாந்தி நாளில் திருமலை ஸ்ரீமாலையப்ப ஸ்வாமி வாரு விசேஷ சமர்ப்பணம்





ஹார்முஸ் ஜலசந்திக்கு போர்க்கப்பல்களை அனுப்ப அமெரிக்கா தயாராகி வருவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார் . இந்த முக்கியமான கடல் வழியை பாதுகாக்க மற்ற நாடுகள் தங்கள் கப்பல்களை அனுப்ப வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஆனால், அதில் இரண்டு பெரிய நாடுகள் ட்ரம்பிற்கு ஏமாற்றத்தையே பரிசாக கொடுத்துள்ளன. இதனால், அடுத்ததாக அவர் என்ன செய்யப் போகிறார் என்ற எதிர்பர்ப்பு ஏற்பட்டுள்ளது.

## பறக்கும் படைகள் தீவிர கண்காணிப்பு




விழுப்புரம் மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்த நிலையில் வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசு பொருட்கள் விநியோகிப்பதை தடுக்க, மாவட்டம் முழுவதும் 49 பறக்கும் படைகள் தீவிர கண்காணிப்பு

## தங்க புதையல்



கர்நாடக மாநிலம் கடக் (*Gadag*) மாவட்டத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க லக்குண்டி கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட தங்க புதையல் சம்பவம் தற்போது புதிய திருப்பத்தை எடுத்துள்ளது. வீட்டின் அடித்தளம் தோண்டும் போது கிடைத்த 466 கிராம் தங்க ஆபரணங்கள் கொண்ட புதையல், நிபுணர்கள் மதிப்பீட்டின்படி சுமார் 8 கோடி ரூபாய் மதிப்புள்ளதாக கூறப்படுகிறது.

## வேட்பாளர்கள் நேர்காணல்




தமிழகம் புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத்தேர்தலுக்கான வேட்பாளர்கள் நேர்காணல் வரும் மார்ச் 17ம் தேதி முதல் 22 ம் தேதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.





தமிழ்நாட்டில் எம்பிஏ, எம்சிஏ மற்றும் பொறியியல் மேற்படிப்பு சேர்க்கைக்கான டான்செட் 2026 மற்றும் சீட்டா பிஜி 2026 நுழைவுத் தேர்வுகளுக்கான பதிவு தொடங்க உள்ளதாக அண்ணா பல்கலைக்கழகம் (*Anna University*) அறிவித்துள்ளது. இந்த தேர்வுகள் மூலம் மாநிலம் முழுவதும் உள்ள பல்கலைக்கழகத் துறைகள், அரசு மற்றும் அரசு உதவி கல்லூரிகளில் மேற்படிப்பு சேர்க்கை நடைபெறும்.

## இன்றும் மழைக்கு வாய்ப்பு



தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்தில் இன்றும் மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.




## பக்த ஆஞ்சநேயருக்கு மண்டல பூஜை விழா..!

**வந்தவாசி, மார்ச் 16:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி கோட்டை ஸ்ரீபக்த ஆஞ்சநேயர் கோயிலில் கடந்த மார்ச் 8 ஆம் தேதி கும்பாபிஷேகம் நடந்ததையொட்டி மண்டல பூஜை விழா தினந்தோறும் நடைபெற்று வருகிறது. நேற்றைய நிகழ்ச்சியில் மூல மூர்த்திகளுக்கு விசேஷ திருமஞ்சனம் மற்றும் மகா தீபாராதனை நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.



## குழந்தைகள் சென்னை முதல் கோவை வரை விமானத்தில் பயணம்




பொருளாதார ரீதியாக பின்தங்கிய குழந்தைகளுக்கும் வாழ்க்கையில் உயர்ந்து சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையை உருவாக்கும் வகையில், காப்பகங்களில் வசித்து வரும் 30க்கும் மேற்பட்ட குழந்தைகள் சென்னை முதல் கோவை வரை விமானத்தில் பயணம் செய்து அறிவியல் சுற்றுப்பயணத்தில் கலந்து கொண்டனர்.

# சுற்றுலா: கேரளாவில் சிறந்த சுற்றுலா இடங்கள்



கடவுளின் சொந்த நாடு, கேரளா இந்தியாவில் கட்டாயம் பார்க்க வேண்டிய இடங்களில் ஒன்றாகும். கேரளாவில் உள்ள சுற்றுலா தலங்கள், மறக்கமுடியாத அனுபவங்களை அளிக்கின்றன

1. அலெப்பி:

கேரளாவின் சிறந்த சுற்றுலா தலங்களில் அலெப்பி முதலிடத்தில் உள்ளார். இந்த நகரத்திற்கு 'கிழக்கின் வெனிஸ்' என்று பெயரிடப்பட்டது. இப்பகுதியில் உள்ள உப்பங்கழிகள் ஒரு படகு விடுமுறைக்கு ஏற்றவை. நீர் வழித்தடங்களில் ஆராயுங்கள். ஹவுஸ் படகுகள் 5-நட்சத்திர ஹோட்டலுக்கு சமமான ஆடம்பரங்களுடன் புதுப்பிக்கப்பட்ட பழைய போக்குவரத்து முறைகள். அழகிய நிலப்பரப்பு இனிமையான பார்வை. தேங்காய் தோப்புகள், நெல் வயல்கள், வாத்துகள் மற்றும் அல்லிகள் மற்றும் விசித்திரமான கிராமங்கள் கடந்து செல்வதைப் பாருங்கள்.

அலெப்பியில் பார்க்க வேண்டிய இடங்கள்: ஆலப்புழா கடற்கரை, கிருஷ்ணபுரம் அரண்மனை, மராரி கடற்கரை, ரேவி கருணாகரன் அருங்காட்சியகம், புன்னமாதா ஏரி, பதிரமணல், மற்றும் அம்பலப்புழாவில் உள்ள ஸ்ரீ கிருஷ்ணா கோயில்.

2. மூணார் :

முன்னார் கேரளாவின் மிக அழகான மலை வாசஸ்தலங்களில் ஒன்றாகும். 6000 அடி உயரத்தில் பதுங்கியிருக்கும் இந்த நகரம் எளிதான அழகைக் கொண்டுள்ளது. தேயிலை வளர்ப்பிற்கு இந்த மலையின் சாய்வு மற்றும் உற்சாகமான வானிலை சரியானது. இந்த மலை வாசஸ்தலத்தில் சுமார் 80,000 மைல் தேயிலைத் தோட்டம் உள்ளது. தேயிலை மற்றும் மசாலா தோட்ட சுற்றுப்பயணத்திற்காக கேரளாவில் பார்வையிட சிறந்த இடங்களில் இது சந்தேகத்திற்கு இடமின்றி உள்ளது. மூணார் என்பது உங்கள் உடல், மனம் மற்றும் ஆன்மாக்களுக்கு ஒரு தைலம்.

மூணரில் பார்க்க வேண்டிய விஷயங்கள்: அத்துகாட் நீர்வீழ்ச்சிகள், சாயப்பாரா நீர்வீழ்ச்சிகள், டாடா தேயிலை அருங்காட்சியகம், மீசாபுலிமாலா, ப்ளாசம் பார்க், பொதமெடு வியூ பாயிண்ட், லைஃப் ஆஃப் பை சர்ச், டாப் ஸ்டேஷன், மராயூர் டால்மென்ஸ், மேட்டுபெட்டி அணை, இந்தோ சுவிஸ் பால் பண்ணை, குண்டலா ஏரி, லோகார்ட் இடைவெளி, அனாமுகு

3. கோவலம்

கேரளாவின் சிறந்த இடங்களுள் பட்டியலிடப்பட்டுள்ள கோவளம் ஒரு அழகு மற்றும் நேசத்துக்குரிய அனுபவங்களை அளிக்கிறது. இந்த இடம் சுற்றுலாப் பயணிகளுக்கு நிறைய வழங்குகிறது. கூடுதலாக, இனிமையான வானிலை, இனிமையான காற்று, தங்க மென்மையான மணல் மற்றும் உயரமான தேங்காய் மரங்கள் இந்த சிறிய சொர்க்கத்திற்கு அதிக அழகை சேர்க்கின்றன. மேலும், சூடான சூரிய ஒளியில் நீச்சல் அல்லது கூடைக்குச் செல்லுங்கள். உதட்டை நொறுக்கும் கடல் உணவை அனுபவிக்கவும். இனிமையான ஆயுர்வேத மசாஜ்களும் வழங்கப்படுகின்றன. அரவணைப்பு, ஸ்நோர்கெலிங் போன்ற நீர் விளையாட்டுகளை முயற்சி செய்யுங்கள். கூடுதலாக, உங்கள் குடும்பத்திற்கு ஏற்ற பல தங்குமிட விருப்பங்கள் உள்ளன, நேசித்தவர் அல்லது நீங்களே ஒய்வெடுக்க வேண்டும்.

கோவளத்தில் பிரபலமான சுற்றுலா தலங்கள்:

கலங்கரை விளக்கம், கலங்கரை விளக்கம், ஹவா கடற்கரை, சமுத்ரா கடற்கரை, திருவள்ளம் பரசுராம கோயில், விசின்ஜம் கடல் மீன், ஹால்சியான் கோட்டை, அக்குலம் ஏரி, விஜின்ஜாம் மீன்பிடித் துறைமுகம், கோவளம் ஜமா மஸ்ஜித், வெல்லயணி ஏரி, கரமணா நதி, அருவிக்காவேர், ராக் குடிக்வேர்

4. கொச்சி கோட்டை

கேரளாவின் சிறந்த சுற்றுலா இடங்களில் ஒன்றான கொச்சி கோச்சி பெரும்பாலும் கடவுளின் சொந்த நாட்டிற்கான நுழைவாயிலாகும். அரேபியராணிக்குபல ஆளுமைகள் உள்ளன. நகரத்தில் வரலாறு, பாரம்பரியம் மற்றும் பல இன கலாச்சாரம் உள்ளது. இயற்கை ஆர்வலர்கள், வரலாற்று ஆர்வலர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்றது, இது கேரளாவில் அதிகம் பார்வையிடப்படும் பயண இடங்களில் ஒன்றாகும். காட்சிகள், உணவு மற்றும் அனுபவங்களைப் பொறுத்தவரை, கோச்சி கோட்டைக்கு நிறைய விஷயங்கள் உள்ளன. அருங்காட்சியகங்கள், அரண்மனைகள், ஜெப ஆலயங்கள், இந்து கோவில்கள், தேவாலயங்கள், பாரம்பரிய கட்டிடங்கள், கலைக்கூடங்கள், கடற்கரைகள் ஆகியவற்றுடன் கொச்சி உங்களை ஆராயத் தூண்டுகிறது.

கொச்சி கோட்டைக்கு அருகிலுள்ள சிறந்த இடங்கள்: சூரிய அஸ்தமனம் அல்லது சூரிய உதயத்தின் போது சீன மீன்பிடி வலைகள், மட்டஞ்சேரி அரண்மனை, பரதேசி ஜெப ஆலயம், செயின்ட் பிரான்சிஸ் தேவாலயம், சாண்டா குரூஸ் பசிலிக்கா, ஹில் பேலஸ், மரைன் டிரைவ், எர்ணாகுளம் சிவன் கோயில், இந்தோ-போர்த்துகீசிய அருங்காட்சியகம், போல்கட்டி அரண்மனை, கோடனாட் யானை பயிற்சி மையம், வில்லிங்டன் தீவு, கொச்சி உப்பங்கழிகள், கேரள வரலாற்று அருங்காட்சியகம் போன்றவை. (தொடரும்)

## வேலைவாய்ப்பு கார்னர்

### தமிழ்நாடு அரசு வேலை வாய்ப்பு; டிகிரி, இன்ஜினியரிங் தகுதி



தமிழ்நாடு அரசின் உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தில் பகுப்பாய்வாளர் பணியிடத்தை நிரப்புவதற்கான வேலை வாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இந்த பணியிடம் தற்காலிக நியமனம் அடிப்படையில் நிரப்பப்பட உள்ளன. தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் 13.04.2026க்குள் விண்ணப்பித்துக் கொள்ளுங்கள்.

பகுப்பாய்வாளர் (Analyst)

காலியிடங்களின் எண்ணிக்கை: 1

கல்வித் தகுதி: Bachelor's/ Master's degree in Economics, Statistics, Public Policy, Development Studies, Social Sciences, Engineering படித்திருக்க வேண்டும். மேலும் 3 5 வருட பணி அனுபவம் உடையவராக இருக்க வேண்டும்.

சம்பளம்: இந்த பதவிக்குரிய தகுதிக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.

தேர்வு செய்யப்படும் முறை: இந்தப் பணியிடங்களுக்கு நேர்முகத் தேர்வு அடிப்படையில் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்.

விண்ணப்பிக்கும் முறை: இந்த பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க தங்கள் சுயவிவரக் குறிப்பு அடங்கிய விண்ணப்பத்தினை தேவையான ஆவணங்களுடன் கீழ்கண்ட முகவரி மற்றும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

முகவரி: The Chief Executive Officer, Tamil Nadu Infrastructure Development Board, 3 rd Floor, Tower-II CMDA Building, Egmore, Chennai-8

மின்னஞ்சல் முகவரி: soinfra.findpt@tn.gov.in

விண்ணப்பிக்க கடைசி தேதி: 13.04.2026

## முன்னாள் படைவீரர்கள் முதல்வர் ஸ்டாலினுக்கு நன்றி!

**சென்னை, மார்ச் 16:**

*தமிழ்நாட்டைச் சார்ந்த சுமார் 1,84,000 முன்னாள் படைவீரர்களில் 5,000-க்கு மேற்பட்டோர் சென்னையில் பணிபுரிந்து வருகிறார்கள்.*

*இதைக் கருத்திற்கொண்டும், தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம் மற்றும் முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில் சென்னையில் பணிபுரியும் மற்றும் வெளி மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு வருகை தரும் முன்னாள் படைவீரர்கள் தங்கி பயனடையும் வகையிலும் செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலையில் 35 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 59,600 சதுர அடி பரப்பில் தரை மற்றும் 3 மேல்தளங்களுடன் கட்டப்படவுள்ள முன்னாள் படைவீரர் விடுதி மற்றும் பயிற்சி மையத்திற்கு முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.*

*இந்நிலையில் தலைமைச் செயலகத்தில், முன்னாள் படைவீரர்கள் மற்றும் முன்னாள் படைவீரர்கள் கழகத்தைச் சார்ந்த அஜய் குமார் யாதவ், பி.பிரேம்குமார், பத்ரன், ஜான் பிரின்ஸ், ஆர்.நிர்மல் குமார், ஜெஸ்ஸன் பீட்டர், எம்.சுரேஷ் குமார், ஆர்.கணேசன், எஸ். முனுசுவாமி, திவ்ய பிரபா, லஷ்சமையா, தமிழ்குமார், சரவணன், எம். அருண், பி.தென்னரசு, கே.ஜெயகுமார், டி.ரமேஷ், கே.அருண்குமார், பி.பிரவீன்குமார், பி.முருகன் ஆகியோர் சந்தித்து நன்றி தெரிவித்தார்கள்.*

*முன்னாள் படைவீரர் நலத்துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத்துறை முதன்மைச் செயலாளர் ரீட்டா ஹரீஷ் தக்கர், முன்னாள் படைவீரர் நலத்துறை இயக்குநர் கி.பாலசுப்பிரமணியம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.*

## மதுரை விமான நிலையத்திற்கு சர்வதேச அந்தஸ்து: அரசாணை வெளியீடு



**மதுரை, மார்ச் 16:**

*பிரதமர் மோடி தலைமையில் மத்திய மந்திரிசபை கூட்டமும், பொருளாதார விவகாரங்களுக்கான மந்திரிசபை கூட்டமும் டெல்லியில் கடந்த 10-ம் தேதி நடைபெற்றது. இதில் மந்திரிசபை கூட்டத்தில் 2 முக்கிய ஒப்புதல்களும், பொருளாதார விவகாரங்களுக்கான மந்திரிசபை கூட்டத்தில் 3 ஒப்புதல்களும் அளிக்கப்பட்டன. மந்திரிசபை கூட்டத்தில் அளிக்கப்பட்ட 2 ஒப்புதல்களில் தமிழ்நாட்டுக்கு முக்கியமான ஒப்புதல் கிடைத்தது. அது மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக அறிவிப்பதற்கான ஒப்புதல் ஆகும். இந்த கோரிக்கையை பொதுமக்கள் நீண்டகாலமாக விடுத்து வந்தனர்.*

*இந்தநிலையில் மத்திய அரசு அதற்கு ஒப்புதல் அளித்திருந்தது. இதுதொடர்பாக மத்திய ரெயில்வே மந்திரி அஸ்வினி வைஷ்ணவ் செய்தியாளர்களிடம் கூறுகையில், "தமிழ்நாட்டின் கோவில் நகரமான மதுரையில் அமைந்துள்ள மதுரை விமான நிலையம், மாநிலத்தின் பழமையான விமான நிலையங்களில் ஒன்றாகும். இது தென் தமிழ்நாட்டுக்கான ஒரு முக்கிய நுழைவாயிலாக செயல்படுகிறது. மதுரை விமான நிலையத்தை சர்வதேச அந்தஸ்துக்கு உயர்த்துவது பிராந்திய இணைப்பை மேம்படுத்தும். வர்த்தகத்தை ஊக்குவிக்கும்.*

*பிராந்தியத்தில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும். பன்னாட்டு பயணிகள் மற்றும் வணிகங்களை ஈர்க்கும் விமான நிலையத்தின் திறன் நகரத்தின் வரலாற்று முக்கியத்துவத்துடன் ஒத்துப்போகிறது. .*

*மதுரைக்கு துபாய், அபுதாபி மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் இருந்து இயக்கப்படும் சர்வதேச விமானங்களை விரிவுபடுத்துவதில் பல விமான நிறுவனங்கள் ஆர்வம் காட்டியுள்ளன. உலகின் பல இடங்களிலும் இருந்து இணைப்பு உருவாகும். இங்கு சுங்க நடவடிக்கைகள், தனிமைப்படுத்தல் வசதி மற்றும் சுகாதார வசதிகள் மேம்படுத்தப்படும். ஒரு விமான நிலையம் சர்வதேச விமான நிலையம் ஆக்கப்படும்போது இந்த வசதிகள் எல்லாம் தானாகவே வந்து விடும். மதுரைக்கு விமான போக்குவரத்து மேம்படுவதன் மூலம் மீனாட்சி அம்மன் கோவில், கூடல் அழகர் கோவில், திருப்பரங்குன்றம் முருகன் கோவில், பழமுதிர்சோலை முருகன் கோவில் மற்றும் ராமேசுவரம் ஆகிய புண்ணிய தலங்களுக்கு பக்தர்கள் வர இணைப்பு பலப்படும்.*

*இதுபோல ஆட்டோமொபைல், ரப்பர். ரசாயனம், கிரானைட் போன்ற தொழில்துறை வளர்ச்சியை ஊக்குவிக்கும். நகரத்தின் கல்வி மற்றும் சுகாதாரம் வலுப்படும்" என்று தெரிவித்திருந்தார்.*

*அரசாணை வெளியீடு*

*இந்நிலையில் மதுரை விமான நிலையத்திற்கு சர்வதேச அந்தஸ்து வழங்கிய அரசாணையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. இதன்மூலம் பல்வேறு வெளிநாட்டு நகரங்களுக்கு மதுரையில் இருந்து நேரடி விமான சேவைகள் தொடங்கப்பட உள்ளன.*

## பத்திரிகையாளர்களுக்கு ஓய்தியம் ரூ.15 ஆயிரமாக உயர்த்தி அறிவிப்பு

**சென்னை, மார்ச் 16:**

சென்னை தலைமைச் செயலகத்தில் பத்திரிகையாளர் சங்கத்தின் பிரநிதிகள் முதலமைச்சர் ஸ்டாலினை சந்தித்தனர். அப்போது அவர்கள் பெற்றுவரும் ஓய்வூதியத்தில் உயர்வு, மருத்துவக் காப்பீடு மற்றும் வீட்டுவசதி உள்ளிட்ட கோரிக்கைகளை முதலமைச்சரிடம் முன்வைத்தனர்.

பத்திரிகையாளர்கள் சங்கத்தினரின் கோரிக்கையினை ஏற்கும் வகையில் பத்திரிகையாளர்கள் தற்போது பெற்றுவரும் ஓய்வூதியம் மாதம் 12,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாகவும், குடும்ப ஓய்வூதியம் 6,000 ரூபாயிலிருந்து 7,500 ரூபாயாகவும் உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளார். அதேபோல, அங்கீகார அடையாள அட்டை வைத்திருக்கும் அனைவருக்கும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின்கீழ் மருத்துவ காப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளார்.

மேலும், சென்னை பத்திரிகையாளர்கள் குடியிருக்க வீடு அல்லது வீடுகட்ட நிலம் ஒதுக்கித் தரவேண்டும் என்ற கோரிக்கை தொடர்பாக, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் செங்கல்பட்டு மாவட்டத்தில் வீட்டுமனைகள் வழங்க ஏற்பாடு செய்யவும், இதற்கு பத்திரிகையாளர்கள் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் துவக்கி நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தியுள்ளார். பத்திரிகையாளர்கள் சங்கத்தினரின் ஏனைய கோரிக்கைகள் குறித்து விரைவில் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும் என்று அரசு செய்திகுறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## தினசரி 8 கி.மீ. தூர சுகாதார நடைபாதை திட்டம்: ஆவடியில் மா.சுப்பிரமணியன், நாசர் துவக்கினர்

**சென்னை, மார்ச் 16:**

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் சா.மு. நாசர் ஆகியோர் இன்று திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சியில், "நடப்போம் நலம் பெறுவோம் 2.0" 8 கி.மீ சுகாதார நடைபாதை திட்டத்தைத் தொடங்கி வைத்தனர்.

பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் பேசுகையில், "இன்று காலை தமிழ்நாடு முழுவதிலும் 37 வருவாய் மாவட்டங்களில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. 8 கி.மீ நடப்பது என்பது 10,000 அடிகள் நடப்பதற்கு சமமாகும், ஒவ்வொரு நாளும் 10,000 அடிகள் நடப்பது என்பது உடல் நலனுக்கு நல்லது மற்றும் நீரிழிவு நோய் தாக்கம், உயர்ரத்த அழுத்த நோய் தாக்கம், இருதய நோய் தாக்கம் ஆகிய பாதிப்புகளை முறையை 28 முதல் 30 சதவீகிதம் பாதிப்புகளை குறைப்பதற்கு ஏதுவாக இந்த நடைப்பயிற்சி உள்ளது என்றார்.

இந்நிகழ்வில் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ப.செந்தில்குமார், மேயர் உதயகுமார், துணை மேயர் சூரியகுமார், மருந்துத்துறை இயக்குநர் சோமசுந்தரம், இணை இயக்குநர் கிருஷ்ணராஜ், மாவட்ட சுகாதார அலுவலர் பிரபாகர், 4வது மண்டலக்குழுத் தலைவர் ஜோதிலட்சுமி, மாமன்ற உறுப்பினர் அபிஷேக் மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## பெட்ரோல் 'பங்க்'களுக்கு போலீஸ் பாதுகாப்பு: தமிழ்நாடு பெட்ரோலிய விற்பனையாளர்கள் சங்கம் கோரிக்கை

**சென்னை, மார்ச் 16:**

பெட்ரோல் பங்க்குகளுக்கு போலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு பெட்ரோலிய விற்பனையாளர்கள் சங்கம் கோரிக்கை வைத்துள்ளது.

அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகள் ஈரான் மீது தொடுத்துள்ள போர் காரணமாக வளைகுடா நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இதன் காரணமாக கச்சா எண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் வணிக சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக ஓட்டல்களுக்கு வழங்கப்படும் வணிக சிலிண்டர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. கியாஸ் சிலிண்டரை போன்று பெட்ரோல்-டீசலுக்கும் தட்டுப்பாடு ஏற்பட போவதாகவும், இதனால் பெட்ரோல், டீசலின் விலை அதிரடியாக உயர வாய்ப்புள்ளது என்றும் திடீரென வதந்தி பரவியது. இதன் காரணமாக வாகன ஓட்டிகள் பெட்ரோல் பங்க்குகளுக்கு படையெடுத்தனர். தங்களது வாகனங்களுக்கு பெட்ரோல் போட்டது போக, கேன் மற்றும் பாட்டில்களிலும் பெட்ரோல் மற்றும் டீசலை பிடித்து சென்றனர்.

இதனை தொடர்ந்து எண்ணெய் நிறுவனங்கள் சார்பிலும் பெட்ரோல்-டீசல் பங்க் உரிமையாளர்கள் சங்கத்தினரும் தமிழகத்தில் பெட்ரோல், டீசல் வினியோகத்தில் எந்தவித தட்டுப்பாடும் இல்லை. எனவே பொதுமக்கள் அது தொடர்பாக பீதியடைந்து பெட்ரோல் பங்க்குகளில் மொத்தமாக குவிய வேண்டாம் என்று வேண்டுகோள் விடுத்தனர். இருப்பினும் பல இடங்களில் பெட்ரோல் பங்க்குகளில் கூட்டம் அலைமோதியது. சென்னை உள்பட தமிழகம் முழுவதும் பல மாவட்டங்களில் 7 ஆயிரம் பெட்ரோல் பங்குகள் செயல்படுகின்றன. பெட்ரோல் பங்க்குகளில் வாகன ஓட்டிகள் அலைமோதி வருகிறார்கள்.

இதனை கருத்தில் கொண்டு பெட்ரோல் பங்க்குகளில் கேன் மற்றும் பாட்டில்களில் பெட்ரோல்-டீசல் விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக பெட்ரோல் பங்க் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் முரளி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

# உலகப் புகழ்பெற்ற மகாமகம் குளத்தில் கழிவு நீர் கலப்பு: பக்தர்கள் அதிர்ச்சி!



கும்பகோணம், மார்ச் 16:

உலகப் புகழ்பெற்ற மகாமகம் குளத்தில் கழிவு நீர் கலப்பதை பார்த்த பக்தர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இது குறித்த விடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வரும் நிலையில், அந்த பரபரப்பு நிலவி வருகிறது.

தென்னக கும்பமேளா என அழைக்கப்படும் பிரசித்தி பெற்ற தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் மகாமக குளத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மகாமகப் பெருவிழா வெகு விமர்சையாக நடைபெறும். இதில் தமிழகம் மட்டுமின்றி நாட்டின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் ஒரு கோடிக்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டு மகாமக குளத்தில் புனித நீராடுவார்கள்.

இந்த குளத்தை சுற்றிலும் 16 மண்டபங்களும், 21 தீர்த்த கிணறுகளும் உள்ளன. அதனால் காசிக்கு நிகரான புண்ணியம் கொடுக்கக்கூடிய தீர்த்தகுளமாக இந்த குளம் விளங்குகிறது. குளத்தில் நீராடினால் தேவ தீர்த்தத்தில் நீராடிய பலன் கிடைக்கும்.

அதேபோல் ஒவ்வொரு ஆண்டும் மாசிமகம் திருவிழா நடைபெற்று வருகிறது. இந்தாண்டு மாசி மாத திருவிழா கடந்த இரண்டாம் தேதி கோலாகலமாக நடைபெற்றது. இதில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு புனித நீராடினர்.

அதேபோல் ஆடி அமாவாசை, மகாலய அமாவாசை, தை அமாவாசை உள்ளிட்ட நாள்களில் முன்னோர்களுக்கு இந்த குளத்தில் தர்பணம் கொடுத்து வழிபாடு செய்வது வழக்கம். இப்படி பல்வேறு சிறப்புகள் வாய்ந்த இந்த குளம், அறநிலையத்துறை, நீர்வளத்துறை மற்றும் மாநகராட்சி கட்டுப்பாட்டில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை(மார்ச் 15) மகாமக குளத்திற்கு தண்ணீர் வரும் பாதையில் இருந்து கடும் துர்நாற்றத்துடன் கூடிய கருப்பு நிறத்தில் கழிவு நீர் வந்துள்ளது. இதனால் குளத்தைச் சுற்றிலும் துர்நாற்றம் வீசி உள்ளது.

குளத்தில் கழிவு நீர் கலப்பதை அந்த வழியாக சென்ற சிலர் பார்த்து விடியோ எடுத்து சமூக வலைதளங்களில் பதிவிட்டடனர்.

சமூக வலைதளங்களில் வைரலான அந்த விடியோவை பார்த்து மக்கள் மற்றும் இந்து அமைப்பினர், சமூக ஆர்வலர்கள் என பலர் மகாமக குளத்தில் ஒன்று கூடியதால் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த நிலையில், புனித குளத்தில் இறங்கி கை கால்கள் கழுவி நீரை தலையில் தெளிக்கும் பொழுது துர்நாற்றம் வீசுவதை கண்டு வெளியூர் பக்தர்கள் முகம் சுழித்து செல்வதையும் பார்க்க முடிந்தது.

இதையடுத்து அங்கு வந்த அறநிலையத்துறை, மாநகராட்சி அதிகாரிகள் ஊழியர்களைக் கொண்டு குளத்தில் கழிவு நீருடன் வந்து தேங்கியிருந்த கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

மிகப்பெரிய புனித குளமாக போற்றப்படும் கும்பகோணம் மகாமக குளத்தில் கழிவு நீர் கலக்கும் வகையில் அதிகாரிகள் அலட்சியமாக செயல்பட்டு வருவதாக மக்கள் குற்றம் சாட்டினர். உடனடியாக இந்த நீரை முழுவதுமாக அப்புறப்படுத்தி புதிய நீர் நிரப்ப வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## க்ரைம் கார்னர்

### சென்னை அரும்பாக்கத்தில் தாய், மகளை கத்திமுனையில் மிரட்டி 27 பவுன் நகைகள் கொள்ளை

சென்னை, மார்ச் 16:

சென்னை, அரும்பாக்கம், என்.எஸ்.கே4-வது தெருவைச் சேர்ந்தவர் ரவிச்சந்திரன். மாநகர போக்குவரத்து கழகத்தில் பணியாற்றி வரும் இவருக்கு, ருக்மணி (54) என்ற மனைவியும், ஒரு மகளும் உள்ளனர். நேற்று முன்தினம் இரவு ரவிச்சந்திரன் வழக்கம் போல பணிக்குச் சென்றுவிட்டார். வீட்டில் ருக்மணியும் அவரது மகளும் மட்டும் தனியாக இருந்துள்ளனர். நள்ளிரவில் இருவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது, திடீரென வீட்டின் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டுள்ளது. தூக்கக் கலக்கத்தில் ருக்மணி கதவைத் திறந்த போது, கத்தியுடன் மர்ம நபர் ஒருவர் நின்று கொண்டிருந்தார். ருக்மணியை தள்ளிவிட்டு வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த அந்த நபர், தாய் மற்றும் மகள் இருவரையும் கத்தி முனையில் பிணைக் கைதிகளாக பிடித்து வைத்து. 'சத்தம் போட்டால் கொலை செய்துவிடுவேன்' என்று மிரட்டிய கொள்ளையன், பீரோவில் இருந்த 27 பவுன் தங்க நகைகள், ரூ.8,500 பணத்தை கொள்ளையடித்துக் கொண்டு மின்னல் வேகத்தில் தப்பிச் சென்றார். இந்த அதிர்ச்சி சம்பவத்தில் இருந்து மீண்ட ருக்மணி, உடனடியாக அரும்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்த போலீஸார், சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து தீவிர விசாரணை நடத்தினர்.

அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளை போலீஸார் கைப்பற்றி கொள்ளையனை அடையாளம் காணும் பணியில் ஈடுபட்டனர். இந்த சம்பவத்தில் ஈடுபட்ட நபர் முகப்பேரில் பதுங்கி இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து, முகப்பேர் விரைந்த போலீஸார், பதுங்கியிருந்த சுப்பிரமணி (28) என்ற இளைஞரை கைது செய்து, அவரிடம் இருந்து 27 பவுன் நகை, பணத்தை பறிமுதல் செய்தனர். கைதானவரிடம் போலீஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### சென்னை - சென்ட்ரல் வந்த ரயிலில் ரூ.71.37 லட்சம் தங்கம், வெள்ளி சிக்கியது

சென்னை, மார்ச் 16:

கர்நாடகா ஹுப்ளியில் இருந்து சென்னை சென்ட்ரலுக்கு வந்த ரயிலில் பயணிகளை கண்காணித்து இருவரது பைகளை சோதித்தபோது, ரூ.8 லட்சத்து 800 மதிப்பிலான 2.86 கிலோ எடைக்கொண்ட தங்கம், வெள்ளி இருந்தது.

அந்த நபர், திருப்பதியைச் சேர்ந்த வெங்கடேஸ்வரலு. ஆந்திர மாநிலம் புரோட்டாட்டூர் பகுதியைச் சேர்ந்த ஷேக் முனாவர் பாஷாவிடம் சோதனை செய்தபோது, ரூ.63.37 லட்சம் மதிப்பிலான தங்க ஆபரணங்கள் இருந்தது. இரு வரையும் ரயில்வே போலிஸார் வருமான வரித்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

### கூடங்குளத்தில் 27.7 கிலோ புகையிலை பொருட்கள் பதுக்கி வைத்திருந்தவர் கைது

திருநெல்வேலி, மார்ச் 16:

திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளம் பகுதியில் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் நிஜல்சன் தலைமையிலான காவல்துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது காவல்துறையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், கூடங்குளம் பைபாஸ் ரோட்டின் அருகே சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த அதே பகுதியை சேர்ந்த மகமுத்அஹ்மத் (வயது 47) என்பவரை பிடித்து போலீசார் சோதனை செய்தனர்.

அப்போது அவர் அரசால் தடை செய்யப்பட்ட 27 கிலோ 776 கிராம் புகையிலை பொருட்களை விற்பனை செய்வதற்காக பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது.

இதுகுறித்து கூடங்குளம் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு மகமுத்அஹ்மதை நேற்று போலீசார் கைது செய்தனர். மேலும் அவரிடமிருந்து 27 கிலோ 776 கிராம் புகையிலை பொருட்களை கைப்பற்றி போலீசார் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

## விளையாட்டு செய்திகள்

### முதல் டி20: நியூசிலாந்தை வீழ்த்தி தென் ஆப்பிரிக்கா வெற்றி

மவுண்ட் மவுன்கானுய், மார்ச் 16:

நியூசிலாந்து மற்றும் தென் ஆப்பிரிக்கா அணிகள் மோதும் முதல் டி20 போட்டி இன்று பே ஓவல் மைதானத்தில் நடைபெற்றது. ஐந்து போட்டிகள் கொண்ட இந்த டி20 தொடரில் இரு அணிகளும் டி20 உலகக் கோப்பைக்கு பின் மீண்டும் நேருக்கு நேர் மோதின.

இதற்கிடையில், இந்த போட்டிக்கான டாஸை வென்ற நியூசிலாந்து அணி பேட்டிங் தேர்வு செய்தது. அதன்படி, தென் ஆப்பிரிக்க அணி முதலில் பந்து வீசியது.

தென் ஆப்பிரிக்கா அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் நியூசிலாந்து அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தது. இறுதியில் 14.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த நியூசிலாந்து அணி 91 ரன்கள் எடுத்தது. நியுசிலாந்து தரப்பில் அதிகபட்சமாக ஜேம்ஸ் நீசம் 26 ரன்கள் எடுத்தார். தென் ஆப்பிரிக்கா தரப்பில் என்கோபானி மோகோய்னா 3 விக்கெட்டுகள் எடுத்தார். இதையடுத்து தென் ஆப்பிரிக்க அணி 92 என்ற இலக்குடன் விளையாடியது. தொடக்கம் முதல் தென் ஆப்பிரிக்கா அணி வீரர்கள் பொறுப்புடன் விளையாடி ரன்கள் குவித்தனர். இதனால் 16.4 ஓவர்களில் 3 விக்கெட் இழப்பிற்கு 93 ரன்கள் எடுத்து 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தென் ஆப்பிரிக்கா அணி வெற்றி பெற்றது. கானர் எஸ்டெர்ஹுயிஸ் 45 ரன்கள் குவித்தார்.

### சுவிட்சர்லாந்து ஓபன் பேட்மிண்டன்: இந்திய வீரர் தோல்வி

பாசெல், மார்ச் 16:

சுவிட்சர்லாந்து ஓபன் சர்வதேச பேட்மிண்டன் போட்டி அங்குள்ள பாசெல் நகரில் நடந்து வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் காலிறுதி ஆட்டம் ஒன்றில் இந்திய வீரர் தருண் மன்னேபள்ளி, இந்தோனேசியாவின் அந்தோணி சினிசுகா ஜின்டிங்குடன் மோதினார். இந்த ஆட்டத்தில் தருண் 19-21, 21-19, 13-21 என்ற செட் கணக்கில் அந்தோணி சினிசுகாவிடம் வீழ்ந்தார். இதன் மூலம் இந்த போட் டியில் இந்தியாவின் சவால் முடிவுக்கு வந்தது.

### பெண்கள் உலகக் கோப்பை ஆக்கி தகுதி சுற்று: இந்திய அணி தோல்வி

ஐதராபாத், மார்ச் 16:

16-வது பெண்கள் உலகக் கோப்பை ஆக்கி போட்டி பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்தில் ஆகஸ்டு 14-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை நடக்கிறது. இந்த போட்டிக்கான தகுதி சுற்று ஐதராபாத்தில் நடந்தது. 8 அணிகள் பங்கேற்ற இந்த போட்டியில் நேற்று நடந்த இறுதி ஆட்டத்தில் இந்தியா-இங்கிலாந்து அணிகள் மோதின. விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 2-0 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை சொந்த மாக்கியது.

இந்த போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற இங்கிலாந்து. 2-வது இடம் பிடித்த இந்தியா, 3-வது இடம் பெற்ற ஸ்காட்லாந்து ஆகிய அணிகள் நேர டியாக உலகக் கோப்பை போட்டிக்கு தகுதி பெற்றன.

# பெண் காவலருக்கு பாலியல் தொல்லை கொடுத்த காவல் அதிகாரி கைது!

கோவை, மார்ச் 16:

கோவை புதூர் 4 ஆவது போலீஸ் பட்டாலியன் படைப் பிரிவில் பணி புரிந்த பெண் காவலருக்கு பாலியல் தொல்லை கொடுத்த காவல் அதிகாரி செந்தில்குமார் கைது செய்யப்பட்டார்.

கோவை புதூர் பகுதியில் தமிழ்நாடு 4 ஆவது பட்டாலியன் படைப் பிரிவு உள்ளது. இதில் கமாண்டராக (காவல் கண்காணிப்பாளர் அந்தஸ்து) செந்தில்குமார் பணியாற்றி வந்தார். இவர் அங்கு பணி செய்யும் பெண்கள் மற்றும் பெண் காவலர்களுக்கு பல்வேறு பாலியல் தொந்தரவுகளை கொடுத்து வந்ததாக தெரிகிறது. மேலும் அவர் பெண்களிடம் பாலியல் ரீதியாக அத்துமீறி பேசி வந்துள்ளார். இது தொடர்பான புகார்கள் காவல் உயரதிகாரிகளிடம் அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவர் மீது துறை ரீதியான விசாரணை நடைபெற்று வந்த நிலையில், கடந்த மாதம் அவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

இந்த நிலையில், பாதிக்கப்பட்ட பெண்கள் போத்தனூரில் உள்ள கோவை தெற்கு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். இந்த புகாரின் பேரில் அனைத்து மகளிர் காவலர் பத்து பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்தனர்.

இதனைத் தொடர்ந்து அனைத்து மகளிர் காவலர்கள் எஸ்.பி. செந்தில்குமாரை கைது செய்தனர்.

தொடர்ந்து அவரை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தி சிறையில் அடைத்தனர். தொடர்ந்து அனைத்து மகளிர் காவல் நிலைய காவலர்கள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

பாலியல் புகாரில் உயர் போலீஸ் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்ட சம்பவம் கோவையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தமிழ்நாட்டில் 6 ரயில் வழித்தடங்களில் கூடுதல் பாதைகள்: இறுதி ஆய்வுக்கு அனுமதி

சென்னை, மார்ச் 16:

தமிழ்நாட்டில் 6 ரயில் வழித்தடங்களில் கூடுதல் ரயில் பாதைகள் அமைப்பதற்கான இறுதிக்கட்ட ஆய்வு நடத்த ரயில்வே வாரியம் அனுமதியளித்துள்ளது.

தமிழ்நாட்டில் சென்னை - அரக்கோணம், அரக்கோணம் - ரேணிகுண்டா, சென்னை - கூடூர் ஆகிய ரயில் வழித்தடஙளில் 5, 6-ஆவது பாதைகள், விழுப்புரம் - திருச்சி - திருநெல்வேலி - நாகர்கோயில் வழித்தடத்தில் 3, 4 -ஆவது பாதைகள், திருச்சி - காரைக்குடி - மானாமதுரை - மதுரை வழித்தடத்தில் 2-ஆவது பாதை, போத்தனூர் - பொள்ளாச்சி - பாலக்காடு வழித்தடத்தில் 2-ஆவது பாதை அமைக்கவும் இறுதிக்கட்ட ஆய்வு நடத்துவதற்கான அனுமதியை ரயில்வே வாரியம் அளித்துள்ளது.

மேலும், திருச்சியில் ஜி கார்னர் பகுதியில் உயர்மட்ட சுழற்பாலம் அமைப்பதற்கான தடையில்லாச் சான்றிதழையும் ரயில்வே வாரியமமைத்துள்ளது. இதனால், திருச்சி மக்களின் 16 ஆண்டுகால கோரிக்கை நிறைவேறியுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இந்தப் பாலத்துக்காக ஒன்றரை ஆண்டுகளாக பணிகள் மேற்கொண்டதாகக் கூறிய மதிமுக எம்.பி. துரை வைகோ, மத்திய அரசுக்கு நன்றியும் தெரிவித்துள்ளார்.

# தேசிய லோக் அதாலத்: தமிழகத்தில் 1.3 லட்சம் வழக்குகளுக்கு தீர்வு

சென்னை, மார்ச் 16:

தமிழகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற தேசிய லோக் அதாலத்தில் 1,03,366 வழக்குகள் தீர்வு காணப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.1,034.93 கோடி இழப்பீடு கிடைத்தது.

நாடு முழுவதும் உள்ள நீதிமன்றங்களில் நீண்ட காலமாக நிலுவையில் இருக்கும் வழக்குகளை விரைவாக முடிவுக்கு கொண்டு வர தேசிய அளவில் ஆண்டுக்கு 4 முறை லோக் அதாலத் என்ற 'மக்கள் நீதிமன்றம்' நடத்தப்படுகிறது.

அந்த வகையில், நாடு முழுவதும் லோக் அதாலத் சனிக்கிழமை நடத்தப்பட்டது. தமிழகத்தில் மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு இந்த தேசிய லோக் அதாலத்தை நடத்தியது.

இதுகுறித்து தமிழ்நாடு சட்டப்பணி ஆணைக் குழு உறுப்பினா் செயலா் எஸ். பாலகிருஷ்ணன் கூறியதாவது: சென்னை உயா்நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.ஏ.தா்மாதிகாரி வழிகாட்டுதலின்படி, உயா்நீதிமன்ற மூத்த நீதிபதி ஆா்.சுரேஷ்குமாா மேற்பாா்வையில் தமிழகத்தில் தேசிய லோக் அதாலத் நடைபெற்றது.

உயா்நீதிமன்ற மதுரை அமா்வு நீதிபதி பி.பி.பாலாஜி, ஓய்வு பெற்ற நீதிபதிகள் டி.என்.வள்ளிநாயகம், ஏ.ராமமூா்த்தி, ஜி.சொக்கலிங்கம், எம்.ஜெயபால், பி.கோகுல்தாஸ், ஏ.ஆா.ராமலிங்கம் ஆகியோா தலைமையில் 7 அமா்வுகள், மாவட்டம் மற்றும் வட்ட அளவிலான நீதிமன்றங்களில் நீதிபதிகள், குற்றவியல் நடுவா் மன்ற நீதிபதிகள் என மொத்தம் 516 அமா்வுகள் அமைக்கப்பட்டன.

இந்த அமா்வுகள், நீதிமன்றத்தில் நிலுவையில் மோட்டாா் வாகன விபத்து வழக்குகள், காசோலை மோசடி வழக்குகள், தொழிலாளா் தொடா்பான வழக்குகள், மின் வாரியம் தொடா்பான வழக்குகள், ஜீவனாம்ச வழக்குகள் என்று பல்வேறு வகையான வழக்குகளை விசாரித்தது.

இவற்றில் இருதரப்பினா்கள் இடையே பேச்சு நடத்தி, அவா்களின் முழு சம்மதத்துடன், 1,03,366 வழக்குகள் சமரசத்துக்கு வந்தன. இதன்மூலம், பாதிக்கப்பட்டவா்களுக்கு ரூ.1,034.93 கோடி இழப்பீடு கிடைத்துள்ளது என்று அவா் கூறினாா்.

## வணிகச் செய்திகள்

### போக்குவரத்துக்கு மாற்று கடல் வழிகள்

துபாய், மார்ச் 16:

அமெரிக்க, இஸ்ரேல் தாக்குதலை தொடர்ந்து கச்சா எண்ணெய் போக்குவரத்துக்கு முக்கியமான ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடியது. இதனால் மற்ற கடல் வழி போக்குவரத்து முக்கியத்துவம் பெறும் என்று தெரிகிறது. இதில் தென் ஆப்பிரிக்காவைச் சுற்றியுள்ள கேப் ஆ்ஃப் குட் ஹோப், செங்கடல்-சூயஸ் கால்வாய் வழி, கார்க் தீவுக்கு அருகிலுள்ள பாப் எல்-மாண்டெப் ஜலசந்தி போன்ற வழிகளும் முக்கியத்துவம் பெறக்கூடும் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.C

### அடோப் நிறுவன சி.இ.ஓ சாந்தனு பதவி விலகல்

வாஷிங்டன்: உலகின் முன்னணி மென்பொருள் நிறுவனமான 'அடோப்' -யின் தலைமைச் செயல் அதிகாரியாக 18 ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் சாந்தனு நாராயண் தனது பதவியிலிருந்து விலக முடிவு செய்துள்ளார். அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் சான் ஜோஸை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் அடோப் நிறுவனம், சாந்தனுவின் விலகலை அதிகாரப் பூர்வமாக அறிவித்துள்ளது. புதிய தலைமைச் செயல் அதிகாரியைத் தேர்ந்தெடுக்கும் வரை அவர் அப்பதவியில் நீடிப்பார். பணி விலகல் குறித்து ஊழியர்களுக்கு சாந்தனு அனுப்பிய செய்தியில், "நான் பொறுப்பேற்றபோது 3,000-ஆக இருந்த ஊழியர்களின் எண்ணிக்கை தற்போது 30,000-க்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. நிறுவன வருவாய் தற்போது 25 பில்லியன் டாலராக (ரூ. 2 லட்சம் கோடி) அதிகரித்துள்ளது.

# ஏப்.1-ந்தேதி முதல் பாஸ்டேக், சுங்கச்சாவடி கட்டணங்கள் உயர்வு.!




சென்னை, மார்ச் 16:

தமிழ்நாட்டில் உள்ள குறிப்பிட்ட சில சுங்கச்சாவடிகளில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 1-ந்தேதியும், மீதியுள்ள மற்ற சுங்கச்சாவடிகளில் செப்டம்பர் 1-ந்தேதியும் கட்டணம் உயர்த்தப்பட்டு வருகிறது. அதன்படி வருகிற ஏப்ரல் 1-ந் தேதி முதல் திண்டிவனம், ஆத்தூர், கணியூர், கப்பலூர், கீழ் குப்பம், கிருஷ்ணகிரி, மாத்தூர், நாங்குநேரி, ஸ்ரீபெரும்புதூர், பரனூர், திருப்பாச்சேத்தி, வானகரம், விராலிமலை, வாணியம்பாடி உள்பட 66 சுங்கச்சாவடிகளில் 5 சதவீதம் முதல் 7 சதவீதம் வரை கட்டணம் உயர்த்தப்படுகிறது.

இதனால் தற்போது வசூலிக்கப்படும் கட்டணத்தை விட கார், ஜீப், வேன் போன்ற வாகனங்களுக்கு ரூ.10 முதல் ரூ.40 வரையும், லாரி, பஸ் போன்ற கனரக வாகனங்களுக்கு ரூ.50 முதல் ரூ.200 வரை கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட வாய்ப்புள்ளது.

இதேபோல் மாதாந்திர பாஸ் கட்டணம் ரூ.300 முதல் ரூ.350 வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. மேலும் வருடாந்திர பாஸ்டேக் பாஸ் விலையை ரூ.3 ஆயிரத்தில் இருந்து ரூ.3 ஆயிரத்து 75 ஆக உயர்த்தவும் முடிவு செய்துள்ளனர்.

இந்த விலை உயர்வுக்கு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். ஏற்கனவே பல்வேறு பொருட்களின் விலை அதிகரித்து வரும் நிலையில் தற்போது சுங்க கட்டண உயர்வால் மேலும் கூடுதல் சுமை ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

# சிஇ20 கிரையோஜெனிக் எஞ்சின் சோதனை வெற்றி - இஸ்ரோ விஞ்ஞானிகள் சாதனை



புதுடெல்லி, மார்ச் 16:

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) பி.எஸ்.எல்.வி., ஜி.எஸ்.எல்.வி. மற்றும் எஸ்.எஸ்.எல்.வி. ரக ராக்கெட்டுகளை தயாரித்து அவற்றில்செயற்கைக்கோள்களை பொருத்தி வெற்றிகரமாக விண்ணில் ஏவி வருகிறது. மேலும் அதிக எடை கொண்ட விண்கலங்களை விண்ணில் ஏவுவதற்கும், மனிதர்களை விண்ணுக்கு அழைத்து சென்று மீண்டும் பூமிக்கு அழைத்து வருவதற்கும் அதிக எடை கொண்ட எல்.வி.எம்.3 ராக்கெட்டுகளும் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதில் அதிக எடை கொண்ட செயற்கைக்கோள்களும்விண்ணில் ஏவப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், இஸ்ரோ விஞ்ஞானிகள் தமிழ்நாட்டின் நெல்லை மாவட்டம் மகேந்திரகிரியில் உள்ள இஸ்ரோ உந்துவிசை வளாகத்தில் எல்.வி.எம்.3 ராக்கெட்டுக்கான சக்திவாய்ந்த சிஇ20 கிரையோஜெனிக் எஞ்சினின் உயர் சக்தி சோதனை வெற்றிகரமாக நடந்துள்ளது. 165 வினாடிகள் நீடித்த இந்த சோதனை கடுமையான வெப்பத்தைத் தாங்கும் என்பதை நிரூபித்துள்ளது.

எதிர்கால விண்வெளி பயணத்திற்கு இந்தியாவின் கனரக தூக்கும் திறன்கள் மிகவும் நம்பகமானதாக மாறி வருவதை இந்த சோதனை நிரூபிக்கிறது. இந்த எந்திரம் 22 டன் உந்துவிசை அளவை எட்டியது. இது ஈர்ப்பு விசைக்கு எதிராக ஒரு ராக்கெட்டை மேல்நோக்கிதள்ள தேவையான சக்தியாகும். இந்த வெற்றி இந்தியாவின் கனமான ராக்கெட்டான எல்.வி.எம்-3-ன் எதிர்காலத்திற்கான ஒரு முக்கியமான படியைக் குறிக்கிறது. இந்த வெற்றி இந்திய விண்வெளி வீரர்களை, விண்வெளிக்கு அழைத்துச் செல்லும் ககன்யான் திட்ட பயணத்திற்கு நேரடியாக உதவுகிறது.

## இந்தியாவுக்குள் நுழைந்த பாக். ட்ரோன்: பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டை

புதுடெல்லி, மார்ச் 16:

ஜம்மு-காஷ்மீரின் சம்பா மாவட்டத்தில், பாகிஸ்தான் பகுதியில் இருந்து சர்வதேச எல்லையைக் கடந்து இந்தியாவுக்குள் நுழைந்த ட்ரோனை தேடும் பணியில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

சம்பா மாவட்டத்தின் ராம்கர் பகுதியில் உள்ள கந்திரால், அப்தால், பகதூர்பூர் ஆகிய கிராமங்களுக்கு மேலாக கடந்த வெள்ளிக்கிழமை இரவில் தென்பட்ட இந்த ட்ரோன், பின்னர் மாயமாகிவிட்டது. அதைக் கண்டுபிடிக்க பாதுகாப்புப் படையினர் விரிவான தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். பாகிஸ்தா னில் இருந்து இந்தியப் பகுதிக்குள் ட்ரோன் மூலம் ஆயுதங்கள் மற்றும் போதைப் பொருள்கள் கடத்தப்படுவது அவ்வப்போது நிகழ்கிறது. இதுபோன்ற ட்ரோன்களை சுட்டு வீழ்த்தும் பாது காப்புப்படையினர், போதைப் பொருள்கள் மற்றும் ஆயுதங்களைக் கைப்பற்றுகின்றனர்.

ஆர்.எஸ்.புரா பகுதியில் உள்ள எல்லையோர கிராமங்களில் கடந்த 2 நாள்களில் ட்ரோன் மூலம் வீசப்பட்ட 3.5 கிலோவுக்கும் அதிகமான ஹெராயின் போதைப் பொருளை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றினர். இதன் சர்வதேச மதிப்பு ரூ.20 கோடிக்கும் அதிகமாகும். இந்தப் போதைப் பொருள் கடத்தல் தொடர்பாக ஆர்.எஸ்.புரா பகுதியில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

## உயர்கல்வி முதலீடு சிறந்த நிர்வாகத்தை உறுதிப்படுத்தும்: உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி

புதுடெல்லி, மார்ச் 16:

உயர் கல்வியில் அதிக முதலீடுகளை மேற்கொள்ளும் ஜனநாயக நாட்டில் சிறந்த நிர்வாகம் உறுதிப்படுத்தப்படும் என உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் சனிக்கிழமை தெரிவித்தார்.

மஹேந்திரகரில் உள்ள ஹரியாணா மத்திய பல்கலைக்கழகத்தின் 12-ஆவது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக சூர்ய காந்த் கலந்து கொண்டார்.

அப்போது அவர் பேசியதாவது: நல்ல அறிவாற்றலுடன் உயர்கல்வியை நிறைவுசெய்ததை அங்கீகரிக்கும் விதமாக பட்டங்கள் வழங்கப்படுகின்றன. அதை நினைத்து மாணவர்கள் பெருமைகொள்ளும் அதேநேரத்தில் கல்வி நிலையங்களைவிட்டு வெளியே சென்ற பின் நல்ல குணம் மற்றும் உயர் சிந்தனைகளை வாழ்நாள் முழுவதும் பின்பற்ற வேண்டும்.

இதுவே உங்களது வாழ்வை தீர்மானிக்கும். சிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் பயின்று பட்டம் பெற்றிருந்தாலும் சில மாணவர்கள் வெளி உலக அழுத்தத்தை எதிர்கொள்ள முடியாமல் தவிக்கின்றனர். ஏனெனில் பள்ளி மற்றும் கல்லூரியில் நடத்தப்படும் தேர்வுகளைத் தவிர அவர்கள் வேறு எந்த இடத்திலும் கடும் சோதனைகளை எதிர்கொள்ளவில்லை.

எனவே, வகுப்பறைகளில் ஒருவர் வெளிப்படுத்தும் திறமையைவிட நெருக்கடி நிலைகளின்போதும் தங்களது குடும்பத்தினர் கண்ணியம் தவறாமல் நடந்து கொண்டதை முன்னுதாரணமாக எடுத்துக்கொள்பவர்களே எங்கும் சென்றாலும் மேன்மையானவர்களாக திகழ்கின்றனர்.

எந்தவொரு ஜனநாயகம் உயர் கல்வியில் அதிக முதலீடுகளை மேற்கொள்கிறதோ அங்கு சிறந்த நிர்வாகம் உறுதிப்படுத்தப்படும் என்றார்.

## விநியோகத்தில் சிக்கல் நீடித்தாலும் சமையல் காஸ் தட்டுப்பாடு இல்லை: மத்திய அரசு விளக்கம்



புதுடெல்லி, மார்ச் 16:

இந்தியா உலகின் 2-வது பெரிய சமையல் காஸ் (எல்பிஜி) நுகர்வு செய்யும் நாடாகும். இதில் 90 சதவீத எரிவாயு ஹார்முஸ் ஜலசந்தி வழியாகவே வருகிறது. அமெரிக்கா, இஸ்ரேல், ஈரான் போர்ப் பதற்றம் காரணமாக, இந்த கடல் வழிப் பாதையில் போக்குவரத்து ஸ்தம்பித்துள்ளது.

இந்நிலையில், இந்தியாவில் சமையல் காஸ் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதுகுறித்து மத்திய பெட்ரோலிய அமைச்சகத்தின் உயர் அதிகாரி ஒருவர் செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது:

மேற்கு ஆசியப் போர் தீவிரமடைந்து வரும் நிலையில், எல்பிஜி சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என மக்கள் மத்தியில் ஒருவித தேவையற்ற அச்சம் நிலவுகிறது. இதனால் வழக்கத்தைவிட கூடுதலாக 88 லட்சம் பேர் முன்பதிவு செய்துள்ளனர்.

இதனால் சமையல் காஸ் விநியோகம் கவலைக்குரிய ஒரு விஷயமாக உள்ளது. இருப்பினும், எந்த விநியோக மையத்திலும் இருப்பு தீர்ந்து விடவில்லை. எனவே, தேவைப்படும் போது மட்டும் பொது மக்கள் சிலிண்டர்களை முன் பதிவு செய்ய வேண்டும்.

எண்ணெய் நிறுவனங்களிடம் கச்சா எண்ணெய் இருப்பு போதுமான அளவில் உள்ளது. இதனால் பெட்ரோல், டீசலுக்கும் தட்டுப்பாடு ஏற்படாது.

வர்த்தக சிலிண்டர் விநியோகம் குறித்த முடிவுகள் அந்தந்த மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்து எடுக்கப்படும். சிலிண்டர்களைக் கள்ளச் சந்தையில் விற்பனை செய்வதைத் தடுக்கத் தொடர்ச்சியாக சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மார்ச் 13-ம் தேதி மட்டும் எண்ணெய் நிறுவன அதிகாரிகள் 1,300-க்கும் மேற்பட்ட இடங்களில் திடீர் சோதனைகளை நடத்தினர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## நொய்டாவில் புதிய சர்வதேச விமான நிலையம்: ஜெர்மன் - இந்தியா பிஸினஸ் அலையன்ஸுடன் உ.பி. அரசு ஒப்பந்தம்




புதுடெல்லி, மார்ச் 16:

உத்தர பிரதேச மாநிலம் நொய்டாவில் புதிய சர்வதேச விமானநிலையம்உருவாகிறது. பிராங்க்பர்ட் விமான நிலையத்தைச் சுற்றியுள்ள நகரங்களின் தொழில்வளர்ச்சி அமைப்பான 'ரைன் மெயின் இன்னவேஷன் அமைப்பு' மற்றும் தமிழர்களின் 'ஜெர்மன் - இந்தியன் பிஸினஸ் அலையன் ஸுடன் (ஜிஐபிஏ)' உ.பி. அரசு ஒப்பந்தம் செய்துள்ளது.

டெல்லி புறநகர் பகுதியான நொய்டாவில், ஆசியாவிலேயே மிகப்பெரியதாக சர்வதேச விமானநிலையம்உருவாகிறது. இது ஐரோப்பாவின் நுழைவு வாயிலாக விளங்கப்போகிறது. இந்த சர்வதேச விமான நிலையம் முழுமையான செயல் பாட்டுக்கு வரும்போது ஆண்டுக்கு 7 கோடி பயணிகளைக் கையாளும் திறன் கொண்டதாக இருக்கும். தொழில் துறையினரைப் பெருமளவில் ஈர்க்கும் விதமாக, விமான நிலையத்தைச் சுற்றி தொழில் மற்றும் தளவாடங்களை மையமாகக் கொண்ட தொகுப்புகள் (கிளஸ்டர்கள்) உருவாக்கப்படுகின்றன.

வளர்ந்து வரும் இந்த விமான மற்றும் தொழில்துறை தடத்தில் பிராங்க்பர்ட் விமான நிலைய பிராந்தியத்தை அதன் தொழில்துறை மையங்களான ரஸல்ஷீம், ரவுன்ஹைம் மற்றும் கெல்ஸ்டெர்பாக் ஆகியவற்றுடன் ஒருங்கிணைப்பதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேலும், இந்த ஒப்பந்தத்தின்படி சரக்கு விமானம் மற்றும் விநியோக சங்கிலி தீர்வுகள், இயந்திர பொறியியல் மற்றும் விமான நிலைய தொழில்நுட்பம் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட உள்ளது.

ஜிஐபிஏவுடனான ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, 3 மாதங்களுக்குள் ஒரு கட்டமைக்கப்பட்ட செயல் திட்டத்தை உருவாக்க குழு அமைக்கப்படும். இது தொடர்பாக ஏற்கெனவே பிரதிநிதிகள், துறை சார்ந்த முயற்சிகள் மற்றும் முதலீட்டாளர்கள் என பல அம்சங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. ஜிஐபிஏ வானது ஜெர்மனி - இந்திய பொருளாதார பிராந்தியங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை செயல்படுத்துவதற்கு தேவையான உதவிகளை அளிக்கும்.

## லடாக் சுற்றுச்சூழல் ஆர்வலர் சோனம் வாங்சுக் 6 மாதத்துக்கு பிறகு விடுதலையாகிறார்

புதுடெல்லி, மார்ச் 16:

லடாக்கில் மாநில அந்தஸ்து கோரி சுற்றுச்சூழல் ஆர்வலர் சோனம் வாங்சுக் உண்ணாவிரதம் தொடங்கினார். அப்போது ஏற்பட்ட கலவரத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.

இதையடுத்து அவர் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டார். இதை எதிர்த்து வாங்சுக் மனைவி கீதாஞ்சலி ஆங்மோ, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த மனு மீதான விசாரணையை உச்ச நீதிமன்றம் 17-ம் தேதிக்கு தள்ளிவைத்தது. மேலும் அவரது உடல்நிலையை கருத்தில் கொண்டு தடுப்புக் காவலை மறுபரிசீலனை செய்ய மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் கேட்டிருந்தது. இதையடுத்து, சோனம் வாங்சுக்கின் தடுப்புக் காவலை ரத்து செய்ய அரசு முடிவு செய்துள்ளது என்று மத்திய உள்துறை நேற்று வெளியிட்ட அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 6 மாத சிறைவாசத்துக்கு பிறகு சோனம் வாங்சுக் விடுதலையாக உள்ளார்.

## 100 தெருநாய்கள் விஷம் வைத்து கொலை : தெலுங்கானாவில் அதிர்ச்சி

ஐதராபாத், மார்ச் 16:

தெலுங்கானா மாநிலம் மஞ்சேரியல் மாவட்டத்தில் உள்ள கிஷ்தாபூர் கிராமத்தில், சுமார் 100 தெருநாய்கள் விஷம் வைத்து கொலை செய்யப்பட்டதாக காவல்துறையினரிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளது. இது குறித்து விலங்குகள் நல ஆர்வலர் கவுதம் என்பவர் கூறுகையில், இந்த 100 தெருநாய்களும் மார்ச் 7 மற்றும் 8-ந்தேதிகளில் கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். குறிப்பாக கிராம பஞ்சாயத்து தலைவர், துணை தலைவர் ஆகியோர், நாய்களை கொலை செய்வதற்காக 2 நபர்களுக்கு பணத்தை கொடுத்ததாகவும், நாய்களுக்கு விஷ ஊசி செலுத்தி கொலை செய்துவிட்டு, அவற்றை ஆற்றங்கரை ஓரமாக புதைத்துவிட்டதாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக கிராம பஞ்சாயத்து தேர்தலின்போது, தெருநாய்கள் பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக சம்பந்தப்பட்ட நபர்கள் வாக்குறுதி அளித்ததாகவும் புகாரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். கடந்த டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் மட்டும் தெலுங்கானாவில் சுமார் 1,300 தெருநாய்கள் கொலை செய்யப்பட்டுள்ளதாக காவல் நிலையங்களில் வழக்குகள் பதிவாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

## மேற்காசிய மோதலில் சிக்கி 5 இந்தியர்கள் பலி; ஒருவர் மாயம்: மத்திய அரசு

புதுடெல்லி, மார்ச் 16:

ஈரான் மீது நடந்த தாக்குதலுக்கு பதிலடியாக அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் அதன் தளங்கள் அமைந்த பகுதிகள் மீது கடுமையாக தாக்குதல் நடத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக, உலக நாடுகளுக்கு சரக்கு கப்பல் செல்ல கூடிய முக்கிய ஹார்மூஸ் ஜலசந்தியை ஈரான் மூடியது. மீறி செல்லும் கப்பல்கள் தாக்கப்படும் சூழல் காணப்படுகிறது.

இதனால், கப்பல்களில் பணியாற்றும் பல்வேறு நாடுகளை சேர்ந்த ஊழியர்கள் தாக்கப்படும் சம்பவங்களும் நடந்து வருகின்றன. இந்நிலையில், வளைகுடா பகுதிக்கான கூடுதல் செயலாளர் அசீம் மகாஜன் இன்று கூறும்போது, மேற்காசிய மோதலில் சிக்கி 5 இந்தியர்கள் பலியாகி உள்ளனர். ஒருவரை காணவில்லை என கூறினார். ஓமன், ஈராக் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள தூதரகங்களுடன் நாம் தொடர்ந்து தொடர்பில் உள்ளோம். காணாமல் போன இந்தியரை பற்றியும் மற்றும் உயிரிழந்த இந்தியர்களின் உடல்களை சொந்த நாட்டுக்கு திருப்பி கொண்டு வரவும், தேவையான முறையான நடவடிக்கைகளை முடிப்பதற்காக அதிகாரிகளுடன் தொடர்ந்து பேசி வருகிறோம் என்றார். இந்த பகுதியிலுள்ள கப்பல் பணியாளர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படுகின்றன என அவர் கூறியுள்ளார்.

## மதுபோதையில் தகராறு: மனைவி தூக்கில் தொங்கியதை சிரித்தபடி வீடியோ எடுத்த கணவர்

திருப்பதி, மார்ச் 16:

ஆந்திர மாநிலம் ஓங்கோலை சேர்ந்தவர் ஸ்ரீராம் ஸ்ரீனிவாசலு. இவர் ஒய்.எஸ்.ஆர் கடப்பா மாவட்டம். நந்தலூரு வில்ரெயில் எஞ்சின் டிரைவராக வேலை செய்து வருகிறார். இவரது மனைவி கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். இதனால் நந்தலூரு அடுத்த நாகிரெட்டி பள்ளியை சேர்ந்த கிருஷ்ணவேணி (வயது 30) என்பவரை கடந்த 2016- ஆண்டு காதலித்து திருமணம் செய்து கொண்டார். இந்த தம்பதிக்கு 2 ஆண் குழந்தைகள் உள்ளனர். தம்பதியினர் ராஜம்பேட்டை, போயனப்பள்ளியில் வாடகை வீட்டில் வசித்து சீனிவாசலு மதுப்பழக்கத்திற்கு அடிமையானதால் கணவன், மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டது. கணவன், மனைவி இடையே மீண்டும் தகராறு ஏற்பட்டது. அப்போது கிருஷ்ணவேணி கதவை உள்புறமாக பூட்டிக்கொண்டு மின்விசிறியில் சேலையால் தூக்கு மாட்டிக்கொள்ள முயன்றார். அறைக்கு வெளியே இருந்து இதனை பார்த்த சீனிவாசலு சிரித்தபடி சரியாக தூக்கில் தொங்கு என கூறியபடி மனைவி தற்கொலை செய்வதை தனது செல்போனில் வீடியோ பதிவு செய்தார். அப்போது நன்றாக தூக்கு மாட்டிக்க என தெரிவித்தார். மனைவி தன் கண்முன்னே தூக்கில் துடிதுடித்து தொங்குவதை கண்டும் அவரைக் காப்பாற்ற முன்வரவில்லை. கிருஷ்ணவேணி இறந்த பிறகு அக்கம் பக்கம் தனது மனைவி தூக்கில் தொங்குவதாக தெரிவித்தார். அக்கம் பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். ஆஸ்பத்திரியில் பரிசோதித்த டாக்டர்கள்' அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து சீனிவாசலுவை பிடித்து விசாரணை நடத்தினர் விசாரணையில் அவர் கடந்த 6 மாதங்களாக தற்கொலை செய்துகொள்வேன் என மிரட்டி வந்தார். தற்போதும் என்னை மிரட்டுவதற்காக தூக்கில் தூங்குவது போல் நடிக்கிறார் என நினைத்தேன். ஆனால் உண்மையிலேயே அவர் தூக்கில் தொங்கி இறந்து விட்டார் என தெரிவித்தார். போலீசார் அவரது செல்போனை பறிமுதல் செய்து பார்த்தபோது மனைவி தூக்கில் தொங்கு வதை மனிதாபிமானம் இன்றி வீடியோ எடுத்தது தெரிய வந்தது.

# சுயநலத்துக்காக இந்திய விவசாயத்தை அழிக்க தயாராகிவிட்டது மத்திய அரசு: ராகுல் காந்தி குற்றச்சாட்டு



புதுடெல்லி, மார்ச் 16:

மத்திய அரசு தனது சுயநலத்துக்காக இந்திய விவசாயத்தை பலி கொடுக்கத் தயாராகிவிட்டது என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக தனது 'ஃபேஸ்புக்' பக்கத்தில் அவர் சனிக்கிழமை வெளியிட்ட பதிவில், நாடாளுமன்றத்தில் தான் எழுப்பிய கேள்வியைப் பகிர்ந்துள்ளார். அதில், 'அமெரிக்காவுடன் மேற்கொள்ளப்படவுள்ள வர்த்தக ஒப்பந்தத்தால், இந்தியாவில் விவசாயிகளுக்கு வழங்குவதாக மத்திய அரசு உறுதியளித்துள்ள குறைந்தபட்ச ஆதரவு விலை பாதிக்கப்பட வாய்ப்புள்ளதா' என்றும், உற்பத்திச் செலவுடன் 50 சதவீதம் கூடுதலாக சேர்த்து குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயிப்பதாக கடந்த 2021-ஆம் ஆண்டு விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி இப்போதுவரை நிறைவேற்றப்படாதது ஏன்? என்றும் நான் கேள்வி எழுப்பியிருந்தேன். ஆனால், மத்திய அரசு இந்தக் கேள்விகளுக்கு நேரடியாகப் பதிலளிக்காமல், இப்போது உள்ள குறைந்தபட்ச ஆதரவு விலையையே மீண்டும் கூறியது.

மேலும், மாநில அரசுகள் அளித்து வந்த கூடுதல் ஊக்கத் தொகையை நிறுத்த வலியுறுத்தியதையும் மத்திய அரசு ஒப்புக்கொண்டது.

எவ்வித நியாயமும் இன்றி, இது தேசிய நலனுக்கு அளிக்கப்படும் முன்னுரிமை ன்று கூறி தங்கள் தவறை நியாயப்படுத்தவும் மத்திய அரசு முயன்றது.

மேலும், அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தத்தில் வர்த்தகமல்லாத தடைகளைக் குறைப்பது தொடர்பாக விவாதிக்கப்படுவது தொடர்பாகவும் முக்கிய கேள்விகளை எழுப்பினேன். ஏனெனில், இது குறைந்தபட்ச ஆதரவு விலை மற்றும் விவசாய உற்பத்திப் பொருள்களை அரசு கொள்முதல் செய்வதை நேரடியாகப் பாதிக்கக்கூடிய செயலாகும்.

இந்தக் கேள்விக்கும் மத்திய அரசு தெளிவான பதில் அளிக்காமல் தவிர்த்து வருகிறது. பிரதமர் மோடி தலைமையிலான அரசு விவசாயிகளுக்கு அளித்த வாக்குறுதிகளை மதிக்க மறுப்பதோடு, தங்களது சொந்த நலன்களுக்காக இந்திய விவசாயத்தையே அழிக்கத் தயாராகிவிட்டது.

விவசாயிகளின் உரிமைகளைப் பாதுகாக்கவும், குறைந்தபட்ச ஆதரவு விலை, அரசு கொள்முதலைத் தொடரவும் காங்கிரஸ் கட்சி நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியிலும் தொடர்ந்து குரல் எழுப்பும்' என்று ராகுல் காந்தி கூறியுள்ளார்.

# நேபாளத்தில் பஸ் விபத்து; தமிழகத்தில் இருந்து ஆன்மீக சுற்றுலா சென்ற 7 பேர் பலி




**காத்மண்டு, மார்ச் 16:**

நேபாளத்தின் கோர்கா மாவட்டத்தில், இந்தியாவை சேர்ந்த புனித யாத்ரீகர்கள் 14 பேர் உள்பட 16 பயணிகளுடன் பஸ் ஒன்று சென்று கொண்டிருந்தது. அவர்கள் அனைவரும் மனகாமன கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்து விட்டு பஸ்சில் திரும்பி கொண்டிருந்தனர்.

அப்போது, மலை பிரதேசத்தில் சென்று கொண்டிருந்த அந்த பஸ் சாஹித் லகான் என்ற கிராம பகுதியில் கந்தார் என்ற இடத்தில், 200 அடி ஆழ பள்ளத்தில் திடீரென கவிழ்ந்தது.

இந்த விபத்தில் பஸ்சில் பயணித்த 7 பேர் அந்த இடத்திலேயே பலியானார்கள். இவர்கள் தமிழகத்தில் இருந்து ஆன்மீக சுற்றுலாவுக்காக சென்றவர்கள் என தகவல் தெரிவிக்கின்றது.

அவர்களில் 2 பேர் பெண்கள். 5 பேர் ஆண்கள் ஆவர். இதுதவிர 7 பேர் காயமடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு அன்புகைரேனி பகுதியிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்தில் பஸ் ஓட்டுநர் காயம் எதுவுமின்றி தப்பி விட்டார். உதவியாளருக்கு காயங்கள் ஏற்பட்டு உள்ளன. விபத்து பற்றி விசாரணை நடந்து வருகிறது.

அந்த பஸ் தனஹுன் மாவட்டத்திலுள்ள அன்புகைரேனி பகுதியை நோக்கி சென்று கொண்டிருந்தது. 2024-ம் ஆண்டு ஆகஸ்டில் இதே அன்புகைரேனி பகுதியில் இந்தியாவை சேர்ந்த புனித யாத்ரீகர்கள் சென்ற பஸ் விபத்தில் சிக்கியதில் 27 பேர் பலியானார்கள்.


## துபாயில் தாயின் மருத்துவ கட்டணம் ரூ.1.25 கோடி: இந்தியா அழைத்து வர முடியாமல் தவிக்கும் தமிழர்



**துபாய், மார்ச் 16:**

தமிழகத்தைச் சேர்ந்தவர் திலக் குமார் அனிருத்ராஜ். இவரது மனைவி ஷாமினி ரமேஷ். தமிழகத்தைச் சேர்ந்த இவர்கள், வேலைக்காக 8 ஆண்டுகளுக்கு முன் துபாய் சென்றனர். இந்நிலையில், மகன் குடும்பத்தை பார்க்க திலக் குமாரின் தாய் துபாய் சென்றுள்ளார். அங்கு இவருக்கு பாக்டீரியா தொற்று ஏற்பட்டதால், துபாய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளார். இவரது மருத்துவ கட்டணம் ரூ.1.25 கோடியை தாண்டிவிட்டது. தினசரி மருத்துவ கட்டணம் ரூ.4 லட்சம் உயர்வதால் அவரால் மருத்துவ கட்டணத்தை செலுத்த முடியவில்லை. தனது தாயை இந்தியாவுக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளிக்க திலக் குமார் முடிவு செய்தார். ஆனால், ஆம்புலன்ஸ் விமானத்தில் இந்தியா அழைத்து வர ரூ.7 லட்சம் கட்டணம். ஆனால், தற்போதைய போர் சூழலில் ஆம்புலன்ஸ் விமான கட்டணமும் ரூ.50 லட்சமாகியுள்ளது. இதனால் துபாயில் உள்ள அறக்கட்டளையிடம் திலக் குடும்பத்தினர் உதவி கோரியுள்ளனர். இவர்களுக்கு நிதியுதவி கிடைத்தாலும், போர் சூழலில் ஆம்புலன்ஸ் விமானம் கிடைக்கும் வாய்ப்பு குறைவாக உள்ளது. இந்த சூழலை சமாளிப்பது, உணர்வு ரீதியாகவும், நிதி ரீதியாகவும் மிகவும் கடினமாக உள்ளது என்கிறார் ஷாமினி.

## ஐக்கிய அரபு அமீரக புஜாயிரா துறைமுகத்தின் மீது ஈரான் தாக்குதல்



**அபுதாபி, மார்ச் 16:**

ஐக்கிய அரபு அமீரகத்திலுள்ள புஜாயிரா துறைமுகத்தின் மீது ட்ரோன்கள் மூலம் ஈரான் கடும் தாக்குதல் நடத்தியுள்ளது. இதனால் அங்கு தீ கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. அணுசக்தி ஒப்பந்த விவகாரம் தொடர்பாக ஈரான் மீது அமெரிக்கா - இஸ்ரேல் இணைந்து கடந்த மாதம் 28-ம் தேதி தொடங்கிய போர் நேற்று 15-வது நாளாக நீடித்தது. இப்போரில் ஈரானின் ராணுவ தளங்கள், போர்க் கப்பல்கள், விமானங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டன. இதற்கு பதிலடியாக இஸ்ரேல் மற்றும் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க தளங்களை ஈரான் தாக்கி வருகிறது.

இதனிடையே உலகின் கச்சா எண்ணெய் போக்குவரத்தில் முக்கிய பாதையாக உள்ள ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கி உள்ளது. இதனால் கச்சா எண்ணெய், எரிவாயு விநியோகம் உலகளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த ஜலசந்தி வழியாக கப்பல் போக்குவரத்தை தடுக்கக் கூடாது என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இந்நிலையில் நேற்று ஐக்கிய அரபு அமீரகத்திலுள்ள புஜாயிரா துறைமுகத்தின் மீது ஈரான் படைகள் ட்ரோன்கள் மூலம் கடும் தாக்குதல் நடத்தின. துறைமுகம் மீது ட்ரோன்களால் ஈரான் படைகள் தாக்கியபோது அமெரிக்கப் படைகள் அந்த ட்ரோன்களை இடைமறித்துத் தாக்கின. இதன் காரணமாக கீழே விழுந்த ட்ரோன்களின் பாகங்களால் அங்கிருந்த எண்ணெய்க் கிடங்குகள் தீப்பிடித்து எரிந்தன. ஹார்முஸ் ஜலசந்திக்கு அருகே இந்த முக்கியமான புஜாயிரா துறைமுகம் அமைந்துள்ளது. இந்த துறைமுகத்தில் கப்பல்களுக்கு எண்ணெய் வகைகளை ஏற்றிக் கொண்டிருந்த போது இந்தத் தாக்குதல் நடந்துள்ளது என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த புஜாயிரா துறைமுகத்தின் வழியாகத்தான் ஹார்முஸ் ஜலசந்திக்கு கப்பல்கள் சென்று கொண்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## "உச்ச தலைவர் மொஜ்தபா காமேனிக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை" - ஈரான் வெளியுறவு அமைச்சர்



**தெஹ்ரான், மார்ச் 16:**

அமெரிக்க அதிபர் மற்றும் அதிகாரிகள், ஈரானின் புதிய உச்ச தலைவர் மொஜ்தபா காமேனி உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிவித்த நிலையில், அவருக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்று ஈரான் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேல் போரின் தொடக்கத்தில் நடந்த தாக்குதலில் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி கொல்லப்பட்ட பிறகு அவரின் மகன் மொஜ்தபா காமேனி அதிகாரத்திற்கு வந்தார். இந்த சூழலில், "வெள்ளிக்கிழமை நடந்த தாக்குதலில் மொஜ்தபா காமேனி காயமடைந்துள்ளார்; அநேகமாக அவரது முகம் சிதைந்திருக்கலாம்" என்று அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் பீட் ஹெக்ஸெத் கூறினார். இன்று தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்த அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், "ஈரானில் சமீபத்தில் உச்ச தலைவராகப் பொறுப்பேற்ற மொஜ்தபா காமேனி உயிருடன் இருக்கிறாரா என்பதே எனக்குத் தெரியவில்லை. இதுவரை, அவர் பொதுவெளியில் தோன்றவில்லை. அவரின் மரணம் குறித்த செய்திகள் தற்போது வெறும் வதந்தி மட்டுமே. அவர் உயிருடன் இல்லை என்று எனக்குத் தகவல்கள் வருகின்றன. ஒருவேளை அவர் உயிருடன் இருந்தால், அவர் தனது நாட்டிற்காக மிகவும் புத்திசாலித்தனமான ஒன்றைச் செய்ய வேண்டும்; அதுதான் சரணடைவது" என்று கூறினார்.

இந்த சூழலில், 'எம்எஸ் நவ்' ஊடகத்தைச் சேர்ந்த அய்மன் மொஹியேல்டியிடம் பேசிய ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி, "புதிய உச்ச தலைவருக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. அவர் நேற்று எங்களுக்கு தனது செய்தியை அனுப்பினார்; அவர் தனது கடமைகளைத் தொடர்ந்து ஆற்றுவார்" என்று தெரிவித்தார்.

## "ஈரான் புதிய உச்ச தலைவர் உயிருடன் இல்லை என தகவல் கிடைத்துள்ளது" - ட்ரம்ப்

**வாஷிங்டன், மார்ச் 16:**

மத்திய கிழக்கில் தீவிரமடைந்து வரும் மோதலில் உடனடி போர் நிறுத்தம் ஏற்பட வாய்ப்பு இல்லை எனத் தெரிவித்த அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், "ஈரானின் புதிய உச்ச தலைவர் மொஜ்தபா காமேனி உயிருடன் இல்லை என்று எனக்குத் தகவல் கிடைத்துள்ளது" என்று கூறினார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு ட்ரம்ப் அளித்த 30 நிமிட விரிவான தொலைபேசிப் பேட்டியில், "ஈரான் அமெரிக்காவுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ள விரும்புகிறது; ஆனால் அதன் விதிமுறைகள் இன்னும் போதுமானதாக இல்லாததால், நான் அந்த ஒப்பந்தத்தைச் செய்துகொள்ள விரும்பவில்லை. மேலும், எதிர்காலத்தில் எட்டப்படும் எந்தவொரு ஒப்பந்தமும் மிகவும் உறுதியானதாக இருக்க வேண்டும். அமைதி ஒப்பந்தத்திற்கான அந்த குறிப்பிட்ட நிபந்தனைகள் குறித்து நான் உங்களிடம் கூற விரும்பவில்லை. இருப்பினும், ஈரான் தனது அணுசக்தி திட்டங்களை முழுமையாகக் கைவிடுவது அந்த ஒப்பந்தத்தின் முதன்மையான அங்கமாக இருக்கும். ஈரானில் சமீபத்தில் உச்ச தலைவராகப் பொறுப்பேற்ற மொஜ்தபா காமேனி உயிருடன் இருக்கிறாரா என்பதே எனக்குத் தெரியவில்லை. இதுவரை, அவர் பொதுவெளியில் தோன்றவில்லை. அவரின் மரணம் குறித்த செய்திகள் தற்போது வெறும் வதந்தி மட்டுமே. அவர் உயிருடன் இல்லை என்று எனக்குத் தகவல்கள் வருகின்றன. ஒருவேளை அவர் உயிருடன் இருந்தால், அவர் தனது நாட்டிற்காக மிகவும் புத்திசாலித்தனமான ஒன்றைச் செய்ய வேண்டும்; அதுதான் 'சரணடைவது'" என்று கூறினார்.

மேலும், "ஈரானின் முக்கிய எண்ணெய் ஏற்றுமதி மையமான கார்க் தீவின் மீது அமெரிக்கப் படைகள் கடுமையான தாக்குதல்களை நடத்தியுள்ளன. இந்த நடவடிக்கை தீவை முற்றிலும் அழித்துவிட்டது. வேடிக்கைக்காக நாங்கள் அதை இன்னும் சில முறை தாக்கலாம். தற்போதைய சூழலில் ஈரானின் ராணுவத் திறன்கள் இன்னும் இரண்டு நாட்களுக்குள் முற்றிலும் அழிக்கப்படும். உலகளவில் கச்சா எண்ணெய் விலை அதிகரிப்பை எதிர்த்துப் போராட, ஹார்முஸ் ஜலசந்தியைப் பாதுகாக்க ஒரு சர்வதேச கூட்டணியை ஒருங்கிணைந்து வருகிறேன். ஈரானின் குண்டர்களால் பாதிக்கப்பட்ட பல நாடுகள் ஹார்முஸ் நீர்வழிப் பாதையில் போர்க்கப்பல்களை நிலைநிறுத்த அழைப்பு விடுத்துள்ளேன் என்றார்.

## போர் எதிரொலி! விமான சேவை குறைப்பு!

**நியூயார்க், மார்ச் 16:**

பாரசீக வளைகுடா நாடுகளில் நிலவும் போர்ச்சூழல் காரணமாக விமான சேவைகள் குறைக்கப்பட்டுள்ளன.

கடந்த பிப்.28 ஆம் தேதி ஈரான் - அமெரிக்கா, இஸ்ரேல் போர் தொடங்கிய நாள் முதலே வான்வழிப் போக்குவரத்து பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

இந்த நிலையில், ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது, ஐக்கிய அரபு அமீரகத்தின் பொது விமானப் போக்குவரத்து அதிகாரிகளின் அறிவுறுத்தலின்படி விமான அட்டவணைகளைத் திருத்தி குறைக்குமாறு விமான நிறுவனங்களுக்கு இந்திய தூதரகம் உத்தரவிட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட குறைந்த அளவிலான விமானங்கள் அபுதாபி, துபை, ராக், ஷார்ஜா, புஜைரா மற்றும் இந்தியா இடையே மட்டுமே இயக்கப்படும். மேலும், விமானம் கிடைப்பது குறித்த கூடுதல் விவரங்களுக்கு பயணிகள் அந்தந்த விமான நிறுவனங்களைத் தொடர்புகொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனிடையே, ஏர் இந்தியா நிறுவனம் இயக்கப்பட இருந்த பல விமானங்களை ரத்து செய்வதாக அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

## ஹோர்முஸ் நீரிணையில் அமெரிக்கா, இஸ்ரேல் தவிர மற்றவர்கள் செல்லலாம்: ஈரான்

**தெஹ்ரான், மார்ச் 16:**

ஹோர்முஸ் நீரிணை வழியே அமெரிக்கா, இஸ்ரேல் நாட்டுக் கப்பல்கள் தவிர, மற்ற நாடுகளின் கப்பல்களுக்கு அனுமதியில்லை என ஈரான் அறிவித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடனான போருக்கு மத்தியில் அந்நாட்டுக் கப்பல்கள் மற்றும் அவர்களின் நட்பு நாடுகளின் கப்பல்களுக்கு மட்டும் ஹோர்முஸ் நீரிணை வழியே அனுமதி இல்லை என ஈரான் அறிவித்துள்ளது.

மேலும், நீரிணை வழியே செல்வதற்கு மற்ற நாடுகளின் கப்பல்களுக்கு எந்தவித இடையூறும் இல்லை என்றும் ஈரான் கூறியுள்ளது. ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து தாக்குதல் நடத்தி வரும்நிலையில், ஈரானும் உரிய பதிலடி கொடுத்து வருகிறது. மேலும், இதன் ஒரு பகுதியாக, ஹோர்முஸ் நீரிணையையும் ஈரான் மூடியுள்ளது.

இந்த வழித்தடத்தில்தான், உலகளாவிய எண்ணெய் விநியோகத்தில் ஐந்தில் ஒரு பங்கு என்றளவில் நடைபெறுகிறது. ஹோர்முஸ் நீரிணை மூடப்படுவதாக ஈரான் அறிவித்த நிலையில், அவ்வழியாக வர்த்தகம் நாடுகள் தங்களின் போர்க் கப்பல்களை அனுப்பி அமெரிக்காவுக்கு உதவ வேண்டும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் வேண்டுகோளும் விடுத்துள்ளார்.

## ஈரான் போர்! மத்திய கிழக்கு நாடுகளில் 12ஆம் வகுப்பு தேர்வுகள் ரத்து: சிபிஎஸ்இ அறிவிப்பு



**தெஹ்ரான், மார்ச் 16:**

ஈரான் போர் காரணமாக மத்திய கிழக்கு நாடுகளில் 12ஆம் வகுப்புகளுக்கான தேர்வுகள் ரத்து செய்யப்படுவதாக மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் அறிவித்துள்ளது.

ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து தாக்குதல் நடத்தி வரும்நிலையில், ஈரானும் உரிய பதிலடி கொடுத்து வருகிறது. இதனால், மத்திய கிழக்கில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

இந்த நிலையில், பஹ்ரைன், ஈரான், குவைத், ஓமன், கத்தார், சௌதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளில் 12ஆம் வகுப்புகளுக்கான அனைத்து தேர்வுகளும் ரத்து செய்யப்படுவதாக மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (சிபிஎஸ்இ) அறிவித்துள்ளது.

முன்னதாக ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த தேர்வுகள் உள்பட மார்ச் 16 முதல் ஏப்ரல் 10 வரையில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த 12ஆம் வகுப்புகளுக்கான சிபிஎஸ்இ தேர்வுகள் அனைத்தும் ரத்து செய்யப்படுகிறது.

மேலும், தேர்வு முடிவுகள் எந்த முறையில் மதிப்பீடு செய்யப்படும் என்பது குறித்த அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் சிபிஎஸ்இ தெரிவித்துள்ளது.

## பிரதமர் நெதன்யாகு நன்றாக உள்ளார்: படுகொலை செய்தி பொய்யானது; இஸ்ரேல் அறிவிப்பு



**டெல்அவிவ், மார்ச் 16:**

ஈரான் மீது இஸ்ரேலும், அமெரிக்காவும் தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கு ஈரானும் பதிலடி கொடுத்து வருகிறது. இந்த நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சமீபத்திய தாக்குதலில் காயமடைந்து உள்ளார் என்றும் அவர் கொல்லப்பட்டு விட்டார் என்றும் மத்திய கிழக்கு பகுதியில் தகவல்கள் பரவின.

இதில், சமூக ஊடகத்தில் வெளியான புகைப்படம் ஒன்றில் நெதன்யாகு போன்ற முகம் கொண்ட நபர் ஒருவர் காயத்துடன், இடிபாடுகளுக்கு இடையே காணப்படுகிறார். அவருக்கு வீரர்கள் உதவிடும் காட்சி பதிவாகி உள்ளது.

அவர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அவர் காயமுற்றார் என்றும், இதுவே அவருடைய கடைசி புகைப்படம் என்றும் பலர் கூறினர். எனினும், இது ஏ.ஐ. உதவியுடன் உருவாக்கப்பட்ட காட்சியாக இருக்கலாம் அல்லது டிஜிட்டல் உதவியுடன் வடிவமைக்கப்பட்ட ஒன்றாக இருக்கக் கூடும் என்றும், தாக்குதலில் நெதன்யாகு காயமடைந்ததற்கான ஆய்வு செய்யப்பட்ட தகவல் எதுவும் வெளியாகவில்லை என்றும் கூறப்பட்டது.

சமூக ஊடக பயனாளர்கள் சிலர், போரின்போது அவர் கொல்லப்பட்டு விட்டார் அல்லது காணாமல் போய் விட்டார் என தகவல்களை பரப்பியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில், இஸ்ரேல் பிரதமர் அலுவலகத்திடம், நெதன்யாகு படுகொலை செய்யப்பட்டு விட்டார் என சமூக ஊடகங்களில் பரவி வரும் செய்திகள் தொடர்பாக செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். இதனை தொடர்ந்து இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் இன்று வெளியிட்ட செய்தியில், இது பொய்யான தகவல். பிரதமர் நெதன்யாகு நன்றாக உள்ளார் என பதிலளித்து உள்ளது.

சில ஊடக பயனாளர்கள் அது பொய்யான, ஏ.ஐ. உருவாக்கிய வீடியோ என குற்றச்சாட்டு கூறினர். ஏனெனில், பிரதமரின் வலது கையில் 6 விரல்கள் இருப்பது போன்று வீடியோவில் காட்சிகள் இருந்தன. அவர் கையை உயர்த்தும்போது, 6-வது விரல் இருப்பது போன்று தெரிந்த காட்சியால், அது ஏ.ஐ. உருவாக்கிய தவறால் ஏற்பட்டு உள்ளது என உறுதியாக கூறினர்.

எனினும், அமெரிக்காவை சேர்ந்த ஊடக விமர்சகரான கேண்டேஸ் ஓவன்ஸ் கூறும்போது, பீபீ என்ன ஆனார்? அவருடைய அலுவலகம் ஏன் பொய்யான ஏ.ஐ. வீடியோக்களை வெளியிட்டு, நீக்கி வருகிறது. வெள்ளை மாளிகையில் ஏன் பெரிய அளவில் பதற்றம் காணப்படுகிறது? என அவருடைய எக்ஸ் வலைதளத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.



# தமிழக சட்டப்பேரவைக்கு ஏப்.23ல் ஒரே கட்டமாக தேர்தல்

## உடனடியாக அமலுக்கு வந்த தேர்தல் நடத்தை விதிகள்

## ரூ.5 லட்சத்துக்கு மேல் ரூ.500 நோட்டுகளை வழங்கத் தடை

## உலகப் புகழ்பெற்ற மகாமகம் குளத்தில் கழிவு நீர் கலப்பு

## ஏப்.1-ந்தேதி முதல் பாஸ்டேக், சுங்கச்சாவடி கட்டணங்கள் உயர்வு.!


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 16.03.2026 திங்கட்கிழமை இலவச இ–பேப்பர்